விலை ரூபா 8.00

# உதயன்

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆனி 18 வெள்ளிக்கிழமை (02-07-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:220

## "நான் தான் ஈராக் ஜனாதிபதி" - நீதிமன்றில் சதாம் ஆவேசம்



ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் நேற்று பக்தாத் விசேட நீதிமன்றம் ஒன்றில் ஆஜர் செய்யப்பட்டார். பலத்த பாதுகாப்புடன் விலங்கிடப்பட்ட நிலையில் அங்கு கொண்டு வரப்பட்டார் சதாம். உற்சாகமாகக் காணப்பட்ட அவர், இன்னமும் தானே ஈராக்கின் அதிபர் என்று நீதிபதியிடம் ஆவேசத்துடன் தெரிவித்தார். விறைத்த முகபாவத்துடன் தோன்றிய அவர், கைகளை அசைத்து பல தடவை அமெரிக்க அதிபரைச் சாடினார். 'புஷ் ஒரு குற்றவாளி' என்று நீதிமன்றத்தில் கூறினார் சதாம். நீதி மன்றத்தில் சதாம் சாட்சியமளித்த போது அவரது தோற்றங்களையே படத்தில் காண்கிறீர்கள்.

### புரிந்துணர்வு ஒப்பந்த வாசகங்களுக்கு மாறாக

# ஆள்களை வைத்து அரசு கிழக்கில் இருண்ட யுத்தம்!

## விடுதலைப் புலிகளின் தலைமை கடுஞ்சீற்றம் அமைதி முயற்சிகளுக்கு ஆப்பு எனக் கருத்து

**யுத்தநிறுத்த ஒப்பந்த வாசகங்களுக்கு முரணாக - தனது துணைப்படையினர் போன்று சிலரைப் பதிலாள்களாக வைத்து - புலிகளுக்கு எதிரான இருண்ட யுத்தம் ஒன்றை (War by Proxy) இலங்கை அரசுத் தரப்பும், அதன் படைகளும் நடத்தி வருகின்றன.**

**- இப்படிக் கருதும் விடுதலைப் புலிகளின் தலைமை, அதனால் கடுஞ் சீற்றமும் அடைந்திருக்கின்றது.**

**அமைதி முயற்சிக்கு ஆப்பு வைக்கும் நடவடிக்கை இது என்று புலிகளின் தலைமை கருதுவதாகவும் தெரியவருகின்றது.**

அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி ஆயுதம் தரித்த தமிழ்க் குழுக்களோ, துணைப்படையினரோ வடக்கு - கிழக்கில் இயங்க முடியாது.

இதனைப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் வாசகம் 1.8 தெளிவாகத் தெரிவிக்கின்றது. ஆனால், அந்த ஏற்பாட்டைப் புறம் ஒதுக்கிவிட்டு, இலங்கை அரசுப் படைகளின் புலனாய்வுப்பிரிவு பெரும் துணைப்படை அணி ஒன்றையே கிழக்கில் இயக்கிவருவது பற்றிய முழுவிவரங்களும் விடுதலைப் புலிகளின் தலைமைக்கு விரமாகத்

(16ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் சிறையிலிருந்து நேற்று 6இந்திய மீனவர்கள் தப்பினர்!

### உடனடியாகவே ஒருவர் கைதானார்

யாழ்ப்பாணம்,ஜூலை2

மன்னார் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஆறு இந்திய மீனவர்கள் நேற்றுத் தப்பிச்சென்றுள்ளனர்.

இவர்களில் ஒருவர் பள்ளிமுனைப் பகுதியில் வைத்து உடனடியாகவே கைது செய்யப்பட்டார்.

நேற்றுமுன்தினம் அனுராதபுரம் சிறைச்சாலையில் இருந்து இக்கைதிகள் நீதிமன்ற விசாரணைக்காக அழைத்துவரப்பட்டு மன்னார் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அச்சமயம் மின்சாரம் தடைப்பட்ட நேரம்பார்த்து இவர்கள் சிறைச்சாலையிலிருந்து தப்பிவிட்டனர் என்று கூறப்படுகிறது.

தப்பிச்சென்ற ஏனைய ஐந்து பேரையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகளில் மன்னார் சிறைச்சாலை அதிகாரிகளும் மன்னார் பொலீஸாரும் ஈடுபட்டுள்ளனர் என்று சிறைச்சாலைப் பொறுப்பதிகாரி வின்சன்சேவியர் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்ட கைதி நேற்று மன்னார் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். அவரை எதிர்வரும் 17 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிவான் எம்.எச்.எம் அப்துல்லா உத்தரவிட்டார். (ஜ-9-7)

# கருணாவோடு படையினர் சேர்ந்து இயங்குகின்றனரா? இல்லையென அடியோடு மறுக்கின்றார் ஜனாதிபதி!

### நேற்று சொல்ஹெய்மிடம் நேரில் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை2

கிழக்கில் கருணா குழுவுக்கு ஆதரவாக இலங்கை இராணுவம் செயற்படுவதற்கு அரசு அங்கீகாரம் அளித்துள்ளது என்ற சாரப்பட விடுதலைப் புலிகள் பகிரங்கமாக சுமத்தியிருக்கும் குற்றச்சாட்டை ஜனாதிபதி நிராகரித்திருக்கின்றார்.

லெப்டினன்ட் ஜெனரல் சாந்த கொட்டேகொடவின் கட்டளையின் கீழ் இலங்கை இராணுவம் தொடர்ந்தும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை கடைப்பிடிக்கும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

-இவ்வாறு ஜனாதிபதி செயலகம் நேற்று விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோர்வே அனுசரணைக் குழு நேற்று முற்பகல் ஜனாதிபதியைச் சந்தித்தமை தொடர்பாக 'கிளிநொச்சி விஜயம் தொடர்பாக சொல்ஹெய்ம் ஜனாதிபதிக்கு விளக்கினார்' என்ற தலைப்பில் இந்தச் செய்திக் குறிப்பை ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு பணிப்பாளர் நாயகம் வெளியிட்டிருந்தார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:-.

இலங்கை சமாதான நடவடிக்கை தொடர்பான நோர்வே அனுசரணைப் பணியை ஒட்டி விசேட ஆலோசகர் எரிக்சொல்ஹெய்மை ஜனாதிபதி நேற்று ஜனாதிபதி செயலகத்தில் வரவேற்றார்.

தமது கிளிநொச்சி விஜயம் குறித்தும், அங்கு புலிகளின் அரசியல் பிரிவுத்தலைவர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் தாம் நடத்திய பேச்சுக்கள் குறித்தும் ஜனாதிபதிக்கு சொல்ஹெய்ம் விளக்கினார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## 8 முன்னாள் அமைச்சர்கள் விரைவில் கைதாவார்களாம்

கொழும்பு,ஜூலை2

முன்னாள் அமைச்சர்கள் எட்டுப் பேருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இவர்கள் தொடர்பான ஆவணங்கள் அனைத்தும் பொலீஸ்மா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. பொலீஸ் விசாரணைகளின் பின் அவர்களும் கைதுசெய்யப்படுவார்கள் என அமைச்சரவைப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் கரும்புலிகள் தின நினைவுப்பந்தல்

தென்மராட்சி,ஜூலை2

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு 261 கரும்புலிகளின் திருவுருவப்படம் பொறிக்கப்பட்ட பெரும் நினைவுப்பந்தல் ஒன்று சாவகச்சேரியில் அமைக்கப்படவிருக்கிறது.

அங்கு ஜூலை 5ஆம் திகதி கரும்புலிகள் தின பிரதான நிகழ்வுகள் இடம்பெறும். நினைவுரைகள், சிறப்புரைகள் என்பனவும் இதில் இடம் பெறும். (ஜ-4-117)

## இளையோர் விளையாட்டு விழாவில் பிரமாண்டமான வாணவேடிக்கை

### யாழ்நகரில் நாளையும், நாளை மறுதினமும்

யாழ்ப்பாணம்,ஜூலை2

தமிழீழ இளையோர் தேசியத் தடகள விளையாட்டு விழாவையொட்டி நாளையும் நாளை மறுதினமும் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் பிரமாண்டமான வாண வேடிக்கை இடம் பெறவுள்ளது. சுமார் 25 வருடங்களின் பின்னர் குடாநாட்டில் வாணவேடிக்கை நிகழ்வு பெரிய அளவில் இடம்பெறவுள்ளது.

கரும்புலிகள் தினத்தையொட்டி

(16ஆம் பக்கம் பார்க்க)

கரும்புலிகள் நாளை முன்னிட்டு
தமிழீழ விளையாட்டுத்துறை நடத்தும்
1ஆவது தமிழீழ இளையோர்
தேசிய தடகள போட்டி
03ஆம், 04ஆம் 7-2004 திகதிகளில்
காலை 8.30 தொடக்கம்
யாழ். பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.
(C/35969/22)

## அதி ர் நியமனத்துக்கு ஆட்சேபம்:

# பா சாலை மாணவர்கள் வீதியில் இறங்கி மறியல்

தென்மராட்சி,ஜூலை2

மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்தில் நேற்றுமுதல் புதிதாக நியமிக்கப்பட்ட அதிபரைப் பதவி ஏற்கக்கூடாது என்றுகோரி நேற்றுக் காலை பாடசாலை முன்பாக மறியல் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

வேறொரு பாடசாலையில் இருந்து இந்தப் பாடசாலைக்கு இடம்மாற்றம் பெற்றுவந்த அதிபர், பதவி ஏற்கக்கூடாது என்று கோரியும் -

பாடசாலையில் ஏற்கனவே உப அதிபராக கடமைபுரிபவரை அதிபராக நியமிக்கவேண்டும் என்று வலியுறுத்தியும் இந்த மறியல் போராட்டம் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கோரிக்கைகள் அடங்கிய சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு பாடசாலைக்கு முன்பாக உள்ள டச்சு வீதியில் மாணவர்கள் மறியலில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இதனால், அந்த வீதியூடான போக்குவர்த்து சிறிதுநேரம் ஸ்தம்பிதமடைந்திருந்தது. மாணவர்களின் இந்தப் போராட்டத்துக்குப் பெற்றோர் மற்றும் பாடசாலை சமூகத்தினரும் ஆதரவு வழங்கினர் என்று கூறப்பட்டது.

மறியல் போராட்டத்தின் முடிவில் தென்மராட்சி வலயக் கல்விப்பணிமனைக்கு மகஜர் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டது. (ஐ-4-31-117)



மறியல் போராட்டத்தில் மாணவர்கள்

# குறியீடுகள் அகற்றப்படுவதால் மிதிவெடி அகற்றும் பணி பாதிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை2

யாழ். குடாநாட்டில் மிதிவெடிகள் அகற்றும் பணி இடம்பெறும் பகுதிகளை அடையாளப்படுத்தக் கட்டப்படும் அடையாளப்பட்டிகள் மற்றும் எச்சரிக்கைப் பலகைகளை விசமிகள் சேதமாக்கியும், அப்புறப்படுத்தியும் வருகின்றனர். இதனால் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.

மிதிவெடி அகற்றும் பணிகள் யாழ் குடாநாட்டில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

மிதிவெடி அகற்றப்பட்ட பகுதியை மிதிவெடி அகற்றப்படாத பகுதியிலிருந்து வேறுபடுத்துவதற்காகப் பட்டிகள் மற்றும் குறியீடுகள் வைக்கப்படுகின்றன. இவற்றை விசமிகள் யாருமற்ற நேரத்தில் அகற்றி விடுகின்றனர். இதனால் மிதிவெடி அகற்றப்பட்ட பகுதியில் மீண்டும் மிதிவெடி அகற்றும் பணி மேற்கொள்ள வேண்டி உள்ளது. இதனால் வீணான காலதாமதங்கள் ஏற்படுகின்றன. (ஒ-12)

# நவாலி வை.எம்.சி.ஏ வீதி புனரமைக்க நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,ஜூலை2

நவாலி வை.எம்.சி.ஏ வீதி 10 லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

இதற்கான நிதியை புனர்வாழ்வு, புனரமைப்பு நல்லிணக்க அமைச்சு ஒதுக்கியுள்ளது.

வீதிப் புனரமைப்பு வேலைகளுக்கான மதிப்பீட்டை வலி.தென்மேற்கு பிரதேச சபையின் திட்டமிடல் பிரிவு மேற்கொண்டுள்ளது.

இதேவேளை, மிகவும் சேதமடைந்த நிலையில் உள்ள நவாலி கலையரசு சொர்ணலிங்கம் வீதி, நவாலி நாச்சிமார் வீதி என்பன நீண்டகாலமாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் உள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (8-185)

# மயோனின் தனிக்கட்சி குறித்த கூட்டம் இன்று சாய்ந்தமருதில்!

கொழும்பு,ஜூலை2

ஐக்கியதேசியக் கட்சியினால் தேசியப்பட்டியல் எம்.பியாக நியமிக்கப்பட்டிருக்கின்ற மயோன் முஸ்தபாவின் தனிக்கட்சி ஆரம்பிக்கும் திட்டம் தொடர்பான கூட்டம் முன்னர் அறிவிக்கப்பட்டபடி இன்று சாய்ந்தமருதில் நடைபெறுகிறது.

தான் எம்.பியாக நியமிக்கப்படுவதற்கு முன்னரே இக்கூட்டத்திற்கான திகதி நிர்ணயிக்கப்பட்டிருந்தது என்றும் -

அதன் பிரகாரமே தனிக்கட்சி தொடர்பான கூட்டம் நடத்தப்படுகிறது என்றும் - மயோன் முஸ்தபா தெரிவித்தார்.

"வடக்கு - கிழக்கு முஸ்லிம்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக சமூக சிந்தனையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், புத்திஜீவிகள், உலமாக்கள், தொழில்வல்லுநர்கள் என சகல தரப்பினரையும் கூட்டிணைத்து பலம்மிக்க மாற்று அரசியல் கட்சியொன்றை ஸ்தாபிப்பதற்கான தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பான உயர்மட்டக் கூட்டங்கள் பல, கொழும்பிலும், கல்முனையிலும் நடத்தப்பட்டிருக்கின்றன. இனி புதுக்கட்சி தொடர்பாக மக்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டங்கள் நடத்தப்படும், முதற்கட்டமாக அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் இக்கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன" எனவும் அவர் கூறினார்.

"எம்.பி. பதவி பற்றி நான் அலட்டிக்கொள்ளவில்லை. அதனை ஏற்றுக்கொள்வது தொடர்பில் இன்னும் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை. மக்களின் கோரிக்கையை நிராகரிக்கமுடியாதபோதிலும், நிதானமாக யோசித்தே முடிவெடுக்க வேண்டியுள்ளது" - என மயோன் முஸ்தபா மேலும் சொன்னார். (க-9)

# இசைநாடக விழாவில் இன்று

திருமறைக் கலாமன்றம் நடத்தும் இசை நாடக விழாவில் இன்றைய தினம் இரண்டு இசைநாடகங்கள் மேடையேற்றப்படவுள்ளன.

இன்று இரவு 7மணிக்கு கலா மன்ற அரங்கில் இந்த இசைநாடகங்கள் அளிக்கை செய்யப்படவுள்ளன.

நாட்டார் வழக்கியற் கழகம் வழங்கும் 'ஸ்ரீவள்ளி', யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இசைநாடக முன்னணிக் கலைஞர்கள் ஒன்றிணைந்து வழங்கும் 'சத்தியவான் சாவித்திரி' ஆகியனவே இனறு இடம்பெறவுள்ளன. (மற்றொரு செய்தி 3ஆம் பக்கத்தில்) (9)

## இரு விபத்துக்களில் மூவர் படுகாயம்!

இணுவிலில் நேற்றுக்காலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்-சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற கோண்டாவிலைச்சேர்ந்த மாட்டீன் குகதாஸ் (வயது22) என்பவரும் சைக்கிளில் சென்றவரான நவக்கிரி நிலாவரையைச் சேர்ந்த ஐயம்பிள்ளை சவுந்தரராஜன் (வயது 39) என்பவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

இருவரும் யாழ். போதனாவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை -

கோண்டாவில் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 3மணிக்கு இடம்பெற்ற லான்ட்மாஸ்டர் - சைக்கிள் விபத்தில்-

யாழ் பல்கலைக்கழக நுண்கலைப்பீட முதலாம் வருட மாணவியான - சாவகச்சேரி மட்டுவிலைச்சேர்ந்த - கஜேந்திரநாதன் பகீரதி (வயது 22) என்பவர் படுகாயமடைந்தார்.

இவரும் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (4-12-15)

## பொதுக்கூட்டம்

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கல்லூரி நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் அதிபர் பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ-4-73)

## பொங்கல் விழா

நீர்வேலி தெற்கு அம்மன் ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு விஷேட அபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறும். (ஐ-4-17)

## இலங்கை வங்கியில் நிரந்தர நியமனம் கோ

# சத்தியாக்கிரகம் மேற்கொண்ட பட்டதாரிகள் விரட்டியடிப்பு!

கொழும்பு,ஜூலை2

கொழும்பில் பட்டதாரி சத்தியாக்கிரகிகள் மீது பொலீஸார் நேற்று கண்மூடித்தனமாக தடியடிப்பிரயோகம் செய்து அவர்களை ஓட ஓட விரட்டினர். நகர மறுத்த ஐந்து பேர் கோட்டைப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். எனினும், தொடர்ந்து சத்தியாக்கிரகம் நடைபெறுகின்றது.

'தருண அருண' திட்டத்தின்கீழ் இலங்கை வங்கிக் கிளைகளில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி அவர்கள் திங்கட்கிழமை முதல் கொழும்பு கோட்டை இலங்கை வங்கியின் தலைமை அலுவலகத்துக்கு முன்னால் அமர்ந்து சத்தியாக்கிரகம் செய்து வருகின்றனர்.

நேற்று நண்பகல் திடீரென சத்தியாக்கிரகிகளை சுற்றிவளைத்த பொலீஸார் அவர்கள் மீது தடியடிப் பிரயோகம் செய்து அவர்களை அங்கிருந்து விரட்டினர். இத்தாக்குதலின்போது பல பெண்கள் பலத்த இம்சைக்கு உள்ளாகி ஓலமிட்டு ஓடியதைக் காணக்கூடியதாகவிருந்தது. தாக்குதலால் நாலாபுறமும் சிதறி ஓடிய சத்தியாக்கிரகிகள் அங்கு விட்டுச் சென்ற உடமைகள், அவர்கள் தாங்கியிருந்த பதாதைகள் என்பன பொலீஸாரால் எடுத்துச்செல்லப்பட்டன.

பலத்த குண்டாந்தடிப் பிரயோகத்துக்கு உள்ளாகிய சத்தியாக்கிரகிகள் பின்னர் லேக் ஹவுஸுக்கு முன்னால் உள்ள பௌத்த விகாரைக்கு முன்பு ஒன்று கூடி அங்கு அமர்ந்திருந்து தமது சத்தியாக்கிரகத்தைத் தொடர்கின்றனர்.

நேற்று மாலை பொலீஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகள் மற்றும் தண்ணீரைப் பீய்ச்சடிக்கும் பௌசர்கள் என்பவற்றுடன் சத்தியாக்கிரகிகளைச் சுற்றி வளைத்திருந்தனர்.

ஆனால், சத்தியாக்கிரகிகள் தமது போராட்டத்தை கைவிடப்போவதில்லை என கோஷமிட்டனர்.

இலங்கை வங்கிக் கிளைகளில் ஏற்கனவே சேர்த்துக்கொள்ளப்பட்ட இந்தப் பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படாத நிலையில், புதிதாக 1,500 பேருக்கு அங்கு நியமனம் வழங்க அரசு முன்வந்திருப்பதை சத்தியாக்கிரகிகள் கண்டித்துள்ளனர். (க-9)

## தடகள அலுவலர்களுக்கு!

யாழ்ப்பாணம்,ஜூலை2

தமிழீழ இளையோர் தேசிய தடகள விளையாட்டுப் போட்டிக்கு கடமையாற்றவுள்ள யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்கள் அனைவரையும் நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ் பொது விளையாட்டு மைதானத்திற்கு (துரையப்பா விளையாட்டரங்கு) சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தடகள விளையாட்டுப் போட்டி நாளை சனிக்கிழமையும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் யாழ்.பொது விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. (ஐ-9)

# 114 எம்.பிக்களின் ஆதரவு இருந்தால் ரணிலே ஆட்சி அமைக்கட்டுமே!

## சவால் விடுக்கின்றார் ஜே.வி.பி.அமைச்சர்

கொழும்பு,ஜூலை2

ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாடாளுமன்றத்தில் 114 உறுப்பினர்களின் ஆதரவு இருக்குமானால் அந்தப் பெரும்பான்மையைக்காட்டி ஆட்சிப் பொறுப்பை அவரே கையேற்கட்டும். நாங்கள் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து செயற்படத் தயார். இதற்கு ரணில் விக்கிரமசிங்க தயாரா?- எனப் பகிரங்கமாகச் சவால் விடுக்கின்றார் ஜே.வி.பியைச் சேர்ந்த காணி, விவசாய, கால்நடை அபிவிருத்தி அமைச்சர் அனுர திஸாநாயக்க.

நேற்று அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அனுர திஸாநாயக்க இப்படிச் சவால் விடுத்தார்.

எங்களுடைய கூட்டு அரசாங்கத்தின் உருப்படியான செயல்திட்டங்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளன. அவரது சகாக்களின் ஊழல் மோசடிகள் ஒவ்வொன்றாக வெளிப்பட ஆரம்பித்ததும் அவருக்கு ஒரு கலக்கம் ஏற்பட்டுள்ளது என்பதுதான் உண்மை.

நாடாளுமன்றம் ஒவ்வொரு மாதத்திலும் முதல் வாரத்திலும், கடைசி வாரத்திலும் கூடவேண்டும் என்பது நியதி. ஆனால், கடந்த கூட்டத் தொடரின் போது ஏற்பட்ட அசம்பாவிதங்களைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் கூடிப் பேசிய போது மாகாணசபைத் தேர்தலின் பின் மீண்டும் நாடாளுமன்றத்தைக் கூட்டுவதென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி தேர்தலின் பின் வரும் மூன்றாவது வாரத்தில் 20ஆம் திகதி நாடாளுமன்றம் கூட்டப்படவேண்டும். அதில் எந்த மாற்றமும் இல்லை.

இந்த மரபுக்கு மீறி இடைநடுவில் நாடாளுமன்றத்தைக் கூட்டும்படி 114 உறுப்பினர்கள் சபாநாயகரிடம் கடிதம் கொடுத்திருப்பது வேடிக்கையானது என்றும்-அமைச்சர் அனுர திஸாநாயக்க கூறினார்.

இதேவேளை, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் கூறுகின்றார். அப்படியானால் அவர் பெரும்பான்மையைக்காட்டி ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டியது தானே! அதற்கு ஏன் தயங்குகின்றார்?

அரசாங்கத்திற்கு சிஹல உறுமயவின் ஓர் உறுப்பினரோடு சேர்ந்து 107 பேரின் ஆதரவுண்டு.

எதிர்க்கட்சித் தலைவர் கூறுவது போல 114 பேர் அவருக்கு ஆதரவாகக் கையெழுத்திட்டுள்ளனர் என்பது நம்பமுடியாத ஒரு விடயம்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் 22 உறுப்பினர்களும் ஒட்டுமொத்தமாக ஒப்பம் வைத்திருக்கலாம். ஆனால், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் எல்லோரும் அதில் கையெழுத்திட்டுள்ளனரா?- என்றும்அமைச்சர் அனுர திஸாநாயக்க கேள்வி எழுப்பினார்.

மேலும் ஐ.தே.க. ஆட்சிக்கு வந்தவுடன் 100 நாளகளில் பட்டதாரிகளுக்கு வேலை வழங்குவோம் என்று கூறியது. இரண்டு வருடங்களாகியும் ஒரு நியமனத்தையும் வழங்கவில்லை. மூன்று மாதங்களுக்குள் நாம் தொழில் வாய்ப்புக்களை வழங்கவில்லை என்று அவர்கள் குற்றம் சுமத்துவது வேடிக்கையானது.

நாட்டில் தவறான பிரசாரங்களை மேற்கொண்டு, மக்களைக் குழப்பியடிப்பதை எதிர்க்கட்சிகள் கைவிட வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் 114 உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவு தனக்கு இருப்பதாக மீண்டும் மீண்டும் ஒரே பல்லவியைப் பாடுகின்றார். தைரியம் இருந்தால் ஆட்சிப்பொறுப்பை அவர் ஏற்கட்டும். நாங்கள் எதிர்க்கட்சியாகச் செயற்படத் தயார் என்றும் அமைச்சர் அனுர திஸாநாயக்க கூறினார்.(ஐ-க)

## வட்டக்கச்சி இளைஞன் இந்தியாவில் மரணம்

யாழ்ப்பாணம்,ஜூலை2

வட்டக்கச்சியைச் சேர்ந்த சச்சிதானந்தசிவம் ஞானசீலன் என்பவர் இந்தியாவில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார்.



இவரது சகோதரரான ச.இராகுலன் ஆஸ்திரேலியாவிலிருந்து இந்தியா வந்திருந்தார். அவரைப்பார்ப்பதற்காக அவரது பெற்றோரும், சகோதரரும் இந்தியா சென்றிருந்தனர்.

அங்கு சச்சிதானந்தம், அவரது மனைவி, மகன்களான ராகுலன், ஞானசீலன் ஆகியோர் வாகனம் ஒன்றில் பயணித்தனர் என்றும் -

அந்த வாகனம் விபத்துக்குள்ளானதில் ஞானசீலன் உயிரிழந்தார் என்றும் -

மற்றைய மூவரும் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்றும் -

உறவினர்கள் தெரிவித்தனர்.(ஐ-ஓ)

## அலங்காரத் திருவிழா

அரியாலை,ஜூலை2

யாழ். ஈச்சமோட்டை கலட்டிப் 'புலம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்காரத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு விசேட அபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறும். இரவு 8மணிக்கு சுவாமி வீதிவலம் வருதல் இடம்பெறும்.

தொடர்ந்து பதினைந்து நாள்கள் திருவிழா இடம்பெறும். (ஐ-4-17)

# சமகாலக் கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம்,ஜூலை2

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர் நடத்தும் சமகால அரசியல் கருத்தரங்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மூன்று இடங்களில் நடைபெறவுள்ளது.

முற்பகல் 10 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் 'தாயக விடுதலைப் போராட்டத்தில் பண்பாட்டுச் செயற்பாட்டின் பங்கு' எனும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் கலாநிதி க.சிதம்பரநாதனும் -

பிற்பகல் 4மணிக்கு திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தில் 'யுத்த நிறுத்தத்தின் பின்னான தமிழ் மக்களின் சமூக பொருளாதார மாற்றங்கள்' எனும் தலைப்பில் பிரபல ஆசிரியர் எஸ்.வரதராஜனும் கருத்துரையாற்றுவர்.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் இன்று பிற்பகல் 3மணிக்கு நடைபெறவுள்ள கருத்தரங்கில் 'தொல்லியல் நோக்கில் ஈழத்தின் தமிழ் அரச உருவாக்கம்' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறையைச் சேர்ந்த கலாநிதி ப.புஸ்பரட்ணம் கருத்துரை வழங்குவார். (4-13)

உதயன்

# இருண்ட யுத்தத்தால் இருளும் எதிர்காலம்

கிழக்கில் முகந்தெரியாத ஆள்களை - பதிலாள்களை - வைத்து விடுதலைப் புலிகளுக்கு எதிராக இருண்ட யுத்தம் ஒன்றை (Proxy War) அரசுப் படைகளும் அவற்றின் புலனாய்வுப் பிரிவினரும் நடத்தி வருவது புலிகளைச் சீற்றமடைய வைத்திருக்கின்றது.

அரசுக்கும் புலிகள் இயக்கத்துக்கும் இடையிலான யுத்த நிறுத்தத்துக்கு வழிசெய்வது புரிந்துணர்வு ஒப்பந்தம். அதன் வாசகங்களுக்கு மாறான விதத்தில் இத்தகைய ஒளிவு - மறைவு யுத்தம் கிழக்கில் அரங்கேறிக் கொண்டிருக்கின்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் வாசகம் 1.8, *'துணைப் படைகள் வடக்கு - கிழக்கில் இயங்கக் கூடாது'* என்று தெரிவிக்கின்றது. அதனை மீறும் விதத்தில் ஒரு புலனாய்வு வலையமைப்பை வைத்து இருண்ட யுத்தத்தை அரசுத் தரப்பு முன்னெடுப்பது ஒருபுறமிருக்க, அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 'அடிப்படை முன்னுரை'யையே மீறும் செயல்கள் நடந்தேறுவதுதான் மிக மோசமானதாகும்.

*"புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சீரிய நோக்கங்களைப் பலவீனப்படுத்தும் அல்லது இந்த ஒப்பந்தத்தின் அடிநாதத்தை மீறும் நடவடிக்கைகளைத் தவிர்த்து, ஒப்பந்த சரத்துக்களில் குறிப்பிட்டுச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் - நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் - நடவடிக்கைகளைச் செயற்படுத்தும் விதத்தில் ஒரு யுத்தநிறுத்தம் செய்வதற்கு இரு தரப்பினரும் இணங்கியுள்ளனர்"* - என்று புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முன்னுரை கூறுகின்றது.

ஆனால், நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் செயற்பாட்டுக்குப் பதிலாக, நம்பிக்கையைக் கெடுத்து நிலைமையை மோசமாக்கும் விதத்தில் விடயங்களைக் கையாள்கின்றது சந்திரிகா அரசு. அதற்கு கருணா விவகாரம் நல்லதோர் எடுத்துக்காட்டு.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மற்றுமோர் அம்சமும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஒப்பந்தத்தின் 1.2 பிரிவின் கீழ் 'இராணுவ நடவடிக்கைகள்' என்ற தலைப்பில் வரையறுக்கப்பட்ட விடயமே அது.

*"எத்தரப்பினரும் எந்தவிதமான வலிந்து தாக்கும் இராணுவ நடவடிக்கைகளிலும் ஈடுபடலாகாது. அதனை நிறைவேற்றச் சகலவிதமான இராணுவ நடவடிக்கைகளும் நிறுத்தப்படுதல் அவசியம்"* - என்று அப்பிரிவு கூறுகின்றது.

அது மட்டுமல்ல, அந்த 'இராணுவ நடவடிக்கைகள்' என்ற சொல்லுக்கு அந்த ஒப்பந்த வாசகம் ஒரு விளக்கத்தையும் - வியாக்கியானத்தையும் - கொடுக்கின்றது. அதுதான் அவதானிக்கப்பட வேண்டியது.

*"நேரடியான, மறைமுகமான துப்பாக்கிச் சூடுகள், திடீர்த் தாக்குதல்கள், பதுங்கித் தாக்குதல்கள், படுகொலைகள், ஆள்கடத்தல்கள், பொதுமக்களின் அல்லது இராணுவச் சொத்துக்களை அழித்தல், நாசவேலைகள, தற்கொலைத் தாக்குதல்கள், ஆழ ஊடுருவும் அணிகள்ால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள், விமானக் குண்டு வீச்சுகள், கடல் வழி வலிந்த தாக்குதல் என்பவை இராணுவ நடவடிக்கைகள். என்றாலும், இந்தச் செயல்களை மட்டும் உள்ளடக்கி அவற்றுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதல்ல இராணுவ நடவடிக்கைகள்"* - என்று வியாக்கியானம் கூறுகின்றது இந்த ஒப்பந்த வாசகம்.

*'இந்தச் செயல்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதல்ல'* - என்ற கூற்றின் மூலம் அந்த வாசகம் விளங்கப்படுத்த முயல்கின்ற அம்சம்தான், 'இருண்ட யுத்தமாக' - ஒளிவு மறைவுப் போராக - இப்போது கிழக்கில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது; அரசுப் படைகளால் அந்தரங்கமாக அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதற்குக் கருணா என்ற துரும்புச் சீட்டுப் பயன்படுகின்றது.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை கருணா, இயக்கத்தை விட்டு ஓடியவர் (Deserter).

வழக்கமாக, இராணுவத்தை விட்டு ஓடியவர்கள் பலர் புலிகளின் பிரதேசத்துக்குள் தஞ்சம் புகும்போது புலிகள் என்ன செய்கிறார்கள்? யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் ஊடாக அவர்களை அரசுத் தரப்பிடம்தானே மீள ஒப்படைக்கிறார்கள்! இந்த இரண்டரை ஆண்டு கால யுத்தநிறுத்த காலத்தில் அதற்குப் பல உதாரணங்களைக் காட்டலாம்.

கருணா விடயத்திலும் அதைத்தானே அரசுத் தரப்பு செய்திருக்க வேண்டும்! ஆனால், அதைவிடுத்து, தான் கிழக்கில் முன்னெடுக்கும் இருண்ட யுத்தத்துக்கு - பதிலாள்கள் மூலமான ஒளிவுமறைவுப் போருக்கு - கருணாவைப் பயன்படுத்த முயல்கிறது அரசு. அவருக்குப் புகலிடம் கொடுத்து, அவரைப் பயன்படுத்தி, புலிகளைப் பலவீனப்படுப்படுத்த எத்தனிக்கிறது அரசுப்படை. அவருக்குத் தனிக்கட்சி அமைக்கும் அந்தஸ்தை வழங்கி அவரை ஒரு சக்தியாக்கி தமிழரைப் பலவீனப்படுத்தவும் திட்டம் தீட்டப்படுகின்றது.

*"இராணுவ நடவடிக்கை என்ற பதம் இந்தச் செயல்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதல்ல"* என்ற சாரப்பட யுத்தநிறுத்த வாசகம் விளக்கம் கொடுக்கும் அம்சங்களுக்குள்ளேயே அரசுத் தரப்பின் இந்தப் போக்குகளும் நடவடிக்கைகளும் அடங்குகின்றன.

சத்தமின்றி - ஆரவாரமின்றி - முன்னெடுக்கப்படும் இந்த இருண்ட யுத்தம் முடிவுக்கு வராமல் சமாதானப் பேச்சு ஆரம்பமாகும் என எதிர்பார்ப்பது வெறும் நப்பாசைதான்.

# முள்ளி பொதுமயானத்தை புனரமைக்கக் கோரிக்கை

வரணி,ஜூலை2

வரணி வடக்கில் அமைந்துள்ள முள்ளி பொதுமயானத்தைப் பொதுமக்கள் பயன்படுத்துவதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று கூறப்படுகின்றது. தென்மராட்சியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது பொதுமக்கள் இடம்பெயர்ந்த காலகட்டத்தில் இப்பிரதேசத்தில் நிலைகொண்ட இராணுவத்தினர் இம்மயானப் பகுதியைத் துப்பாக்கி சுடும் பயிற்சிக் களமாகப் பயன்படுத்தினர். அந்தவேளையில் இந்த மயானத்தைச் சுற்றிப் பாரியதும் உயர்ந்ததுமான மண் அரணை அமைத்துப் பாதுகாப்புப் பிரதேசமாக அவர்கள் ஆக்கினர்.

இந்த மயானம் பருத்தித்துறை - கொடிகாமம் பிரதான வீதியின் ஓரமாக அமைந்திருந்ததால் சுடுகலன் பயிற்சிகளின்போது அப்பாதை ஊடான பொதுப்போக்குவரத்து இடைநிறுத்தப்படுவது வழக்கமாகும்.

பாதுகாப்பு அரண் அமைக்கப்பட்டபோது மயானக்கிரியை மண்டபம் அரணுக்குள் இருந்து. தற்போது வெளிப்பகுதியில் உள்ளதாக அமைந்தது. இங்கிருந்து இராணுவம் விலகிய காலம் முதல் இந்த மயானம் பயன்படுத்தப்படாமல் சுற்றவுள்ள அரண்களும் பாரிய பற்றைகள் வளர்ந்து காட்டுப்பிரதேசமாக மாறியுள்ளது.

இதனால், தற்சமயம் தகனக்கிரியைகள் மயானத்தின் மேற்கேயுள்ள தனியாரின் தோட்டக்காணி ஒன்றிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. எனவே, மேற்படி இந்த மயானத்தைப் புனரமைத்துச் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று - இப்பகுதிப் பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஓ-170)

## தென்மராட்சி தெற்கில் இருந்து மாட்டிறைச்சி கடத்தப்படுகிறது

### மீளக்குடியமர்ந்தோர் தரப்பில் இருந்து தகவல்

தென்மராட்சி,ஜூலை2

தென்மராட்சி தெற்கு, மறவன்புலோ, கைதடி - நாவற்குழி ஆகிய பிரிவுகளில் கட்டாக்காலிகளாக அலையும் கால்நடைகளைப் பிடித்து இறைச்சிக்காக விற்பனை செய்யவேண்டாமென விவசாய சம்மேளனங்கள் அறிவித்துள்ளதையடுத்து அப்பகுதியில் உள்ள பற்றைக் காடுகளில் அனுமதியின்றி மாடுகள் அறுக்கப்பட்டு இறைச்சி கடத்தப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அப்பகுதியில் சிலர் மாடுகளைப் பிடித்து இரவுவேளைகளில் அறுத்து அதிகாலை வேளைகளில் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுசெல்வதாகவும் - அவர்கள் தெரிவித்தனர்.

வெட்டப்படும் மாடுகளின் கழிவுகள் பற்றைகளில் எறியப்படுவதால் அப்பகுதியில் பெரும் துர்நாற்றம் வீசுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் அப்பகுதிக்குச் சென்ற பொதுமக்கள் காட்டுக்குள் கட்டிவைக்கப்பட்டிருந்த 20இற்கும் அதிகமான பசு மாடுகளை அவிழ்த்துவிட்டதாகவும் கூறப்பட்டது.

இதேவேளை - அப்பகுதியில் கன்றுகளுடன் நிற்கும் பசு மாடுகளை மீளக்குடியமர்ந்த மக்கள் பிடித்து வீடுகளில் வளர்த்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## போரினால் ஏற்பட்ட அழிவுகளை எடுத்துக்காட்டும் கண்காட்சி

### செய்தியாளர் சங்கம் நடத்துகிறது

கொழும்பு,ஜூலை2

இலங்கை வெளிநாட்டுச் செய்திநிருபர்கள் சங்கம் பிரபலமான 5 பத்திரிகையாளர்களின் புகைப்படங்களைக் கொண்ட கண்காட்சியினை நடத்துகின்றது. கொழும்பு - பெயார்பூட் காண்போர் கூடத்தில் இந்தக் கண்காட்சி கடந்த புதன்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

இப்புகைப்படக் கண்காட்சி போரினால் ஏற்பட்ட மரணங்கள், அழிவுகள், துன்பங்கள் மற்றும் கஷ்டங்களை எடுத்துக்காட்டுபவையாக மட்டுமல்ல, கடந்த இரண்டு ஆண்டுகளில் அமைதிச் சூழ்நிலையில் துளிர்விட்டுள்ள நம்பிக்கைகளையும் வெளிக்காட்டுபவையாக அமைந்துள்ளனவென்று மேற்படி சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2002ஆம் ஆண்டின் போர் நிறுத்தத்தின் பின்னர் இலங்கை எவ்வளவு தூரம் முன்னேறி இருக்கிறது என்பதையும் கண்காட்சி விளக்குவதாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கண்காட்சியில் உள்ளூர் புகைப்பட பத்திரிகையாளர்களின் திறமைகள் வெளிப்பட ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருப்பதாகவும், மிக அபாயகரமான சூழ்நிலைகளில் எடுக்கப்பட்ட படங்களும் இதில் அடங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராய்டர் படப்பிடிப்பாளர், அனுருத்த லொக்குகப்பு ஆராச்சி, சுதந்திரப் பத்திரிகையாளர் டொமினிக் சன்சோனி, ஏ.பி.நிறுவனத்தில் பணிபுரியும் கெமுனு அமரசிங்க, பிரான்ஸ் பத்திரிகை நிறுவனப் படப்பிடிப்பாளர் சேனவிதானகம மற்றும் இந்து பத்திரிகையின் படப்பிடிப்பாளர் சிறியாள்த வல்பொல ஆகியோர் எடுத்துள்ள புகைப்படங்கள் இந்தக் கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன. (ப)

## திருமறைக் கலாமன்றம் நடத்தும் இசைநாடக விழா இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை2

திருமறைக் கலாமன்றம் நடத்தும் மாபெரும் இசைநாடக விழா இன்று வெள்ளிக்கிழமை முதல் தொடர்ந்து மூன்று நாள்களுக்கு யாழ்நகரில் நடைபெறவுள்ளது.

கருத்தரங்குகள், இசைநாடக அளிக்கைகள் என இரண்டு வேறு தலைப்புக்களில் நிகழ்ச்சிகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. கருத்தரங்குகள் நாளை சனிக்கிழமையும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9.30மணி முதல் பிற்பகல் 5மணிவரை யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் இடம்பெறும். இசை நாடகம் தொடர்பாகப் பல்வேறு தலைப்புகளில் கருத்துரைகள், துறைசார் புலமையாளர்களால் வழங்கப்படவுள்ளன.

இசை நாடக அளிக்கைகள் இன்றுமுதல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று நாள்களும் தினமும் மாலை 7 மணிக்கு யாழ். திருமறைக் கலாமன்ற அரங்கில் இடம்பெறும். யாழ். குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த கலைஞர்களால் இசை நாடகங்கள் மேடையேற்றப்படவுள்ளன.

ஈழத்தமிழ் அரங்கப் பாரம்பரியத்தில் 19ஆம் நூற்றாண்டில் அறிமுகமாகி இன்று நலிந்து காணப்படும் இசை நாடகம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் அக்கலை வடிவம் குறித்த ஆய்வுகளை மேற்கொள்ளும் நோக்குடனுமே இந்த இசை, நாடக விழா நடத்தப்படுவதாகத் திருமறைக் கலாமன்றம் தெரிவித்துள்ளது. (எ-9)

## சண்டிலிப்பாய் பிரதேசத்தில் ஊரிமணல் அகழத்தடை

யாழ்ப்பாணம்,ஜூலை2

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் ஊரிமணல் அகழப் பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணியசர்மா தடை விதித்துள்ளார்.

ஊரிமணல் அகழ்வதற்குக் கிராம அலுவலர் சிபாரிசு செய்யவேண்டுமெனப் பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

குறிப்பாக நவாலி, கல்லுண்டாய், ஆனைக்கோட்டை, காக்கைதீவு ஆகிய பகுதிகளில் ஊரி மற்றும் மணல் மண் அகழ்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக உழவு இயந்திரங்களில் ஊரி அல்லது மணல் எடுத்துச்செல்லப்படுவது கண்டுபிடிக்கப்பட்டால் வாகனம் பறிமுதல் செய்யப்பட்டுச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-185)

# ஜி.சீ.ஈ. பரீட்சை நிலையச் சம்பவம்: பாடசாலை மாணவர் தரப்பில் விளக்கம்

யாழ்ப்பாணம்,ஜூலை2

'கடமை தவறாத மேற்பார்வையாளருக்குப் பிரபல பாடசாலையில் கிடைத்த அனுபவம்' என்ற தலைப்பில் கடந்த மே மாதம் 20ஆம் திகதி 'உதயன்' பத்திரிகையில் வெளியாகியிருந்த ஒரு செய்தி தொடர்பாக -

அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்ட சம்பவம் நடைபெற்ற பிரபல பாடசாலையின் உயர்தர மாணவர்கள் உதயனுக்கு விளக்கக் கடிதங்களை அனுப்பிவைத்திருக்கின்றனர்.

குறிப்பிட்ட பாடசாலையில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்காக அமைக்கப்பட்ட பரீட்சை நிலையத்துக்கு மேற்பார்வையாளராகக் 'கடமைபுரிந்த மற்றொரு பாடசாலையின் அதிபரது மோட்டார்சைக்கிள் தலைக்கவசம் அந்தப் பாடசாலை மாணவர்கள் எனக் கூறப்படுவோரால் எடுக்கப்பட்டுச் சேதமாக்கப்பட்டபின் பாடசாலை மலசலகூடத்தினுள் வீசப்பட்டது.

இதுதொடர்பான தகவலைப் பாதிக்கப்பட்ட பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் பிரஸ்தாபித்திருந்தார்.

அந்தத் தகவலே செய்தியாக உதயனில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

குறிப்பிட்ட பிரபல பாடசாலையின் பரீட்சை மண்டபத்தில் மேற்பார்வையாளராகப் பணியாற்றிய அதிபரது தலைக்கவசம் எடுக்கப்பட்டு சேதமாக்கப்பட்டது என்பதனை மாணவர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

ஆனால், சம்பந்தப்பட்ட பரீட்சை மேற்பார்வையாளர் கூறியிருப்பது போல், பரீட்சை மண்டபத்தில் பரீட்சார்த்திகள் மத்தியில் இடம்பெற்ற பரீட்சை முறைகேடுகளைக் கண்டுபிடித்துத் தடுத்ததால் ஆத்திரமுற்ற மாணவர்களாலேயே தலைக்கவசம் சேதமாக்கப்பட்டது என்பது தவறான குற்றச்சாட்டு என்று மாணவர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட பரீட்சை நிலையத்தில் பரீட்சார்த்திகள் முறைகேடாக - பரீட்சை விதிமுறைகளுக்குக் கட்டுப்படாது - நடந்து கொண்டனர் என்று மேற்பார்வையாளர் குற்றஞ்சாட்டுவது, தங்கள் கல்லூரி யின் பெயருக்கும், புகழுக்கும் மாணவர்களின் பரீட்சைச் சாத னைகளுக்கும் எதிராக வேண்டும் என்றே சோடிக்கப்பட்ட அபாண்டமான குற்றச்சாட்டு என்றும் - உதயனுக்கு அனுப்பிய கடிதத்தில் மாணவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

தங்கள் பாடசாலையின் பழைமையையும் பெருமையையும் கருதி பாடசாலைக்குள் பிரவேசிக்கும் அனைவருமே சைக்கிள்களிலோ மோட்டார் சைக்கிள்களிலே இருந்து இறங்கி உட்செல்லவேண்டும் என்று தாங்கள் பேணிவரும் 'ஒழுங்கைக் குறிப்பிட்ட பரீட்சை மேற்பார்வையாளர் மீறி நடந்துள்ளார் என்றும் -

அது குறித்து மாணவர்கள் தங்கள் ஆட்சேபத்தை அவரிடம் சுட்டிக்காட்டியபோதும் அவர் அதற்குச் செவிசாய்க்கவில்லை என்றும் மாணவர்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை -

தான் கடமையாற்றிய குறிப்பிட்ட பாடசாலையின் பரீட்சை மண்டபத்தில் இடம்பெற்ற பரீட்சார்த்திகளின் நடத்தைகள் தொடர்பாகக் கல்வித் திணைக்கள உயர் அதிகாரியிடமும் அந்தப் பாடசாலையின் அதிபரிடமும் முறையிட்டார் என்று பிரஸ்தாப பரீட்சை மேற்பார்வையாளர் பிரஸ்தாபித்திருந்தார்.

இது விடயம் தொடர்பாகக் கல்வித் திணைக்கள உயரதிகாரி ஒருவருடன் தொடர்புகொண்டு கேட்டபோது -

குறிப்பிட்ட அதிபர் மேற்பார்வையாளராகக் கடமையாற்றிய பரீட்சை மண்டபத்தில் பரீட்சை முறைகேடுகள் எவையும் இடம்பெற்றதாகத் தமக்கு உத்தியோகபூர்வமாக முறையிடப்படவில்லை என்று அந்த அதிகாரி தெரிவித்தார். (அ-ஐ)

**நாளை**

ஆனி 19
சனிக்கிழமை
(03.07.2004)
திதி : பிரதமை
பகல் 3.02 வரை
நட்சத்திரம்: பூராடம்
பகல் 9.55 வரை
சுபநேரம்: 2.57 - 4.27
ராகுகாலம்: 8.57 - 10.27
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

அறிவு நதியைப் போன்றது. அது எவ்வளவு ஆழமாக இருக்கிறதோ அந்த அளவுக்கு அமைதியாகவும் இருக்கும்.

# மெலிஞ்சிமுனையில் இன்று நாட்டுக்கூத்து

யாழ்ப்பாணம்,ஜூலை2

ஊர்காவற்றுறை, மெலிஞ்சிமுனை கிறிஸ்துராசா தேவாலய முன்றிலில் இன்று இரவு 'ஆனந்த சீலன்' நாட்டுக கூத்து மேடையேற்றமும் அண்ணா விமார் கௌரவிப்பும் நடைபெறவுள் ளன.

கரம்பன் பங்குத்தந்தை எஸ்.ஜேசு தாசன் அடிகளார் தலைமையில் நடை பெறும் இந்த நிகழ்வில், ஊர்காவற் றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ் செல்வநாயகம் பிரதம விருந்தினரா கக் கலந்துகொள்வார்.

'ஆனந்த சீலன்' நாட்டுக்கூத்தின் அண்ணாவியார் அந்தோனி சவரி முத்துவின் நாட்டுக்கூத்துப் பணி நிறைவு தொடர்பான மலர் ஒன்றும் இன்று வெளியிட்டு வைக்கப்படும்.

'ஆனந்த சீலன்' நாட்டுக்கூத்து கடந்த ஞாயிறன்று மேடையேற்றப் படவிருந்தது. எனினும், தவிர்க்க முடி யாத காரணங்களால் அது பின்னர் ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (எ)

## மாட்டிறைச்சிக் கடைகள் மூடப்பட்டன

தென்மராட்சி,ஜூலை2

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள அனைத்து மாட்டிறைச்சிக் கடைக ளும் கடந்த 29 ஆம் திகதி முதல் மூடப்பட்டுள்ளன.

சாவகச்சேரி கால்நடை வைத்தி யரின் பணிப்புரைக்கமைவாக பிரதே சத்தில் உள்ள இறைச்சிக்கடைகள் மறுஅறிவித்தல் வரை மூடப்பட்டி க் கும்.

மாடுகளுக்கு ஏற்பட்டுள்ள கால் வாய் நோய் கட்டுப்பாட்டுக்குள் வரும் வரை மாட்டிறைச்சி விற்பனை அனு மதிக்கப்படமாட்டாது எனத் தெரிவிக் கப்பட்டது.

(9-117)

## தேசிய கல்வி நிறுவக நேர்முகப்பரீட்சை

அச்சுவேலி,ஜூலை2

தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்படும் கல்விமாணி (பி.ஈ.டி.) பாடநெறிக்கு ஆள்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை யாழ்.இந்துக் கல்லூரியில் நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற் றுக்கிழமையும் நடைபெறவுள்ளது.

பாடநெறிக்குத் தெரிவுசெய்யப் பட்ட ஆசிரியர்களுக்கு கடிதமூலம் அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் -

மேலதிக விவரங்களை யாழ. இந்துச் கல்லூரி நிலையத்தில் அறிந்து கொள்ளலாம் எனவும் யாழ் இந்துக கல்லூரியில் இயங்கும் தொலைக்கல்வி நிலையத்தின் சிரேஷ்ட விரிவுரையா ளர் திருமதி வி.தனலட்சுமி தெரிவித் தார்.

கல்விமாணி 2004- 2006 கல்வித் தெரிவில் ஆரம்பக்கல்வி பாடநெறிக்கு 53ஆசிரியர்களும், இடைநிலைக் கல்வி பாடநெறிக்கு 59 ஆசிரியர்க ளும் பரீட்சை மூலம் தெரிவு செய்யப் பட்டு நேர்முகப்பரீட்சைக்கு அழைக் கப்பட்டுள்ளனர்.

(எ-11)


# காணவில்லை



படத்தில் காணப்படும் சிறுவன்

**வரதராசா பிரதீபன்**

(வயது 14)

கடந்த 21-06-2004 பிற்பகல் ரியூஷன் சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லை. இவரைத் தாய், தந்தையர்கள் தேடி அலைகின்றனர். இவர் கடைசியாக சாம்பல் நிறக் நீளக் காற்சட்டையும் அதே நிற ரீ - சேட்டும் அணிந்திருந்தார். இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் உடன் தொடர்புகொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் தெரிவிக்க வேண்டிய முகவரி:
திரு.த.வரதராசா,
மே/பா திரு.பரஞ்சோதி,
இலக்கம் 9, 2ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை.

(33681)(26-11-12)


## மனவிருத்திப் பாடசாலை இன்று திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை2

கோண்டாவில் சிவபூமி மன விருத்திப் பாடசாலையின் திறப்பு விழா இன்றுகாலை 9.30மணிக்கு அர சடி பிள்ளையார் ஆலயத்தின் அரு கில் இடம்பெறவுள்ளது.

சிவபூமி அறக்கட்டளைத் தலை வர் செஞ்சொற்செல்வர் ஆறு.திரு முருகன் தலைமையில் நடைபெற வுள்ள இந்நிகழ்வில், பிரதமவிருந்தி னராக சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கலந்துகொள்வார்.

ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமி கள் நிகழ்த்தவுள்ளார்.

(எ-10)


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 2645345 இலிருந்து 2661699 வரை

சீட்டிழுப்பு இல. 1517
திகதி 26.06.2004

வெற்றி எண்கள்

20 32 37 39 49

போனஸ் எண் 46

ஜக்பொட் பரிசு ரூபா. 71,82,750/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத்தொகை |
|---|---|---|---|
| 5 | - | 71,82,750/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 01 | 1,00,000/- | 1,00,000/- |
| 4 | 100 | 10,000/- | 10,00,000/- |
| 3 | 5,108 | 500/- | 25,54,000/- |
| 2 | 85,727 | 20/- | 17,14,540/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 20ம் எண் (போனஸ் எண் தவிர்ந்து) | 104,907 | 10/- | 10,49,070/- |

இந்த சனிக்கிழமை ஜக்பொட்

Rs. 79,94,450/-

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ. 64,17,610/-

தொடர் இல. 3610543 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுக்கள் 2004 ஜூலை 03 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

சனிக்கிழமை அதிர்ஷ்டச் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகை, தையல் இயந்திரம் மற்றும் சைக்கிளை வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2649163-5-58
2648681-4-90
2657463-0-87
2648400-5-41
2646156-5-02

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.



இசைப் பிரியர்களுக்கோர் அரிய வாய்ப்பு......

"முகாமை நோக்கு" சஞ்சிகை வெளியீட்டிற்காக
யாழ். முன்னணி இசைக் கலைஞர்களுடன்
யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து
வழங்கும் மாபெரும் இசைநிகழ்ச்சி

# இராகங்களின் சங்கமம்

இடம்: கைலாசபதி கலையரங்கு
யாழ். பல்கலைக்கழகம்
காலம்: 04.07.2004 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: முதலாம் காட்சி காலை 10.00 மணி
2 ஆம் காட்சி மாலை 3.00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முகாமைத்துவ மாணவர் ஒன்றியம்
யாழ். பல்கலைக்கழகம்.

விளம்பர அனுசரணை: சிவன் கிறீம் ஹவுஸ்
பரமேஸ்வராச் சந்தி. (33691)(34-11-12) திருநெல்வேலி.



# தேவை

உணவு பரிமாறுவோர் உடன் தேவை. நேரில் சமுகந்தரவும்.
**செல்வம் கூல்பார்,**
நவீனசந்தை, சாவகச்சேரி.
(C/35958)(42)



# விற்பனையாளர்கள் தேவை

யாழ். நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையம் ஒன்றிற்கு விற்பனையாளர்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**விளம்பர இல: 2318,**
**மே/பா உதயன்,**
**யாழ்ப்பாணம்.**
(33687)(26-11-12)



# யப்பான் சைக்கிள்

யப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆண்கள், பெண்களுக்கான சைக்கிள்கள்

- கியர், ஓட்டோமற்றிக் லைட், கப்பிரேக் போன்ற விசேட அம்சங்களுடன் யப்பான் சைக்கிள்.
- ரயர், ரியூப் உட்பட சகலவிதமான உதிரிப் பாகங்களும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். வதந்திகளை நம்பி ஏமாறவேண்டாம்.
- எம்மிடம் வாங்கப்படும் சைக்கிள் உதிரிப்பாகங்கள் அனைத்திற்கும் ஆறு (06) மாதகால உததரவாதமளிக்கப்படும்.
- பார், போக் என்பவற்றிற்கு 10 வருடகால உத்தரவாதமளிக்கப்படும்.

**சித்தி விநாயகர் சைக்கிள் பசார்**
631, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்
(பன்றிக் கோட்டுப் பிள்ளையார் கோயிலடி).
(33689)(34-29-11-12)



## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

# கேள்வி அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான கேள்விகள் 'இக்ராட்' நிறுவனத்தில் தரம் 'எம் - 9' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திற்குப் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்க ளிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 2004.07.14. பி.ப. 2.00 மணிவரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி :- 2004.07.15. ந.ப. 12.00 மணிவரை.

கேள்விப்பத்திரம் திறந்துபார்க்கும் திகதி :- 2004.07.15. பி.ப. 3.00 மணி

| வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் (வற்உட்பட) |
|---|---|---|
| 01. மின்சார நிலைய வீதி திருத்தம் | 9500.00 | 575.00 |
| 02. உடுவில் லவ் லேன் திருத்தம் | 9000.00 | 575.00 |

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களின் மூலப்பிரதியை *செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்* என்ற முகவரிக்கும், அதன் பிரதியை *பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கும் உரிய காலத்திற்கு முன்னர் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடி யாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபுற மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். மேலதிக விவரம் தேவைப்படுவோர் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வலி.தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
2004.07.01

**திருமதி ச.சொக்கலிங்கம்,**
**செயலாளர்,**
**வலி.தெற்குப் பிரதேச சபை,**
**சுன்னாகம்.**

(சி-35963)(29-11-12)



# கண்ணீர் அஞ்சலி



பாண்டியன்தாழ்வு ருவிங்கிள் ஸ்ரார் பேக்கரி முன்னாள் காசாளரும் எமது அன்புக்குரியவருமான

**நடராஜா பவானந்தன்**

அவர்களின் மறைவு எம்மை மிகவும் ஆழ்ந்த துயரத்துக்குள்ளாக்கியுள்ளது. அவரின் கடமை தவறாத பண்பு நினைவிலிருந்து நீங்காமலுள்ளது. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்திக்கின்றோம்.

ருவிங்கிள் ஸ்ரார் பேக்கறி
உரிமையாளரும்,
குடும்பத்தினரும்.

(33698)(40-29-11-12)



பத்மஸ்ரீ, பத்மபூஷன் உட்பட இந்தியாவின் உயர் விருதுகள் வழங்கும் வைபவம் நேற்றுமுன்தினம் இந்திய ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது. இவ்விழாவில் சினிமா நடிகர் அனுபம் கேர், பிரபல பாடகர் ஹரிகரன், இந்தியக் கிரிக்கெட் வீரர்களான சௌரவ் கங்குலி, ராகுல் ட்ராவிட், தடகள வீராங்கனை பீனா மோள், திரைப்பட இயக்குநர் பாரதிராஜா ஆகியோர் பத்மஸ்ரீ விருதினை ஜனாதிபதி அப்துல் கலாமிடமிருந்து பெற்றுக்கொள்வதைப் படங்களில் காணலாம்.

### ஈராக்கின் பலூஜா நகரில்

# ஜோர்தான் தீவிரவாதிகளின் பாதுகாப்பு இல்லத்தை முற்றாக நிர்மூலமாக்கினர் அமெரிக்கப் படையினர்

ஈராக்கின் பலூஜா நகரில் ஜோர்தானியக் கிளர்ச்சியாளர்களுக்குச் சொந்தமானது என்று கருதப்படும் பாதுகாப்பு இல்லம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தி அதனை முற்றாக நிர்மூலமாக்கியுள்ளனர் அமெரிககப் படையினர்.

ஈராக்கிலுள்ள கிளர்ச்சியாளர்களின் மிக முக்கிய இலக்காக இந்த வீட்டை வாஷிங்ரன் கருதுவதாகத்தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலை நேரடியாகக் கண்ட பலூஜா நகரவாசிகள் அவ்வீடு முற்றாகத் தகாக்கப்பட்டதுடன் அங்கிருந்த நான்குபேர் கொல்லப்பட்டதாகவும் கூறினார்கள்.

முன்னாள் ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைனும் அவரது சகாக்களும் ஈராக்கிய நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவதற்குச் சில மணிநேரம் இருக்கும் வேளையில் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.


பல்வேறு கொலைகளுக்கும் தற்கொலைத் தாக்குதல்களுக்கும் பொறுப்பேற்றுள்ள கிளர்ச்சித் தலைவர் அபு முசாம் அல்-சாக்காவி கொல்லப்பட்டாரா என்று உடனடியாகத் தெரியவரவில்லை.

அண்மையில் அமெரிக்கப் பணயக் கைதியொருவரும், கொரிய பணயக்கைதியொருவரும் கழுத்தறுக்கப்பட்டுக் கொலைசெய்யப்பட்டதற்கும் இவரே பொறுப்பு என்று கூறப்படுகின்றது. இக்கிளர்ச்சித் தலைவர் குறித்த வீட்டில் தாக்குதலின்போது இருந்தாரா என்பது தெரியவில்லை.

நகரின் தென்மேற்கு புறநகர்ப் பகுதியிலுள்ள வீட்டின்மீது அமெரிக்க விமானம் ஒன்று ஏவுகணைகளை வீசியதன் பின்னர் அந்த வீட்டிலிருந்து நான்கு சடலங்கள் வெளியில் இழுத்தெடுக்கப்பட்டதாக நேரில் கண்டவர்கள் கூறினார்கள். உயிருடனிருக்கக் கூடியவர்கள் பற்றித்தேடுதல் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

புதிய அரசுக்கும் அதற்கு ஆதரவளிக்கும் கூட்டுப்படைகளுக்கும் பலூஜா நகரின் இந்தப் பகுதியிலிருந்தே பெரும் எடுப்பில் எதிர்ப்புகள் தோன்றக்கூடும் என்று கருதப்படுகின்றது.

சார்க்காவியின் வலைப் பின்னலில் சம்பந்தப்பட்டுள்ள சக்திகளின் அறிகுறிகள் எங்காவது, எப்போதாவது தென்படும் இடத்தின் மீது தாம் தாக்குதல் நடத்துவோம் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது. (ப-8)



அல்-சாக்காவி

# சவூதியில் ஐந்து தீவிரவாதிகள் பொலீஸாரால் சுட்டுக்கொலை!

அல் கெய்டா தீவிரவாத அமைப்பிற்கு உதவி செய்யும் அனைவருக்கும் தண்டனை வழங்கப்படும் என்று சவூதி அரேபிய அரசு எச்சரித்துள்ளது.

இது தவிர, தீவிரவாத இயக்கங்களுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வருபவர்களைக் கண்டுபிடித்துக் கைதுசெய்யும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் தீவிரவாதிகளின் தாக்குதல் சவூதியில் அதிகரித்துவருகிறது.

ரியாத் நகரின் கிழக்குப் பகுதியில் உள்ள அல்குவாசில் ஒரு வீட்டில் சந்தேகத்திற்கு உரிய வகையில் சிலர் தங்கி இருப்பதாக சவூதிப் பொலீஸாருக்குத் தகவல் கிடைத்தது.

கடந்த சில நாள்களாக அவர்களைப் பொலீஸார் ரகசியமாகக் கண்காணித்தனர். அப்போது அவர்கள் தீவிரவாதிகள் என்பது தெரியவந்தது.

தீவிரவாதிகள் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்களை மூன்று கார்களில் கொண்டு வந்து வீட்டில் பதுக்கிவைக்க முயன்றதைப் பொலீஸார் பார்த்தனர்.

இதையடுத்து மர்மமான முறையில் தங்கி இருந்த நபர்கள் தீவிரவாத செயல்களில் ஈடுபட்டு வருபவர்கள் என்பதைப் பொலீஸார் உறுதிப்படுத்தி அவர்கள் மீது தாக்குதல் நடத்தினார்கள். இரு தரப்பினருக்கும் கடும் துப்பாக்கிச் சணடை நடந்தது. இதில் 5 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஒரு பொலீஸ் அதிகாரியும் பலியானார்; 3 பொலீஸார் காயம் அடைந்தனர்.

பலியான தீவிரவாதிகளில் ஒருவர் பெயர் அப்துல்லா முகமது ரஷீத் அல் ரசீத். இவர் அல் கெய்டா தீவிரவாதிகளுக்கு ஆதரவாகச் சவூதி அரேபியாவில் உள்ள இயக்கத்தின் முக்கிய தலைவர் என்பது தெரியவந்தது. (8)

# ஆசிய நாடுகளுக்குக் குறைந்த விலையில் கணனி மென்பொருள்

## ‘மைக்ரோ சொப்ட்’ நிறுவனத் தலைவர் பில் கேட்ஸ்

கோலாலம்பூர்,ஜுலை2

ஆசிய நாடுகளுக்குக் குறைந்த விலையில் மென்பொருளைத் தரப்போவதாகவும் இது குறித்து பல்வேறு அரசுகளுடன் பேசப்போவதாகவும் ‘மைக்ரோ சொப்ட்’ நிறுவனத்தின் தலைவர் பில் கேட்ஸ் கூறியுள்ளார்.

மலேசியப் பிரதமர் அப்துல்லா அகமத் பதாவியைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார் பில் கேட்ஸ. அதைத் தொடர்ந்து இவ்வாறு அவர் தெரிவித்தார்.

மலேசியாவிலும், தாய்லாந்திலும் அரசின் திட்டங்களுக்கு ஏற்கனவே குறைந்த விலையில் மென்பொருள் தரும் திட்டத்தை அறிவித்துள்ளது மைக்ரோசொப்ட்.

மிக மிகக் குறைந்த விலையில் மக்களுக்குக் கணனி கிடைக்கச் செய்யும் திட்டம் எதையாவது தீட்டியிருக்கின்றனரா எனப் பிறநாட்டு அரசுகளையும் ‘மைக்ரோசொப்ட்’ அணுகவுள்ளது.



அம்மாதிரியான திட்டம் இருக்குமானால், ‘விண்டோஸ்’ மென்பொருளின் எந்தப் பிரிவு வேண்டுமென அரசுகளிடம் பேசுவோம் எனவும் கூறினார் கேட்ஸ். அனைத்து அரசுத் திட்டங்களுக்கும் பயன்படுத்தும் வகையில் மென்பொருள்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (8)

# இளவரசி டயானா நினைவாக லண்டன் நகர மத்தியில் நீரூற்று

இங்கிலாந்து இளவரசர் சாள்ஸ்ஸின் மனைவி டயானா மறைந்து பல ஆண்டுகள் கடந்தாலும் அவரது நினைவுகளை மக்கள் மறக்கத்தயார் இல்லை.



நெஞ்சத்தில் நீங்காத இடம் பிடித்த டயானாவின் நினைவாக நினைவு நீரூற்று ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

லண்டன் நகரின் மத்திய பகுதியில் உள்ள ஹைட்பார்க்கில் இது அமைக்கப்பட்டுள்ளது. இதன் திறப்புவிழா எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெற இருக்கிறது. இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத் இதைத் திறந்துவைக்கிறார். இந்த விழாவில் டயானாவின் மகன்களான இளவரசர்கள் வில்லியம், ஹரி ஆகியோர் பங்கேற்கிறார்கள். இது தவிர டயானாவின் உறவினர்களும் நிகழ்ச்சியில் கலந்துகொள்கிறார்கள். (8)

# 24 ஆண்டுகளுக்குப் பின் லிபியாவுடன் உறவைப் புதுப்பித்தது அமெரிக்கா

வாஷிங்ரன்,ஜுலை2

24ஆண்டு இடைவெளிக்குப் பின் லிபியாவுடன் நேரடி ராஜீய உறவுகளை அமெரிக்கா புதுப்பித்துக்கொண்டுள்ளது.

லிபியா தலைநகர் திரிபோலியில் அதிபர் முகமது கடாபியுடன் பேச்சு நடத்தியபின் இதற்கான அறிவிப்பை அமெரிக்க வெளியுறவுத்துறை உதவி அமைச்சர் வில்லியம் ஜேபர்ன்ஸ் கடந்த திங்கட்கிழமை அறிவித்ததாக வாஷிங்ரன் தெரிவித்துள்ளது.

சவூதி அரேபியாவின் பட்டத்து இளவரசரைக் கொலைசெய்ய முயன்ற சதித்திட்டத்தில் கடாபிக்கு பங்கு இருப்பதாகக் கூறப்படுவது குறித்து புஷ் நிர்வாகம் விசாரித்து வரும் சூழ்நிலையில் இரு நாடுகளுக்கு இடையே ராஜீய உறவு மலர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

திரிபோலியில் கடந்த திங்கட்கிழமை அமெரிக்க தொடர்பு அலுவலகத்தை வில்லியம் ஜேபர்ன்ஸ் திறந்துவைத்தார்.

இரசாயன மற்றும் உயிர்கொல்லி ஆயுதங்களைத் தயாரிக்கும் திட்டத்தைக் கைவிடுவதாகக் கடந்த டிசெம்பரில் கடாபி உறுதி கூறியிருந்தார். இதைத் தொடர்ந்து லிபியாவுடன் உறவுகளைப் புதுப்பித்துக்கொள்ள அமெரிக்கா முடிவு செய்தது.

சர்வதேச அளவில் பயங்கரவாதத்தை ஒடுக்கும் முயற்சியில் அமெரிக்காவுக்கு உதவுமாறு கடாபியைக் கேட்டுக்கொண்டதாக வில்லியம் ஜேபர்ன்ஸ் தெரிவித்தார்.

சர்வதேச அளவில் பயங்கரவாதத்தை ஆதரிக்கும் 7 நாடுகளில் ஒன்றாக லிபியாவையும் அமெரிக்கா இதுவரை கருதிவந்தது. (8)

# அடுத்த இரண்டு மாதங்களில் மற்றுமோர் அணுச் சோதனை

இஸ்லாமாபாத்,ஜுலை2

அடுத்த இரண்டு மாதங்களில் பாகிஸ்தான் மற்றுமோர் அணு ஆயுதச் சோதனை நடத்த இருப்பதாக அந்நாட்டு அதிபர் பர்வேஷ் முஷாரப் கூறியுள்ளார்.

பாகிஸ்தானில் உள்ள அதிபர் மாளிகையில் செய்தியாளர்களிடம் முஷாரப் பேசினார்.

அவர் கூறியதாவது:-

நான உங்களிடம் ஒரு [illegible]க்கிய செய்தியை அறிவிக்க இருக்கிறேன். அ[illegible]த இரண்டு மாதங்களில் பாகிஸ்தான் ஒரு [illegible]கிய அணு ஆயுத சோதனை நடத்த இரு[illegible]கிறது - என்றார்.

இருப்பினும் அதுப[illegible] மற்றத் தகவல்கள் ஏதும் தெரிவிக்க மறு[illegible]துவிட்டார்.

இதனால், பாகிஸ்[illegible] மீண்டும் அணு ஆயுதப் போட்டியில் இறங்கி[illegible]ள்ளது என்று அர்த்தமில்லை - என்றார் அ[illegible]ர்.

அப்படி நினைப்பவர்க[illegible] பைத்தியக்காரர்கள் என்று அவர் மேலும் கூறினார். (8)

# சதாம் மீதான விசாரணை நேரடி ஒளி, ஒலிபரப்பு

ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் மீதான விசாரணை நியாயமான முறையில் நடைபெறும். அத்தோடு, விசாரணை தொலைக்காட்சி, வானொலியில் நேரடியாக ஒளி, ஒலிபரப்பப்படும் என்று ஈராக் அரசின் புதிய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மௌ.[illegible]பாக் அல்ருபை தெரிவித்துள்ளார். இந்நூற்றாண்டின் சிறந்த விசாரணையாக இது இருக்கும் என்றார் அல்ருபை.

விசாரணையின்போது சாட்சிகளாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்புஷ், பிரிட்டிஸ் பிரதமர் ரொனி பிளேயர் இரண்டு பேரும் அழைக்கப்படமாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

ஈராக் கிரிமினல் சட்டப்படி சதாம் விசாரிக்கப்படுவார் என்று பி.பி.ஸிக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை அளித்த பேட்டியில் ருபை இதனைத் தெரிவித்துள்ளார். (8)

**இந்தியப் பரம்பரை ஜோதிடர் மணிசாமி அவர்கள் யாழ்ப்பாணம் வருகை**

ஸ்ரீ சோட்டாநிக்கரை, பகவதி அம்மன் அருள்பெற்ற ஸ்ரீ வெட்காளியம்மாவின்
அருந்தவப் புதல்வன் மீண்டும்

**P.T.R., மணிசாமி இரட்டையர்கள்**

யாழ்ப்பாணம் புண்ணியபூமிக்கு வருகை.

கைரேகை, ஜாதகம், எண்கணிதம், நினைத்த காரியம் பார்க்கப்படும். திருமணத் தடங்கலா? காதல் தோல்வியா? தீராத வியாதியா? உயர்கல்வியில் தடங்கலா? கடன் தொல்லையா? தொழில்முன்னேற்றத் தடங்கலா? புதிய தொழில் தொடங்க வேண்டுமா,? குழந்தைப் பாக்கியம் இல்லையா? வெளிநாடு செல்லத் தடையா?

**ஸ்ரீ பாலாஜி விடுதி,**
293, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (கன்னாதிட்டிச் சந்தி அருகில்),
தொலை.பே. 222-2341
(பார்வையிடும் நேரம் 9 மணி முதல் 5 மணிவரை). (33662) (26-14-19)



# கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும்,
மூத்த புவியியற்றுறைப் பேராசிரியருமான
**திரு.பொ.பாலசுந்தரம்பிள்ளை** அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி பொன்னுத்துரை நாகரத்தினம்

அவர்கள் இயற்கையெய்தியதையிட்டு புவியியற்கழகத்தினராகிய நாம் எமது கண்ணீர்க் காணிக்கைகளினைச் செலுத்துவதோடு, துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

புவியியற் கழகத்தினர்,
யாழ். பல்கலைக்கழகம்.
(33652)(34-14-19-26)



## மல்லாகம் புனித சதாசகாயமாதா ஆலய

கட்டட நிதிக்காக 27.06.2004 இல் நடைபெற்ற
அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு பரிசுபெற்றோர் விவரம்

| | இலக்கம் | பெயர் முகவரி |
|---|---|---|
| முதலாம் பரிசு | 9489 | புதிய நதியா நகைமாடம் 105, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். |
| இரண்டாம் பரிசு | 2428 | A.J.ஜேசுதாசன் 'ரேவதி', சூராவத்தை, சுன்னாகம். |
| மூன்றாம் பரிசு | 4296 | பிரகாஷ் 77, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். |

ஆறுதல் பரிசுகள்

| | இலக்கம் | பெயர் முகவரி |
|---|---|---|
| முதலாம் பரிசு | 866 | வ.ஜெயராஜன் S.V.C. |
| இரண்டாம் பரிசு | 6117 | இ.லக்சிகா லவ்லேன் வீதி, உடுவில். |
| மூன்றாம் பரிசு | 10811 | க.மேரிடெனிஸ்ரா நீதிமன்ற வீதி, மல்லாகம். |
| நான்காம் பரிசு | 7032 | S.சதீசிந்தா தபாற்கந்தோர், ஏழாலை. |
| ஐந்தாம் பரிசு | 7129 | பெயர்முகவரி குறிப்பிடப்படவில்லை. |
| ஆறாம் பரிசு | 4862 | ச.செல்லகுமார் காளிகோவிலடி, மல்லாகம். |
| ஏழாம் பரிசு | 10309 | S.யசோ கொடிகாமம். |
| எட்டாம் பரிசு | 10034 | அ.மனோகரன், தேவாலய வீதி, மல்லாகம். |
| ஒன்பதாம் பரிசு | 3036 | பீ.செபமணி, ஏழாலை கிழக்கு, ஏழாலை. |
| பத்தாம் பரிசு | 5556 | எ.வில்சன், சங்கானை. |

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
பங்குத்தந்தை
புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயம்,
குளமங்கால், மல்லாகம்.
(33654)(34-14-19-26)

ஆடிமாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் சீட்டுகளுடன் வந்து பரிசுகளைப் பெற்றுக்கொள்ளவும்.

மேய்ப்புப் பணிச்சபை,
சுன்னாகம் பங்கு, சுன்னாகம்.



**JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY**
**VADDUKODDAI**

## தரமான உலோக வார்ப்புக்கள்

அலுமினியம், பித்தளை வார்ப்புப் பொருள்கள்
நியாய விலையில் தரமாக வார்த்துத் தரப்படும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர்,
தொழில்நுட்பக் கல்லூரி நிறுவனம்,
வட்டுக்கோட்டை.

E-MAIL:- jcit@sltnet.lk Phone:- 060 2213139.
(C/35949)(42-14-19-26)



## வாடிக்கையாளர்களே!

உங்கள் வீட்டுப் பாவனைப்பொருள்களான
றேடியோ, றேடியோ கசற்
Panasonic, Sony TVக்கள், டெக்குகள்
Panasonic, LG, Susil Fridges, Fans, Rice Cookers,
Gas Cookers, Ovens, Smoothing Irons
Ahiya Amplifier; Charger Lights
முதலியவற்றை நியாயவிலையில் உத்தரவாதத்துடன்
பெற்றுக்கொள்ளவும், சிறந்த முறையில்
திருத்திக்கொள்ளவும்

**V.K. இராசரத்தினம்**
95, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(33665)(42-14-19-26)



# 45ஆம் நாள் நெஞ்சைவிட்டகலா நினைவஞ்சலி

அன்னை மடியில் 11 - 07 - 1958



இறைவன் அடியில் 19 - 05 - 2004

# திருமதி தர்மகுலசிங்கம் கமலாம்பிகை

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் இருந்து
அமரராகி இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வமே!
பொறுமையினால் வாழ்வை ஏணிப்படிகளாக உயர்த்தி
சவால்களுக்கு எதிராகத் தோள் கொடுத்து
வாழ்வை ஒளிமிளிரச் செய்த எங்கள் குலவிளக்கே!
அறிவில் சிகரமாக விளங்கி
எல்லோர்க்கும் நல்வழிகாட்டிய எம் குலமகளே!
உடலால் மட்டுமே நீங்கள் எமைவிட்டுப் பிரிந்தீர்கள்
இவ்வுலகில் உமதுயிர் எம் உயிரை விட்டு ஒரு போதும் பிரியாது
உம் நினைவுகள் எம்மனதில் எப்பொழுதும் நிழலாடிக்கொண்டிருக்கும்.
உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.

(33655) (26-14-19)

தாய், சகோதரர்கள்,
கணவர், பிள்ளைகள்.


## யாழ். ஆயர் தினம்

குருநகர்,ஜூலை2

யாழ்.ஆயர் தினம் எதிர்வரும் 5ஆம் திகதி திங்கட்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

அன்று காலை 9மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை தலைமையில் கூட்டுத் திருப்பலி நடைபெறும்.

யாழ்.குடாநாட்டுப் பாடசாலைகளில் இருந்து கத்தோலிக்க மாணவர்கள் உட்படப் பலர் இத்திருப்பலியில் கலந்துகொள்ளவுள்ளனர். (-8-51)

## இந்து நாகரிக செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜூலை2

தேசிய கல்வி நிறுவனத்தினால் யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் உயர்தர வகுப்பில் இந்துநாகரிகம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கென நடத்தப்படும் செயலமர்வு எதிர்வரும் ஆறாம் திகதி முதல் எட்டாம் திகதி வரை மூன்று நாள்கள் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதற்குத் தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்களை இச்செயலமர்வில் கலந்துகொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஒ-6)

## மானிப்பாயில் மருத்துவமாது இன்றிக் கர்ப்பிணிகள் சிரமம்

நவாலி,ஜூலை2

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு நீண்டகாலமாக மருத்துவமாது ஒருவர் நியமிக்கப்படாததினால் இங்கு பிரசவத்திற்குவரும் கர்ப்பிணிகள் பல சிரமங்களின் மத்தியில் வேறு வைத்தியசாலைகளை நாடிச் செல்லும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வைத்தியசாலையில் நீண்டகாலமாகப் பணியாற்றிய மருத்துவமாது கடந்த ஒரு வருடத்திற்கு முனன் ஓய்வுபெற்றுச் சென்றார். ஆனால, இதுவரை அவரது இடத்திற்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை. இது விடயமாக இவ்வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர் சுகாதாரப் பணிப்பாளர் உட்பட சம்பந்தப்பட்டவர்களுக்கு நேரில் எடுத்துக்கூறியும் மகஜர்களை அனுப்பிவைத்தும் இதுவரை நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை. (ஒ-100)

## இலங்கைத் தூதரகங்களில் பணி வெற்றிடம்

யாழ்ப்பாணம்,ஜூலை2

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் ஆங்கில சுருக்கெழுத்தாளர்களின் வெற்றிடங்கள் போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படவுள்ளன.

அரச சுருக்கெழுத்தாளர் சேவை, மாகாண அரச சேவை, உள்ளூராட்சி சேவை நிறுவனங்களில் பணியாற்றும் அலுவலர் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர் ஆங்கிலச் சுருக்கெழுத்து, கணனி பரீட்சைகள் மற்றும் நேர்முகத தேர்வு ஆகியவற்றில் பங்கேற்க வேண்டும்.

எதிர்வரும் இருபதாம் திகதிக்கு முன்னர் 'பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்திரமுல்ல' என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்புமாறு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளர் கேட்டுள்ளார். (ஒ-185)

## எந்திரவியல் டிப்ளோமா கற்கை நெறி

யாழ்ப்பாணம்,ஜூலை2

2004 - 2005 கல்வியாண்டிற்கு எந்திரவியல் உயர்தேசிய டிப்ளோமா கற்கை நெறிக்கு ஆள்சேர்ப்புச் செய்யப்படவுள்ளது.

இதற்கான விண்ணப்பத்தை கொழும்பு - 15 இல் உள்ள உயர் தொழில்நுட்ப நிறுவனம் கோரியுள்ளது.

விண்ணப்பதாரர் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் பிரயோக கணிதம், தூய கணிதம், பௌதிகம், இரசாயனவியல் ஆகிய 4 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

கற்கை நெறி மூன்று வருடகாலக் கோட்பாட்டு முறை மற்றும் 6மாத கால பொறிப்பயிற்சியைக் கொண்டிருக்கும்.

விண்ணப்பதாரர் எதிர்வரும் ஒன்பதாம திகதிக்கு முன்னர் 'பணிப்பாளர், உயர் தொழில்நுட்ப நிறுவனம், இல.42, ரொட்ரிகோ பிளேஸ், மட்டக்குளி, கொழும்பு - 15' என்ற முகவரிக்கு விண்ணப்பத்தை அனுப்பிவைக்குமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஒ-185)

# உலகியல் வாழ்வில் தெய்வீகத்தை நிரூபித்துக்காட்டிய தூய அன்னை

அன்னை சாரதாதேவியின் 150 ஆவது பிறந்த நாள் விழாவையொட்டிய சிறப்பு நிகழ்வுகள் தற்போது இடம்பெற்றுவருகின்றன. இதனையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது.



சரித்திரம் நமக்குக் காட்டுகின்ற ஆன்மீகச் செல்வர்களுள் தலையாயவராக சென்ற நூற்றாண்டில் நம்மிடையே வாழ்ந்த பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் வாழ்வில் இணைந்து அவரது துணைவியாக, சிஷ்யையாக, தாயாக, தேவியாக வாழ்ந்து, சுவாமி விவேகானந்தர் போன்ற துறவறச் சிங்கங்களுக்கு வழிகாட்டிய ஓர் ஒப்பற்ற பெண்மணி ஸ்ரீ சாரதாதேவி.

இற்றைக்கு 150 ஆண்டுகளுக்கு முன் தோன்றி உலக மக்களுக்கு ஆன்மீக விடுதலை அளித்த இந்த தூய அன்னையின் வாழ்க்கை நிகழ்ச்சிகளும் சம்பவங்களும் நிறைந்த ஒன்றாக இருக்கவில்லை. ஒரு முழுமதியின் சரித்திரத்தில் பல நிகழ்ச்சிகள் உண்டா என்ன?

ஓர் இளம்பிறையாக 1853ஆம் வருடம் மார்கழி மாதம் 22ஆம் திகதி கல்கத்தாவில் இருந்து 60 மைல்கள் மேற்கே உள்ள ஜெயராம்பாடி எனும் கிராமத்தில் ராமச்சந்திர முகர்ஜிக்கும் சியமளா சுந்தரி தேவிககும் முதல் குழந்தையாக சாரதை அவதரித்தார்.

பெற்றோரால் சீராக வளர்க்கப்பட்ட சாரதை, பள்ளி சென்று படித்ததில்லை. ஆனால், பிற்காலத்தில் தனது சொந்த முயற்சியினால் வங்காள எழுத்துக்களைக் கற்றுக்கொண்டு சிறிது படிக்கவும், எழுதவும் அறிந்து கொண்டார்.

இயல்பிலேயே பண்பாடுமிக்க உயர்ந்த நிலையில் இருந்த அன்னைக்கு இயற்கையாகக் கல்வி அமைந்தது. இத்தகைய பண்பாட்டுக் கல்வி, ஏட்டுக் கல்வியை விட உயர்ந்தது. என்பதனை அன்னையின் உரையாடல்களும் உபதேசங்களும் எமக்கு உணர்த்துகின்றன.

இளமைப் பருவத்திலேயே அன்பாகவும் சீராகவும் வளர்க்கப்பட்ட சாரதைக்கு வயது ஐந்தை எட்டிய போது பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் மனைவியானார்.

ஐந்து வயதே நிரம்பிய குழந்தை சாரதைக்கும் இருபத்திமூன்று வயது இளைஞரான ராமகிருஷ்ணருக்கும் நடைபெற்ற இந்த விநோத திருமணம் நடந்தேறிய முறையைப் பார்க்கும்போது இது தெய்வ சங்கற்பத்தால் நடந்தது என்று கூறுவதே மிகவும் பொருந்தும்

ஆன்மீக வாழ்க்கையின் காரணமாக உலக நாட்டத்தை முற்றிலும் இழந்திருந்த பகவான் ஸ்ரீராமகிருஷ்ணருக்கு மனத் தெளிவையும் உலகியல் வாழ்வில் நாட்டத்தையும் ஏற்படுத்துவதற்காக திருமணம் ஒரு சிறந்த மருந்தாக அமையுமென்று கருதிய அவரது உறவினர்கள் அவருக்குத் தெரியாமலேயே பெண் பார்கக் தொடங்கினர். ஆனால், அவர்களது முயற்சி தோல்வியிலேயே முடிந்தது. இதனால் மனவேதனையுற்றிருந்த உறவினர்களைப் பார்த்து பகவான் தெய்வீக பரவச நிலையில் "பெண் தேடி அங்கும் இங்கும் ஏன் வீணாக அலைகின்றீர்கள். ஜெயராம் பாடியில் வசிக்கும் ராமச்சந்திர முகர்ஜியின் வீட்டில் எனக்கென்றே பிறந்த பெண் இருக்கின்றாள் என்றார்." ராமகிருஷ்ணர் கூறிய அந்தப் பெண் வேறு யாரும் அல்ல ஐந்து வயதே நிரம்பிய சாரதைதான்.

ஞானக்கதிர்

திருமணத்திற்குப் பின் 7,13,14 வயதுகள் நடந்துகொண்டிருக்கும் போது ஸ்ரீ ராமகிருஷ்ணருடன் இருக்கும் வாய்ப்பு அன்னைக்குக் கிட்டியது. இந்த வேளையில் ராமகிருஷ்ணருக்கு சேவை செய்து அற்புதமான அனுபவங்களையும் அவர் பெற்றுக் கொண்டார். ஆனால், சாரதையின் 18 வயதிலேதான் ராமகிருஷ்ணருடன உண்மையான - பொருள்பொதிந்த சந்திப்பு தட்சணேஸ்வரத்திலே நிகழ்ந்தது.

இவ்வாறு 1878ஆம் ஆண்டு தட்சணேஸ்வரம் வந்து சேர்ந்த அன்னை, ஜெயராம்பாடியில் வசித்த தனது தாயைக் காண சிலமுறை சென்று வந்தார். தவிர ஏனைய காலங்களில் தட்சணேஸ்வரத்திலும் பின்பு 1986ஆம் ஆண்டு பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் மகா சமாதி அடையும்வரை ஓராண்டு காலம் காசிப்பூரிலும் வாழ்ந்தார்.

இந்தக் காலப்பகுதியில் அன்னை பெற்ற தவத்தாலும் பயிற்சியாலும் அவரிடம் பொதிந்து கிடத்த தாய்மைப்பண்பு உன்னத நிலையை அடைந்தது. இது பிற்காலத்தில் ராமகிருஷ்ணரால் அமைக்கப்பட்ட இயககத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்தக்கூடிய பக்குவத்தையும் அவருக்குக் கொடுத்தது.

இந்தக் காலப் பகுதியில் பெற்ற பயிற்சிகளினால் பொறுமையின் அவதாரமாக, அமைதியே வடிவெடுத்தவராக, கம்பீரத்துடன் - ஆனால் மிகவும் எளியவராக, அடக்கமானவராக ஆனால் ஆன்மீகப் பேருணர்வு மிகப் படைத்தவராக நண்பர், பகைவன் என்று வேறுபாடில்லாத அன்பின் சிகரமாக அனைவரையும் அணைக்கும் தாய்மைக்குணம் மிக்கவராக அன்னை உருவெடுத்தார்.

தட்சணேஸ்வரத்தில் அன்னை வாழ்ந்த காலப்பகுதி பக்தர்களுக்கு சமைப்பதிலும் தியானஞ்செய்வதிலுமே கழிந்தது. வேலையும் பிரார்த்தனையும் இவ்வாறு ஒருங்கிணைந்து செல்வதே சீரிய வாழ்க்கை என்பதனை இந்தக் காலப் பகுதியில் அன்னை வாழ்ந்துகாட்டினார்.

அன்னையின் உலக வாழ்க்கை முன்னேற்றத்திலும் ஆன்மீக வாழ்க்கை முன்னேற்றத்திலும் பகவான் ராமகிருஷ்ணர் பின்பலமாக இருந்து வழி நடத்தினார். இவ்வாறு ராமகிருஷ்ணரின் சிறந்த பயிற்சிகளின் வாயிலாக அன்னை ஒரு சிறந்த மனைவியாக உருவானார்.

ஒரு சிறந்த மனைவியாக, தெய்வீகத்தன்மை பொருந்திய அன்னையாக தட்சணேஸ்வரத்திலே வாழ்நது கொண்டிருக்கும்போது பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் நோய்வாய்ப்பட்டார். தட்சணேஸ்வரத்திலே சிகிச்சை பலனளிக்காத நிலையில் மேலதிக சிகிச்சைக்காக 1985ஆம் ஆண்டு செபரெம்பர் மாதம் காசிப்பூர் அழைத்துச் செல்லப்பட்டார். அவருடன் அன்னையும் காசிப்பூர் சென்றுவிட்டார்.

இத்துடன் அவரது தட்சணேஸ்வர வாழ்க்கை முடிவுற்றது. 1885ஆம் ஆண்டு முதல் 1886ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் குருதேவர் மகாசமாதி அடையும் வரை அன்னை காசிப்பூரில் வாழ்நதார்.

குருதேவர் மறைந்து இரண்டு வாரங்களின் பின் காசிப்பூர் வீடு காலி செய்யப்பட்டது. இதன் பின்பு அன்னையும் குருதேவரின் சீடர்களும் ஒரு புனித யாத்திரையை மேற்கொண்டு இறுதியில் பிருந்தாவனம் வந்து சேர்ந்தனர். ஆன்மீகக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது அன்னை பிருந்தாவனத்தில் வாழ்ந்த காலம் மிகவும் முக்கியமானது. இங்கு அன்னைக்கு ஆன்மீக அநுபூதிகள் பல கிட்டின.

அவற்றில் ஒன்று, ஒரு நாள் குருதேவர் அன்னையின் முன்தோன்றி சுவாமி யோகானந்தருக்கு தீட்சை அளிக்கும்படி கூறினார். யோகானந்தருக்கும் குருதேவர் காட்சிகொடுத்து அன்னையிடம் மந்திர தீட்சை பெற்றுக்கொள்ளும்படி கூறினார். இதனால அன்னை பிருந்தாவனத்தில் வைத்தது சுவாமி யோகானந்தருக்கு மந்திர தீட்சை நல்கினார். இதனால் சமாதி நிலையைத் தொடக்கூடிய மிகவும் உன்னதமான நிலையை அன்னை அடைந்தார்.

பின்னர் 1887ஆம் ஆணடு ஓகஸ்ட் மாதம் கல்கத்தா திரும்பினார். கல்கத்தா திரும்பிய அன்னை சில தினங்களின் பின்னர் ராமபுரியில் வசிக்கும் பொருட்டு அங்கு சென்றார்.

1888ஆம் ஆண்டு முதல் தனது இறுதிக்காலம் வரை இந்தக் கிராமத்திலேயே வசித்த அன்னை அரிய பெரிய ஆன்மீகப்பணிகளை மேற்கொண்டார்.

மக்களின் ஆன்மீக உயர்விற்காகவும், குருதேவர் ஆரம்பித்த பணி தொடர்ந்து நடப்பதற்காகவும் அன்னையை குருதேவர் இவ்வுலகில் விட்டுச்சென்றார்.

அந்தப் பணிகளை அன்னை தமது இறுதிமூச்சுவரை செவ்வனே செய்து வந்தார். கடவுளின் தாய்மை எப்படிப்பட்டது என்பதனை அன்னை வாழ்ந்துகாட்டினார்.

அன்னை இந்திய மக்கள் அனைவரையும் மட்டுமல்ல உலகமக்கள் அனைவரையும் தமது ஒப்பற்ற தாய்மையின் பேரன்பிற்கு உட்படுத்தி, பெண்மையின் மிகப்பழுத்த நன்மையை, அதிமதுரக் கனியை உலகிற்கு எடுத்துக்காட்டியவர்.

அவருக்கு கல்லாலும் காகிதங்களாலும் நினைவாலயங்கள் அமைக்கப்பட்டிருந்தாலும், பெண்மை போற்றப்படுமிடத்து, தம்பதிகள் பாரமார்த்திர வாழ்வு வாழுமிடத்து, தாய்மையின் தியாகம் தழைக்குமிடத்து, பெண்கள் தங்களது தினசரிக் கடமைகளைச் செய்துகொண்டே இலட்சியப் பெண்களாக வாழுமிடத்து அன்னை இன்றும் வாழ்ந்துகொண்டுதான் இருக்கின்றார். ☆

**தியாகராஜா தவனேசன்**
**மருத்துவ பீடம்**
**யாழ். பல்கலைக்கழகம்**



தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்திய வைகாசிப் பெருவிழாவில் முன்னாள் பிரதேச செயலர் வை.வேலும் மயிலுமுக்கு "ஞானபண்டிதசேவாஜோதி" எனும் பட்டத்தையும் விருதையும் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் கையளிப்பதைப் படத்தில் காணலாம். சிவஸ்ரீ சோம சுந்தர தண்டபாணி தேசிகரும் மத்தியில் உள்ளார்.
*(படம்: வடமராட்சிச் செய்தியாளர்)*



ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்தநயினார் ஆலய சப்பரத் திருவிழாவின்போது எடுக்கப்பட்ட படம்.
*(படம்: நவாலிச்செய்தியாளர்)*

# சமய சந்நிதிகளில்...

யாழ்ப்பாணம்,ஜுலை2
யாழ். வண்ணை ஸ்ரீ வீரமாகாளியம்மன் ஆலய தீர்த்தத் திருவிழா இன்று காலை நடைபெறவுள்ளது. (10)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஜுலை2
கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய தீர்த்தத் திருவிழா இன்று காலை நடைபெறவுள்ளது. (10-5)

☆ ☆ ☆

அச்சுவேலி,ஜுலை2
அச்சுவேலி காட்டுமலைக் கந்தசுவாமி கோயிலின் தீர்த்தத் திருவிழா இன்று பகல் நடைபெறவுள்ளது.(10-11)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஜுலை2
பண்டத்தரிப்பு புனித செபமாலை அன்னை ஆலயத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும்.

காலை 7 மணிக்கு இடம்பெறும் திருநாள் பூசையைத் தொடர்ந்து அன்னையின் சொரூபம் பண்டத்தரிப்பு கிராமத்தைச் சுற்றிப் பவனி வரவுள்ளது. (10-15)

☆ ☆ ☆

வடமராட்சி,ஜுலை2
செம்பியன்பற்று தெற்கு கன்னியம்மன் ஆலய வருடாநத பொங்கல் உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை இரவு நடைபெறும். (10-173)

☆ ☆ ☆

வரணி,ஜுலை2
மாசேரி, வரணி பொற்பத்தங்கேணி வீரகத்திப் பிள்ளையார் கோயில் மகாகும்பாபிஷேகம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11.00 மணி 06 நிமிடம் வரையிலான சுபநேரத்தில் நடைபெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும். (10-170)

☆ ☆ ☆

வலி.தென்மேற்கு,ஜுலை2
பண்டத்தரிப்பு, பிரான்பற்று முல்லையடி ஸ்ரீஞான்வைரவசுவாமி ஆலய மகாகும்பாபிஷேகம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (10-135)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஜுலை2
அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் ஆலய மணவாளக்கோலவிழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

அன்றைய தினம் புதிதாக அமைத்த வசந்தமண்டபத திறப்பு நிகழ்வும், பரிவார மூர்த்திகளான ஸ்ரீமுருகன், ஸ்ரீராமர், ஆஞ்சநேயர், சந்தானகோபாலர், வைரவர் பிரதிஷ்டா கும்பாபிஷேகமும் நடைபெறும்.

இதற்கான கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றன. பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்துதல் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் மாலை 5.30 மணிவரை நடைபெறும். (10-15)

☆ ☆ ☆

கொழும்புத்துறை,ஜுலை2
மடுமாதா பெருவிழாவையொட்டி கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் விசேட திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் தொடர்ந்து திருச்சொரூபபவனியும் ஆசீரும் இடம்பெறும். (10-30)

☆ ☆ ☆

குடத்தனை,ஜுலை2
பருத்தித்துறை, துன்னாலை வடக்கு ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் பெரியாழ்வார் சந்நிதியில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் வாராந்த ஆன்மீக சொற்பொழிவு நிகழ்வில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 'கண்ணனின் லீலைகள்' என்னும் தலைப்பில் கட்டைவேலி மெ.மி.த.க. பாடசாலை அதிபர் செல்வி பாலாம்பிகை கந்தசாமி சொற்பொழிவாற்றவுள்ளார். (ஓ-78)

## நயினையில் சிவாகமப் பாடசாலை

யாழ்ப்பாணம்,ஜுலை2
இந்துக் குருமார்களுக்கான வேத சிவாகம பாடசாலை எதிர்வரும் பதினைந்தாம் திகதி நயினாதீவில் ஆரம்பமாகவுள்ளது.

இப்பாடசாலையில் இந்துக் குருமார்கள் பயிற்சிபெறலாம் என்றும் - இவர்களுக்கான தங்குமிட வசதி, உணவு மற்றும் மருத்துவ வசதிகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன எனவும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், திருமுறைகள், ஆங்கிலம், சமய சொற்பொழிவுகள், ஜோதிடம், கணனிக் கல்வி ஆகிய பாடங்களும் கற்பிக்கப்பட உள்ளன.

மேற்படி பாடசாலையில் போதனைக்காக இந்தியாவிலிருந்து சிவஸ்ரீ. பரமேஸ்வர சிவாச்சாரியார் வரவழைக்கப பட்டுள்ளார். (ஒ.ரி)

### மு.காவை விட்டு வெளியேற்றியதற்கு எதிராக

# பைலா, ரிஷாத், நஜீப்மஜீத் மூவரும் வழக்குத் தாக்கல்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து தம்மை வெளியேற்றியமை சட்ட விரோதமானது என்று அறிவிக்குமாறு கோரி அக்கட்சியின் முன்னாள் உறுப்பினர்கள் மூவர் உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

ஹுசைன்பைலா, நஜீப் ஏ.மஜீத், ரிஷாத பதியுதீன் ஆகியவர்களே இந்த மனுக்களைத் தாக்கல் செய்தவர்கள்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் வேறு ஆறுபேர் இந்த மனுக்களில் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தமது நடவடிக்கைக்கும் செயலுக்கும் காரணம் தெரிவிக்கப் போதிய கால அவகாசம் வழங்காமல் கட்சியிலிருந்தும், நாடாளுமன்ற அங்கத்துவத்திலிருந்தும் தாம் நீக்கப்பட்டனர் என்றும், இது சட்டவிரோதமானது என்றும் மூவரும் தத்தமது மனுக்களில் குறிப்பிட்டுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தொடர்ந்து இருப்பதற்குத் தாம் தகுதியானவர்கள் என்று அறிவிக்குமாறு உயர் நீதிமன்றத்திடம் இந்த மனுக்களில் அவர்கள் கோரியுள்ளனர். (க)

## புத்தளம் நகர வீட்டில் இரவில் வெடித்தது குண்டா? 'காஸ்' சிலிண்டரா?

### 4 பிள்ளைகளின் தாய் உயிரிழப்பு

புத்தளம் நகரில் கடந்த செவ்வாய் இரவு இடம்பெற்ற திடீர்வெடிப்புச் சம்பவத்தில் 35 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தாயாரொருவர் மரணமானார். அதே வீட்டில் இருந்த கணவருக்கோ, பிள்ளைகளுக்கோ காயங்கள் ஏதும் ஏற்படவில்லை.

அங்கே வெடித்தது குண்டா? அல்லது காஸ் சிலிண்டரா? - என்பது குறித்து சர்ச்சை ஏற்பட்டுள்ளது. இதனால் மரணமான பெண்ணின் கணவர் சந்தேகத்தின் பேரில் பொலீஸ் விசாரணைக்குள்ளாக்கப்பட்டார்.

புத்தளம் வான் வீதியிலுள்ள வீடொன்றில் கடந்த செவ்வாய் இரவு 9.30 மணியளவில் இந்தத் திடீர் வெடிப்பு இடம்பெற்றுள்ளது.

வீட்டின் பின்புறத்தில் கட்டிலில் படுத்திருந்த சித்திரா என்ற குடும்பப் பெண்ணே மரணமானார். ஆனால், அதே வீட்டில் இருந்த கணவனுக்கும், பிள்ளைகளுக்கும் எவ்விதமான காயங்களும் ஏற்படவில்லை. பெண்ணின் கணவரோ வெடித்தது காஸ்சிலிண்டர் என்கின்றார். ஆனால், வெடித்தது குண்டாகத்தான் இருக்கும் என்ற சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

மரணமான பெண்ணின் பிரேதம் புத்தளம் தள வைத்தியசாலையில் இருந்து சிலாபம் பெரிய வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகப் புத்தளம் பொலீஸார் தெரிவித்தனர். (க-9)

---

உ
சிவமயம்
ஓம்விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## திருமண அழைப்பு

பேரன்புடையீர்!

நிகழும் சுபமங்களகரமான தாரண வருஷம் ஆனித்திங்கள் 20 ஆம் நாள் நாளை (03.07.2004) சனிக்கிழமை காலை 10.31 மணிமுதல் 10.55 மணிவரையுள்ள உத்தரட்டாதி நட்சத்திரமும் சிம்மலக்கினமும் சித்தயோகமும் கூடியுள்ள சுபவேளையில்

எமது சிரேஷ்ட புதல்வன்
திருநிறை செல்வன்
**கமலவதனன் (வதனன்)**
அவர்களுக்கும்

எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**பிரதீபா (தீபா)**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு இந்திய தமிழ்நாடு, சென்னை வடபழநி முருகன் ஆலயத்தில் திருமணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு திருமாங்கல்யதாரண வைபவம் நடைபெறவுள்ளது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருவதோடு, மணமக்களை வாழ்த்துக்கூறி ஆசிகளை வழங்குமாறும் அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

திரு.திருமதி தர்மரெட்ணம் *(செட்டி)*
921, Navalar Road,
Ariyalai, Jaffna, SriLanka.

திருமதி ஞா.அருணாசலம்
10360, Boul. St-Laurent
#37 Montreal, Quebec
H3L 2P3, Canada.
(514) 382-0991.

(இருவீட்டார் அறிவிப்பு)

(33616)(34)

---

# UNIVERSITY OF JAFFNA

## Tender Notice

Sealed Tenders are invited from reputed Suppliers for the following items.

| Serial No: | Description | Qty. |
|---|---|---|
| 01 | Zip Drive Iomega, 250 MB External Drive, USB interface | 02 |
| 02 | Zip Disks Iomega 250 MB | 20 |
| 03 | Flash Memory 128 MB | 10 |
| 04 | Colour ink Cartridge HP 848C | 04 |
| 05 | Black ink Cartridge HP 848C | 08 |
| 06 | Printer Ribbon Epson LQ 2180 (Original) | 10 |
| 07 | Toner Cartridge Aficio Nashuatec P 7016 | 06 |
| 08 | Toner Cartridge HP Laser Jet 2300n | 10 |
| 09 | Toner Cartridge HP Laser Jet 1300 | 05 |
| 10 | UPS Battery, CBS GP 12170 12V 17Ah 25 (Length 18 cm, Width 7.5cm, height 17cm) | 08 |
| 11 | Router 4 Serial Ports 1or 2 Ethernet Ports With RJ 45 connectors | 01 |

Tenderers are requested to pay a non refundable tender fee of Rs. 2000.00 by Money Order drawn infavour of the Bursar, University of Jaffna, payable at the Jaffna Post Office or by Cash at the Shroff Counter of the University of Jaffna. Tender Documents with relevant specification could be collected from the Senior Assistant Bursar (Supplies), University of Jaffna between 06-07-2004 to 12-07-2004 during working hours, by producing the Money Order or Cash Receipt. The Money Order/ Cash Receipt to be attached with the Tenders. The University may at its discretion either to increase or to decrease the number of items to be Purchased. The successful supplier should deliver these items at the University of Jaffna and to extend one month credit facility. After confirmation of the Order supply should be completed within four Weeks.

Tenders in duplicate may be sent by post under registered cover or deposited in the Tender box available at the Bursar's office, University of Jaffna before 2 p.m. on 16th July 2004. Tenders will be opened immediately after the closing at the Board Room, University of Jaffna. Tenderers or their authorise representative could be present at the opening time. The left hand top corner of the envelope should be marked as **"Tender for Computers Accessories – UJ/SK/T/07/04"**

**Vice chanceller,**
**University of Jaffna.**

(C/35921)(11-12-30)

---

## பதவி வெற்றிடம்

### சுன்னாகம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

பதவி: **பொது முகாமையாளர்**
பதவிக் குறியீடு: **101/8**
சம்பளத்திட்டம்: $\frac{5250}{120\times10}$ - $\frac{7750.00}{130\times10}$ (31/99 சுற்று நிருபப்படி)

வயது: **18-45**
பால்: **ஆண்/பெண்**
**கல்வித்தகைமை:**

அ. கூட்டுறவுப் பணியின் 9ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 3 வருடத்திற்குக் குறையாத அனுபவம்;

அல்லது

10ஆவது சம்பளத்திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் 6 வருடத்திற்குக் குறையாத அனுபவம்;

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டத்துடன் அல்லது இணையான பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில் ஸ்தாபனம் ஒன்றில் முகாமைமட்டத்திலான பதவியில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

இ. கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்)/ க.பொ.த. உயர்தரம் 3 பாடங்கள் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில் ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

குறிப்பு: *கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சுற்றுநிருபத்திற்கு அமைய இதரபடிகள் வழங்கப்படும்.*

**விண்ணப்ப முடிவு திகதி: 14.07.2004**


அனுப்பவேண்டிய முகவரி:
(பதிவுத்தபாலில்/நேரில்) **தலைவர்,**
**சுன்னாகம் பனை, தென்னை வள**
**அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,**
மின்சாரநிலைய வீதி, சுன்னாகம்.

(சி-35937)(33)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
14 - 02 - 1927



விண்ணில்
13 - 07 - 2003

**அமரர் தம்பிராசா வைத்திலிங்கம்**

திதி 02.07.2004 வெள்ளிக்கிழமை

குடும்பத்தின் ஒளி விளக்காய்
சமூகத்தின் அறிவொளியாய்
அன்பின் இருப்பிடமாய்
பண்பின் சிகரமாய் வாழ்ந்து
வழிகாட்டிய தெய்வமே!
வையகந்தனில் வாழ்வாங்கு
வாழ்ந்து வழிப்படுத்திய தெய்வமே!
இறைவன் இணையடி சேர்ந்து
ஓராண்டு சென்றாலும்
எங்கள் உள்ளங்களில்
உங்கள் நினைவு நீங்காது தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*'லிங்கவாசம்'*
*சங்கரத்தை,*
*வட்டுக்கோட்டை,*
(சி-35909)(39)

அன்பு மனைவி, மகன், மகள்மார்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

# நிலையான சமாதானத்தை வலியுறுத்தி யாழ். தொண்டு நிறுவனங்கள் அறிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை2

நீடித்துச் செல்லும் இனப்பிரச்சினைக்கு நிலையான தீர்வு ஒன்றைக் காணும் வகையில் அரசும் - தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு அமைவாக மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும். இதுவே பொது மக்களின் கருத்தாக உள்ளது.

- இவ்வாறு அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் விடுத்துள்ள மே மாதத்துக்கான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய தேவையும் மக்களின் விருப்பமும் யாதெனில் அரசும் விடுதலைப் புலிகளும் பேச்சுக்களை ஆரம்பித்து மக்களின் அபிலாஷைகளை உள்ளடக்கும் விதத்தில் செயற்படக் கூடியதும், ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான தீர்வொன்றுக்கு வழிகோலுவதாகும் என்று அந்த அறிக்கையில குறிப்பிடப்பட்டுள்ளது.

மே மாதத்தில் வடபகுதியில் நிகழ்ந்துள்ள பல்வேறு முக்கிய நிகழவுகள் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. அவைகளில் சில வருமாறு:-

★ பூம்புகார், நாவலடி, மணியந்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில உள்ள வீடுகளின் உரிமையாளர்கள் ஆவணங்களைச்சமர்ப்பிக்கும் பட்சத்தில் அவ்வீடுகளுக்கு வாடகை வழங்குவதற்கு 516 ஆவது இராணுவ பிரிகேட் தீர்மானித்துள்ளது. குறிகாட்டுவானுக்கும்- நெடுந்தீவுக்கும் இடையில் சீரான படகுச்சேவை இல்லாமையினால் நெடுந்தீவு மக்கள் பெருங் கஷ்டங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

★ யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் வாகனப்போக்குவரத்து அதிகரித்துள்ளதாலும், வீதியின் இரு பக்கமும் வாகனங்கள் நிறுத்தப்படுவதாலும் அடிக்கடி வாகனவிபத்துக்கள் ஏற்படுகின்றன. இராணுவம் நிலை கொண்டிருப்பதால் பஸ் நிலையம் வரை செல்லும் மணிக்கூட்டுக் கோபுர வீதி திறந்துவிடப்பட வேண்டும். அதன்மூலம், போக்குவரத்து சீர்ப்படுத்தப்படுவதுடன் பொது மக்களுக்கும் சௌகரியமாக இருக்கும்.

★ சாவகச்சேரி மருத்துவமனையில் 55 லட்சம் ரூபா செலவில அமைக்கப்பட்டுள்ள பிரசவ விடுதி ஆசிய அபிவிருத்தி வங்கியின் உப தலைவர் விக்கினி ஜின்னால் திறந்து வைக்கப்பட்டது. இந்தத் திட்டத்திற்கு ஜி.ரி.இசற், ஏ.டி.பி. மற்றும் நெதர்லாந்து அரசு ஆகியன நிதியுதவி வழங்கியிருந்தன.

★ தென்மராட்சியில் மறவன்புலோ, கைதடி பகுதிகளில் இதுவரை இராணுவம் குடிகொண்டிருந்த பகுதிகளில் குடியமர்ந்துள்ள மக்கள் மலசல கூட வசதிகள் இன்றிக் கஷ்டமுறுகின்றனர்.

இவர்கள் இயற்கைக் கடன் கழிபதற்கு அருகில் உள்ள புதர்காடுகளைப் பயன்படுத்துவதால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது. எழுவைதீவு மக்கள் தங்கள் பகுதியிலுள்ள பிரதான சுகாதார மையத்திற்கு ஒரு வாரத்தில் ஒரு தினத்திலாவது வைத்தியா ஒருவரை அனுப்பி வைக்கும்படி சுகாதாரத் திணைக்களத்தைக் கோரியிருக்கின்றனர்.

★ உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களுக்கான உலர் உணவுகள் நிறுத்தப்பட்டுள்ள விடயம் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது. இந்த விடயம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் பணிப்பாளர் ஹரீம பீரிஸிடம் எடுத்துக் கூறப்பட்டு உலர் உணவு தொடர்ந்து வழங்கப்பட வேண்டுமென்பதும் வலியுறுத்தப் பட்டது.

★ விவசாயத்துக்குரிய பெரும்பகுதி நிலம் உயர்பாது காப்பு வலயத்தில் இருக்கின்றது. தமது ஜீவனோபாயத்துக்காக இந்த நிலங்களில் விவசாயம செய்வதற்கு அனுமதிக்கப்பட வேணடும் என்று விவசாயிகள் நெடுங் காலமாகக் கோரிவருகின்றனர். (ப)

# ரவிக்குப் பிணை வழங்குவதா? அடுத்த செவ்வாயன்று தீர்ப்பு!

கொழும்பு,ஜூலை2

முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு முன்பிணை அனுமதி வழங்குவதற்கு அரசதரப்பு சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் ஆட்சேபனை தெரிவித்தனர்.

அதேவேளை, ரவி கருணாநாயகவுக்கு எதிராகச் சோடிக்கப்பட்ட ஓர் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையே இது. இவ்வாறான பல விடயங்களுக்கு ஏற்கனவே முன்பிணை அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. எனவே, ரவி கருணாநாயக்கவுக்கும் முன்பிணை அனுமதி வழங்கவேண்டுமென அவரது சட்டத்தரணிகள் வாதிட்டனர்.

இதுசம்பந்தமாக மூன்றுமணிநேர வாதப்பிரதி வாதங்களைத் தெரியப்படுத்த, கோட்டை நீதிவான் தீர்ப்பு வழங்குவதை ஜூலை ஆறாம் திகதி வரை ஒத்திவைத்தார்.

ரவிகருணாநாயக்கவுக்கு முன்பிணை அனுமதிகோரித் தாக்கல்செயயப்பட்ட மனு நேற்றுமுன்தினம் காலை கொழும்பு கோட்டை நீதிவான முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. காலை 10.30 மணிமுதல் பிற்பகல் 1.00 மணிவரை இம்மனு மீதான விவாதங்கள் இடம்பெற்றன.

கடந்தவெள்ளிக்கிழமை இம்மனு நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டபோது இதுசம்பந்தமாகச் சட்டமா அதிபரின் ஆலோசனையைச் சமர்ப்பிக்கும்படி பொலீஸாருக்கு உத்தரவிட்டிருந்த நீதிவான், மனுமீதான தீர்ப்பு வழங்குவதை நேற்றுமுன்தினம் வரை ஒத்திவைத்திருந்தார்.

செவ்வாயன்று மீண்டும் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டபோது சட்டமா அதிபரின் ஆலோசனையைத் தாங்கள பெற்றுள்ளனர் எனவும், முன்பிணை வழங்குவதைச் சட்டமா அதிபர் ஆட்சேபிக்கின்றார் எனவும் பொலீஸ் தரப்பில் கூறப்பட்டது.

ரவிகருணாநாயக்கவின் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணிகளான கே.என்.சொக்ஸி, காளிங்க ஹிந்த திஸ்ஸ ஆகியோர் பொலீஸாரின் கூற்று ஒருபக்கம் சார்பானது எனக்கூறினர். அரசியல்வாதிகளின் தூண்டுகோலின் பேரில் தாக்கல் செயயப்படும் ஒருவழக்கு இது. அரசியல் பழிவாங்கும் நோக்கில் மேற்கொள்ளபபடும் முயற்சி எனவும் சுட்டிக்காட்டினர்.

மேலும், இம்மாதிரியான சம்பவங்களுக்கு ஏற்கனவே முன்பிணை அனுமதி வழங்கப்பட்டிருந்த பலவிடயங்களையும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இருதரப்பினரதும் வாதப்பிரதிவாதங்களை அவதானித்த நீதிவான், இம்மனுமீதான தீர்ப்பை ஜூலை ஆறாம் திகதி வழங்குவதாகக் கூறி வழக்கை ஒத்திவைத்தார்.

இதேவேளை, கடந்த வெள்ளிக்கிழமை இம்மனுமீதான விசாரணை ஒத்திவைக்கப்பட்ட பின் முன்னாள் அமைச்சர்களான பேராசிரியர் ஜ.எல். பீரிஸ், டாக்டர் ராஜித்த சேனாரத்ன ஆகியோர் என்னைச் சந்தித்து உரையாடினர் என உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் ஸ்ரீநாத் வெதிசிங்க உண்மைக்கு மாறாகக் குறிப்பிட்டுள்ளார். இது அப்பட்டமான ஒருபொய் மட்டுமல்லாமல் நீதிமன்றத்தை அவமதிக்கும் ஒருசெயலாகும். இவரது நடத்தை தொடர்பாகப் பொலீஸ்மா அதிபருக்கும், சட்டமா அதிபருக்கும், பொலீஸ் ஆணைக்குழுவுக்கும் அறிவிக்கப்படும்.

- என நீதிமன்றில் கூறினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

## மஹியங்கனையில் கோரவிபத்து:

# பஸ் - வான் நேருக்குநேர் மோதல் ஐவர் பலி! 14 பேர் படுகாயம்!!

மஹியங்கனை,ஜூலை2

மஹியங்கனையில் பயணிகள் பஸ் ஒன்றும் வானும் நேருக்கு நேர் விபத்துக்குள்ளானதில் ஐந்து பேர் பலியாகினர்; பதினான்கு பேர்படுகாயமடைந்துள்ளனர். அவர்களில் ஏழு பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

இந்தக்கோர விபத்து நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் மஹிய்ங்கனை - பதுளை பிரதான வீதியில் 28 ஆம் மைற்கல் அருகில் இடம்பெற்றுள்ளது.

கொல்லப்பட்ட அனைவரும் வானில் பயணம் செய்தவர்கள் என்றும், காயமடைந்தவர்களில் பன்னிரண்டு பேர் பஸ்ஸிலும், இரண்டு பேர் வானிலும் பயணம் செய்தவர்கள் என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் பதுளை மற்றும் மஹியங்கனை மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஏழு பேர் கவலைக் கிடமான நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பதுளையில் திருமண வீட்டுக்குச சென்று திரும்பிக்கொண்டிருந்த வானே விபத்துக்குள்ளாகியது என்றும், சேதத்திற்குள்ளான பஸ் மஹியங்கனை டிப்போவுக்குச் சொந்தமானது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(எ-9)

## யாழ்ப்பாணம் உயர்தொழில்நுட்ப நிறுவன மாணவருக்கு!

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் இரண்டாம் அரையாண்டிற்கான முழுநேரப் பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் 5.ஆம் திகதியும், இதன் பகல் நேர வகுப்புகள் 10ஆம் திகதியும் ஆரம்பமாகவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-6)

## மத்திய வங்கி ஆளுநர் நியமனம்

கொழும்பு,ஜூலை2

மத்தியவங்கியின் புதிய ஆளுநராக ஹேலிஸ் குறூப் கம்பனிகளின் முன்னாள் தலைவர் சுனில்மெண்டிஸ் நியமிக்கப்பட்டுள்ளார். இந்நியமனம் ஜனாதிபதியால் நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

மத்திய வங்கியின் ஆளுநராகக் கடமையாற்றிய ஏ.எஸ்.ஜயவர்த்தனா கடந்த செவ்வாய்கிழமை ஓய்வுபெற்றார். (க)



வல்லிபுரக்குறிச்சியில் உள்ள கவடுவிராய் குளம் நியாப்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு அண்மையில் கையளிப்பு வைபவம் இடம்பெற்றது. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வல்லிபுரம் விவசாய சம்மேளனத் தலைவர் கந்தப்புவிடம் குளத்தைக் கையளிப்பதையும் அருகில் கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் நிற்பதையும் படத்தில் காணலாம். *(படம்: கோண்டாவில் செய்தியாளர்)*

# அந்தப் புறா இறந்தது இப்படித்தான்!

இலங்கையில் முதன்முதலாக வெண்புறா ஒன்றுக்கு மரணவிசாரணை நடத்தப்பட்ட தினத்தைக் குறிப்பிடுக. அது எங்கே? எந்த இடத்தில் நடந்தது?

இவ்வாறான வினாவொன்று எதிர்காலத்தில் பாடசாலைகளில் இடம்பெற இருக்கும் பரீட்சைகளில் ஒரு பரீட்சை வினாவாகக் கேட்கப்பட்டாலும் ஆச்சரியப்பட முடியாது. சில வேளைகளில் பல்வேறு ஊடகங்களால் நடத்தப்படும் அறிவுக் களஞ்சிய வினாவிடை நிகழ்ச்சிகளில் கூட ஒரு வினாவாகக் கேட்கப்படலாம்.

இனி, இந்தப் புறா இறந்துள்ளது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மரண விசாரணையில் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு என்ன என்பதை அறிய வாசகர்களுக்கு ஆர்வமிருக்குமல்லவா?


இதோ அந்தப்புறா பற்றிய கதை! அண்மையில் ஐக்கிய நாடுகளின் ஒருங்கிணைந்த இராணுவத்தின் பயிற்சிப்பட்டறை ஒன்று மலை நாட்டிலுள்ள குக்லேங்க என்ற இடத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அந்த ஆரம்ப விழாவில் முப்படைகளின் அதிகாரிகள் பங்குகொள்ள இருந்ததோடு, பிரதிப் பாதுகாப்பு அமைச்சரான ரத்னசிறி விக்ரமநாயக்கவும் அழைக்கப்பட்டிருந்தார்.

அமெரிக்காவின் பசுபிக் கரைப் பிரதேசக் கட்டளை அதிகாரியான ஜெனரல் ஜேம்ஸ்கம்பெல் பங்குகொண்ட இவ்விழாவுக்கு வந்திருந்த பிரமுகர்கள், ரத்னசிறி விக்கிரம நாயக்காவின் வரவை எதிர்பார்த்தவாறு காத்திருந்தனர். 20 நிமிடங்களின் பின்னர் வந்த ஹெலிகொப்ரர் ஒன்றிலிருந்து அவர் இறங்கினார்.

இந்த விழாவின் ஓர் அங்கமாக 8 வெண்புறாக்களைச் சுதந்திரமாக வான்பரப்பில் பறக்கவிடும் நிகழ்வொன்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இவ்வாறு பறக்கவிடுவதற்காக ரூபா 200 வீதம் 8 வெண்புறாக்கள் ஜா.எல பிரதேசத்தில் இருந்து வாங்கப்பட்டிருந்தன. ஜா.எலவிலிருந்து அதிக தூரத்திலுள்ள குக்குலேகங்கவிலோ அல்லது அதை அண்டிய பிரதேசங்களிலோ வெண்புறாக்கள் விற்பனை செய்யப்படும் இடமொன்று இல்லாதிருந்துள்ளது ஆச்சரியமே.

புறாக்களைப் பறக்க விடுவதற்கான நேரம் வந்ததுமே விழாப் பிரமுகர்கள் அனைவரும் தமது கைகளி



லிருந்த புறாக்களைப் பறக்கவிட்டனர். அந்தோ! பரிதாபம்! ரத்னசிறி விக்கிரமநாயக்கா பறக்கவிட்ட புறா தொப்பென நிலத்தில் வீழ்ந்தது. அவரது முகம் கறுத்துப் போனதைப பற்றி இராணுவ அதிகாரி ஒருவர் பின்னர் விவரித்தார்.

தமக்குச் சுதந்திரம் கிடைத்த மகிழ்ச்சியில் ஏனைய புறாக்கள் வானத்தில் கரணம்போட்டுப் பறந்து மறைந்தன. ஆனால் அமைச்சரின் கைகளிலிருந்த புறா மாத்திரம் இறந்து வீழ்ந்ததன் மர்மம் என்ன?

இந்த வினா இராணுவ அதிகாரிகளைப் பெரும் சிக்கலில் மாட்டிவிட்டது.

இராணுவ உயர் மட்டத்தின் கட்டளைப்படி உடனடியாகப் புறா தொடர்பான மரணவிசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. பிரிகேடியர் தர்மரத்ன உள்ளிட்ட இராணுவத்தின் விசேட விசாரணைப் பிரிவு தொடர்ந்து நான்கு தினங்களாக இந்த விசாரணையை மேற்கொண்டது.

இராணுவ நன்னடத்தைகள் தொடர்பான பொறுப்பதிகாரி பிரிகேடியர் தோறதெனிய, இதற்குப் பொறுப்பானவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிமித்தம் இந்த விசாரணைகளின் முடிவை எதிர்பார்த்துக் காத்திருந்ததாகவும் தெரியவந்தது,

இந்த விசாரணை அதிகாரிகள் பெருமளவு எரிபொருள்களை விரயமாக்கி ஜா.எல புறா விற்பனை நிலையத்துக்கும் குக்லேகங்கவுக்கும் அதையடுத்துக் கொழும்புக்குமாகத் தமது வாகனங்களில் ஓடித் திரிந்தனர். இறுதியாகப் பறக்கிவிடுவதற்குரிய அந்தப்புறாவை அமைச்சரிடம் கையளித்த அதிகாரி சொன்னார், சுமார் 50 நிமிடங்களாக அந்தப்புறா பலரது கைப்பிடிக்குள் இருந்துள்ளது என்று.

இதன்படி, அமைச்சரிடம் கையளிக்கப்பட்ட அந்தப்புறா, அதிக உஷ்ணம மற்றும் பாதிப்புக் காரணமாக இறந்துளளது என்று தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து அந்த விசாரணைக்குழு முடிவுசெய்துள்ளது.

இதற்கமைய இந்தப்புறாவின் மரணம் திட்டமிட்ட செயல் அல்ல என்பது வெளிப்பட்டுள்ளது.

எவ்வாறோ இந்தப்புறா மரணம் கின்னஸ் புத்தகத்திலும் இடம்பெறக் கூடும் எனவும் நம்பப்படுகிறது.

- சரா

உ
கணபதி துணை



# உடுப்பிட்டி சமரபாகு தேவன்குறிச்சி அருள்மிகு கற்பகவிநாயகர் தேவஸ்தான புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ

## மகா கும்பாபிஷேகச் சிறப்பு மலர் - 02.07.2004



## கற்பக விநாயகரின் பொற்பதம் பணிந்து போற்றிடுவோம்

### ஆலய வரலாறு

மரகத மணித்தீவாம் ஈழவளநாட்டின் யாழ்ப்பாணத்தின் வடபாலமைந்த, சங்கிலி மன்னனால் அவனது தளபதிக்கு நிவந்தம் செய்யப்பெற்ற சமரபாகு தேவன் குறிச்சியில் ஆலய விருட்சமாகவிருக்கும் ஆலமரத்தடியில் ஆதிமூலர் வழிபாடு இடம்பெற்றது. தேவன்குறிச்சியில் வாழ்ந்த முன்னோர்களான கற்பகவிநாயகர் அடியார்கள் எம்பெருமானுக்குச் சிறிய ஆலயம் ஒன்று அமைத்து ஆகம முறைப்படி வழிபாடு செய்து வந்தனர்.

இந்தியாவில் இருந்து வேதாகம விற்பன்னர்களான குருமார்களை வரவழைத்து நித்திய, நைமித்திய கிரியைகளைச் சிறப்பாக நடத்திவந்தனர். இந்த ஆலயக் கிரியைகளைச் செய்து வந்த இந்திய குருமார்கள் தாயகம் திரும்பிய பின்னர் வேதாரணிய வழித்தோன்றல்களான சிவஸ்ரீ மகா கணபதிக்குருக்கள் வம்சத்தினர் ஆலய கிரியைகளைப் பொறுப்பேற்று நடத்திவருகின்றனர். மகாகணபதிக்குருக்களின் மறைவின் பின்னர் அவரின் தலைமகனான சிவஸ்ரீ சுப்பிரமணியக் குருக்கள் ஆலய கிரியைகளைத் திறம்பட நடத்திவந்தார். அவரின் மறைவின் பின்னர் அவரின் இளைய புதல்வர் சிவஸ்ரீ தண்டபாணிக தேசிகர் ஆலயக் கிரியைகளைப் பொறுப்பேற்றுச் சிறப்பாக நடத்தி வருகின்றார்.

ஏறக்குறைய 25 வருடங்களுக்குப் பின்னர் ஆலயத்தைப் பாலஸ்தாபினம் செய்து புதிய தோற்றத்துடன் புனர்நிர்மாணம் செய்ய கற்பக விநாயகர் மெய்யடியார்கள் தீர்மானித்து வெகுசிறப்பாக இந்த ஆலயத்தின் திருப்பணி வேலைகளை நிறைவேற்றி உள்ளனர்.

இப்பணியில் இந்த ஊரைச் சேர்ந்த மக்களுடன் "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" எனும் வாக்கிற்கு அமைய வெளிநாடுகளில் தொழில்புரியும் கற்பகவிநாயகர் அடியார்கள் மிக விருப்புடன் இப்பணியில் பங்கேற்றுப் பணத்தை மழையாகப் பொழிந்து ஆலயம் புதுமெருகு பெற அரும்பணியாற்றி உள்ளனர்.

இன்றையதினம் நடைபெறும் மகாகும்பாபிஷேகத்தையிட்டுக் கற்பகவிநாயகர் அடியார்கள் மற்றும் ஆலய பரிபாலனசபையினர், திருப்பணிச்சபையினர் அனைவரும் அகமகிழ்வடைகின்றனர். கற்பக விநாயகரின் பொற்பதம் பணிந்து போற்றிடுவோம்.

## திருப்பணிச் சபையினரின் வாழ்த்துரை

ஆனித்திங்கள் 18ஆம் நாள் இன்று வெள்ளிக்கிழமை 9.15 மணி தொடக்கம் 10.15 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் எமது குல தெய்வமாகிய கற்பக விநாயகருக்குக் கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழா இடம்பெறுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறோம். இந்நிகழ்வில் பற்கேற்கும் குருமார்கள், விநாயகர் அடியவர்கள் மற்றும் பலவகையில் இறைபணி செய்பவர்கள் அனைவருக்கும் எம்பெருமான் அனுக்கிரகம் கிட்டுவதாக.

நடைபெறும் கும்பாபிஷேகம் சிறப்புற நிறைவுபெற எமது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- திருப்பணிச்சபையினர்.

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசி



உடுப்பிட்டி சமரபாகு தேவன் குறிச்சிப் பதியில் எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் கற்பக விநாயகப் பெருமானுக்கு இன்று மகாகும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறுகின்ற மகாகும்பாபிஷேகம் செய்தலும், செய்வித்தலும் புண்ணியப்பேறாகும்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு ஆலய வழிபாடு இன்றியமையாதது. விழாக்களும் கிரியைகளும் மனிதனை மனித நேயத்தோடு வாழ வழிகாட்டுகின்றன. இதனாலேயே "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று நம் சமயம் கூறுகின்றது. இந்நிலையில், உடுப்பிட்டி சமரபாகுதேவன் குறிச்சிப் பதியில் கற்பக விநாயகப் பெருமான் வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பொருட்டு எழுந்தருளி உள்ளார்.

சட்டத்தின் தலைவனாக இருக்கும் விநாயகப் பெருமான் தவறு விடுபவனைத் தண்டித்து மன்னித்து விடும் சுபாவம் உள்ளவர். இங்கு நடைபெறும் கும்பாபிஷேகத்தை அனைத்து மக்களும் தரிசித்துப் பிறவியின் பயனை அனுபவிக்கச் செய்விக்கும் குருமார்களுக்கும் மக்களுக்கும் இறைவன் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாம் குருமஹா சந்நிதானம்,
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

## பிரதிஷ்டா பிரதமகுருவின் அருளாசி

கற்பக விநாயகர் அடியார்களே!

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஆன்றோர் வாக்கு. உடுப்பிட்டி சமரபாகுதேவன் குறிச்சி அருள்மிகு ஸ்ரீகற்பகவிநாயகர் தேவஸ்தான புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ மகாகும்பாபிஷேக நிகழ்வானது இன்று வெள்ளிக்கிழமை காலை நடைபெறுவது புண்ணியப் பேறாகும்.

மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதற்கு ஆலய வழிபாடு சாலச்சிறந்தது. இக்கும்பாபிஷேகமானது நினைத்தவுடன் நடைபெறக்கூடிய காரியமல்ல. பல வருடங்களின் பின்பு கற்பக விநாயகப்பெருமான் ஆலயக் குடமுழுக்குவைபவம் இன்று நடைபெறுகின்றது. அனைத்தும் அவனருளாலே அவன் ஆணைப்படி நடைபெறுகின்றன. ஒரு கும்பாபிஷேகம் என்று கேள்விப்படுவதே புண்ணியமாகும். அந்தப் பாக்கியத்தை எம் கண்ணால் காணும் பேறு மக்களுக்கும் எமக்கும் ஆனந்தகோடி சந்தோஷம் கிடைக்கின்றது.

கல்வி, செல்வம், வீரம் போன்ற அனைத்து மங்கலங்களும் கிடைக்கவும் எம்பெருமான் மகாகும்பாபிஷேகம் இனிது நிறைவேறவும் நாம் அனைவரும் இறைவனைப் பிரார்த்திப்போம். இதில் பங்குகொண்டு புலம்பெயர்ந்த நாட்டிலும், உள்நாட்டிலும் இருந்து ஆலயப்பணி செய்தவர்களும் மற்றும் இப்பணி இனிதே நிறைவேற அரும்பணி புரிந்த அடியவர்கள், குருமார்கள், சிற்பாசாரியார்கள ஆகியோரும் பாராட்டப்படவேண்டியவர்கள்.

அனைத்து மக்களுக்கும் கற்பகவிநாயகன் பேரருள் பாலிக்கப் பணிந்து விழா சிறப்புற நடந்தேறப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றேன்.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"
"சர்வே ஜெனலா சுகினோ பவந்து"

"சிவாகம சித்தாந்த ஞானதேசிக பானு"
"பிரதிஷ்டாலங்கார சித்தாந்த ஸாகரம்"
"பிரதிஷ்டா சிரோமணி"
சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிகதேசிகர்
சமாதான நீதிபதி, பிரதமகுரு, வல்வை ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோவில்,
அகில உலக சைவக்குருமார் சம்மேளனம்,
வேதாரணிய வழி சைவக்கிரியைமுறைப் பூசகர்.

மலர் ஆக்கம்:
தேவன்குறிச்சி இளைஞர்கள்.

## கற்பக விநாயகர் தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகிறோம்:

கோபி கிருஷ்ணா
பல்பொருள் வாணிபம்
உடுப்பிட்டிச் சந்தி,
உடுப்பிட்டி.

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
வல்லை வீதி,
உடுப்பிட்டிச் சந்தி.
T.P.: 021 226 3894

செல்வா வீடியோ & போட்டோ
கரணவாய் மத்தி,
நவிண்டில்.

மதுஷன் ஸ்ரோர்ஸ்
சந்தை வீதி, உடுப்பிட்டி.
மதுஷன் கொமினிக்கேசன்
யாழ். வீதி, உடுப்பிட்டி.
T.P.: 021 226 3468, 0602213080, 0602213096

எமரல்ட்
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
யாழ். வீதி,
உடுப்பிட்டி.

கிருபா ஸ்ரோர்ஸ்
(சந்தை உட்புறம்) உடுப்பிட்டி,
கிருபா கிறேசர்
யாழ். வீதி, வல்லை.

சாயி கொமினிகேசன்
T.P.: 021 226 4081, 0602212489
சாயி கிறைண்டிங் மில்
இலக்கணாவத்தை, உடுப்பிட்டி.

சக்தி ட்ரவல்ஸ் (ரவி)
இல. 77 1/1, றொபேர்ட் குணவர்த்தன
மாவத்தை, கிருலப்பனை,
கொழும்பு - 05.
T.P.: 0777 763560

கிங் மினி மார்ட்
- 24 மணிநேர சேவை -
T.P.: 001416 531 5675
ரொறன்ரோ, கனடா.
இணையத்தள முகவரி: www.king mihimart.com

கவிதானி
வீடியோ & போட்டோ
இலக்கணாவத்தை,
உடுப்பிட்டி.
T.P.: 0776080708
(33656) (24-14-19)

ஏசியன் பெயின்ற்ஸ் லங்கா லிமிடெட்
ஸ்தாபனத்தின்
வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்:
யாழ்ப்பாண இரும்பகம்
32, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
☎ 021 222 7028

# மனவிருத்தி பாதிக்கப்பட்ட சிறார்க்கு வாழ்வு அளிக்கச் சிவபூமி பாடசாலை

**மனவிருத்தி பாதிக்கப்பட்ட சிறார்களின் நன்மைகருதி சிவபூமி அறக்கட்டளையினால் கோண்டாவில் அரசடிப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் இன்று 'சிவபூமி பாடசாலை திறந்துவைக்கப்படுகின்றது. அத்தகைய பாடசாலை அவசியம் குறித்துக் கட்டுரை வலியுறுத்துகிறது.**

**போர்** எமக்கு வலிந்து தந்தவைகளில் மனித உயிரிழப்பு, அங்க அவயவ இழப்பு, உளப் பாதிப்பு இப்படித் துன்பதுயரங்கள் ஏராளம்.

கடந்த இரண்டு வருடங்களாக சமாதானத்தின் சாயல் காற்று எங்களது தேசத்திலே வீசிக் கொண்டிருக்கிறது. ஆடுகிறோம், பாடுகிறோம், துள்ளிக் குதிக்கிறோம், கடந்தவைகளை மறந்து புதுவாழ்வு காணத் துடிக்கின்றோம்.

வீதிகளைப் புழுதிதட்டி தார் ஊற்றுகிறார்கள். வளம் தரும் விருட்சங்களின் உயிர்களைப் பறித்து மாட மாளிகைகளை நிர்மாணிக்கின்றனர். சமூக ரீதியில் சகலவற்றிலுமிருந்து மீண்டு எழக்காத்திருக்கின்ற வறிய கிராமங்களில் கூட தெய்வ அச்சுறுத்தலை மறைமுகச் சாட்டாக வைத்து கோடிக்கணக்கான ரூபாய்களை எட்டுகின்ற அளவில் நிதியினைத் திரட்டி, இருக்கின்ற கட்டடங்களை இடித்து ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்கிறார்கள். தூர்ந்துபோன மனங்களைக் கட்டியெழுப்ப யாருமே தயாராக இல்லை. ஆனால், சில ஆலயங்கள் ஏழைச்சிறார்களுக்குக் கல்வியூட்டல், ஏழை நோயாளிகளின் சிகிச்சைக்குப் பணம் கொடுத்தும் உதவுகிறார்கள். இதை இந்தப் பகுதியில் மறுப்பதற்கில்லை.

இவற்றுக்கெல்லாம் முன்னுதாரணமாக இன்று கோண்டாவில் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை திறந்து வைக்கப்படுகின்றது. இந்தச் செய்தி சக்கரைப் பந்தலிலே தேன் மாரி பொழிந்து போல எங்களது உள்ளங்களில் உவகை பொங்க வைக்கிறது.



யாருமே செய்ய நினைக்காத அளப்பரிய சேவைகளைச் செய்ய சிவபூமி அறக்கட்டளை நிலையத்தினர் மனமுவந்து முன்னின்று உழைக்கிறார்கள்.

இன்றைய இளம் சமூகம் வெளிநாட்டுப் பணத்தின் வருகையால் தலைகீழாக ஆடிக்கொண்டிருக்கிறது. கையில் 'ஹான்ட் போனும்', கழுத்தில் தங்கக்கயிறும், சவாரிவிட மோட்டார் சைக்கிள்களும் பெண்களை மயக்குவது மட்டுமே பருவவயதினர் சொத்து என்ற நிலையில் அதலபாதாளத்தை நோக்கி சென்றுகொண்டிருக்கிறது. கலை, கலாசாரம், பண்பாட்டு விழுமியங்கள் சீரழிந்து போகிறது என்று பெரியவர்களும், ஊடகங்களும் எச்சரிக்கை செய்து கொண்டிருக்க எதுவித மாறுதலுமின்றி மரணத்தை நோக்கி இளைய தலைமுறை விரைந்து சென்றுகொண்டிருககிறது. இவற்றிற்கிடையே இப்படியொரு செயற்பாடு மகிழவைக்கிறது. இதைப் பார்த்துப் பின்பற்ற யார் உளர்.

யுத்த சுடு குழாய்கள் கக்குகின்ற நச்சுக்காற்று மூச்சுக்காற்றோடு கலப்பதாலும், அவை தள்ளுகின்ற குண்டுகளின் வெடியோசை இதயங்களை அதிரவைப்பதாலும் உடல், உள தாக்கத்திற்கு அனைவரும் ஆளாகின்றனர். இவற்றுள் அதிகமாகக் கர்ப்பிணித் தாய்மார்கள் பாதிப்புறுவதால் பிறக்கின்ற குழந்தைகள் சித்த சுவாதீனமாகவே பிறக்கின்றனர்.

யுத்தங்கள் சப்பிய குழந்தைகளாக சமூகத்தில் இவர்கள் புறக்கணிககப்படுகிறார்கள். இவர்களுக்குரிய வசதிவாய்ப்புக்கள் உரியமுறையில் வழங்கப்படுவதில்லை. இந்த நிலை இவர்களைக் குடும்ப அங்கத்தவர்களாகக் கொண்ட குடும்பங்களில் நிலவுவதையும் காணமுடிகின்றது. இவர்களை அரவணைக்க ஏன் தயங்குகிறீர்கள்.

சரியான புரிந்துணர்வு, தெளிவற்ற அறிவு, குறுகிய மனப்பான்மை, வலுவான பாசப்பிணைப்பு இன்மையே காரணம். இத்தகைய சிறுவர்களையோ அல்லது சிறுமிகளையோ புத்தி மத்திமமானவர்கள் என்றோ தப்பாக எடைபோட்டு விடாதீர்கள்.

எங்களது உடன்பிறப்பு, எங்களைப் போன்று கல்வி கற்கும் உரிமை, சாதாரண மனிதனைப் போன்று அவர்களுக்குள் எழுகின்ற ஆசை இவற்றையெல்லாம் பூர்த்திசெய்ய வேண்டுமென்று நினைக்கின்ற மனசு எல்லோருக்கும் வேண்டும். இவர்களும் மனிதர்கள் எங்களோடு வாழவே பிறந்தவர்கள்.

வெளிநாட்டில் இருந்து வந்து எமது பிரதேசங்களில் காலூன்றிய சிறுவர் அமைப்புகள் ஆங்காங்கே கிள்ளித் தெளித்துவிட்டு இணையத்தளங்களிலும் மற்றும் பிற ஊடகங்களிலும் தமது பெயர் முகவரிகளை படம் போட்டுக் காட்டிக் கொண்டிருக்கின்றன.

இங்கு வெறும் பேச்சுக்காகவோ, புகழுக்காகவோ செயற்படுவதைத் தவிர்த்து சிறுவர் நலன்களில் அக்கறை செலுத்துங்கள். உளவிருத்தி குறைந்த சிறுவர்களை இன்னும் ஒருபடி மேலே தூக்கி வைக்க உதவுங்கள்.

இத்தகைய பணியில் சிவபூமி அறக்கட்டளை நிலையத்தினர் சிறுவர் மனவிருத்திப் பாடசாலை ஒன்றை நிறுவி அவர்களுடைய குறைகளை நிவர்த்திசெய்து ஒவ்வொரு சிறுவரது அடிப்படை உரிமையாகிய கல்வியூட்டலை வழங்க முன்வந்திருப்பது போற்றத்தக்கது.

சமயச்சொற்பொழிவுகள் நிகழ்த்துவதனால் கிடைக்கும் அன்பளிப்புக்களின் மூலம் பல்வேறு அறப்பணிகளை நிறைவேற்றிவரும் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் மேற்படி மனவிருத்திப் பாடசாலையை நிறுவுவதில் பெரும் பங்குவகித்துள்ளார்.

அரசாங்கத்தையோ, அரசார்பற்ற நிறுவனங்களையோ சாராது அறப்பணி செய்து கிடைக்கப்பெற்ற நன்கொடை மூலம் இவ்வாறானதொரு நற்பணி செய்து வருவது போற்றுதற்குரியது.

**சுதேசிகன்**

## கட்டாக்காலி நாய்களை அழிக்க உடன் நடவடிக்கை அவசியம்

### மாநகர ஆணையாளர் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூலை2

கட்டாக்காலி நாய்களைத் துப்பாக்கி மூலம் சுட்டு அல்லது நஞ்சூட்டி அழிக்க உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இவ்வாறு யாழ். மாநகர சபை ஆணையாளர் இ.இராமலிங்கம் மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளரைக் கேட்டுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் தற்போது விசர்நாய்த் தொல்லை அதிகரித்துள்ளது. விசர்நாய்க் கடிக்கு இலக்காவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது.

இதற்கு உடன் தீர்வு காணப்படாவிட்டால் விசர்நாய்க் கடியினால் இறப்போர் தொகை அதிகரிக்கும் என மாநகரசபை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தற்போது நாய்களை அழிப்பதற்கு தென்பகுதியில் விஷவாயு, நஞ்சூட்டுதல் எனப் பல்வேறு வழிவகைகளையும் மேற்கொண்டு உடன்கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருகின்றனர்.

இங்கு மாற்று ஏற்பாடுகள் இல்லாததால் கட்டாக்காலி நாய்களின் பெருக்கம் பெரும் தொல்லைகளை ஏற்படுத்திவருவதாக ஆணையாளர் இ.இராமலிங்கம் மேலும் தெரிவித்தார். (ஒ185)

## புலவரின் சிலை புனரமைப்பு

வலி.தெற்கு,ஜூலை2

சண்டிலிப்பாயில் அமைக்கப்பட்டுள்ள சின்னத்தம்பிப் புலவரின் சிலை புனரமைக்கப்பட்டுள்ளது.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் தலைசிறந்து விளங்கிய புலவர்களுள் சின்னத்தம்பிப் புலவரும் ஒருவராவர். இவரின் ஞாபகார்த்தமாக சண்டிலிப்பாய் கல்வளைக் கிராமத்தில் கல்வளை விநாயகர் ஆலய முன்றிலில் அவரது சிலை நிறுவப்பட்டிருந்தது.

கடந்த கால யுத்த அனர்த்தங்களின்போது இச்சிலையும் இடிக்கப்பட்டு சேதமாக்கப்பட்டிருந்தது.

இச்சிலையினைக் கிராமத்து மக்கள மீளவும் புனரமைத்து சின்னத்தம்பிப் புலவரை நினைவுகூர்ந்து வருகின்றனர்.

## விதவைகள், சிறுவர் மேம்பாட்டுக்கு விசேட திட்டங்கள் நடைமுறை

யாழ்ப்பாணம்,ஜூலை2

கடந்த கால யுத்தம் காரணமாகக கணவனை இழந்த பெண்கள், ஆதரவு இழந்த சிறுவர்கள் ஆகியோரின் நலன்களைப் பேணும் நடவடிக்கைகளை யாழ்.மாவட்ட பெண்கள் அபிவிருத்தி நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

இதில் முதற்கட்டமாகக் கணவனை இழந்த பெண்கள் தொடர்பான விவரங்கள் திரட்டப்பட்டு அவற்றின் அடிப்படையில் உதவித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

கணவனை இழந்த பெண்களுக்கென வியாபாரம், சிறுகைத்தொழில் போன்ற உதவித் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

இதேவேளை போர்க்காலங்களில தாய் தந்தையரை இழந்து வறுமை நிலையில் ஆதரவற்றுள்ள சிறுவர்களை இனங்கண்டு அவர்களுக்குப் பாதுகாப்பு, கல்வி ஆகியவற்றை வழங்கும் செயற்பாடுகள் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நாவாந்துறைப் பகுதியில் பெற்றோரை இழந்த சிறுவர்கள் நால்வர் இனங்காணப்பட்டு முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, கைவேலி செந்தளிர் சிறுவர் இல்லத்தில் இணைக்கப்பட்டுள்ளனர்.

இதே போன்று பல்வேறு செயற்றிட்டங்களைப் பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனம் யாழ். குடாவில் செயற்படுத்தவுள்ளது. (ஒ-12)

## நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம்,ஜூலை2

பேராசிரியர் அ.துரைராஜா ஞாபகார்த்த நினைவுப் பேருரை நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் "பொறியியற் கல்வி" என்ற தலைப்பில் மொறட்டுவப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் தயானந்த எஸ்.விஜேசேகர பேருரை நிகழ்த்துவார்.

## நாவலர் பாலர் பாடசாலை சுதுமலையில் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை2

சுதுமலை ஈஞ்சடியில் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நாவலர் பாலர் பாடசாலை திறந்துவைக்கப்படவுள்ளது.

மேற்படி பாடசாலையின் நிர்வாக சபைத் தலைவர் இ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனும், சிறப்புவிருந்தினராக பேராசிரியர் அ.சண்முகதாஸும் கௌரவ விருந்தினர்களாக இந்திரன் காராளசிங்கம, திருமதி கமலா பத்மநாதன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் நிகழ்த்தவுள்ளார்.

வாழ்த்துரைகளை யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறைத் தலைவர் மா.சின்னத்தம்பி, பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் எஸ்.கே.சண்முகநாதன், சண்டிலிப்பாய் அரசியல்துறைப் பொறுப்பாளர் ந.அன்பாளன், உடுவில் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன், இளைப்பாறிய உப அதிபர் சி.சந்திரராசா, சமாதான நீதவான் ச.தம்பித்துரை ஆகியோர் வழங்கவுள்ளனர். நன்றியுரையை சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியர் கந்தையா ஸ்ரீநந்தகோபன் நிகழ்த்துவார்.

நிகழ்வின் இறுதியில் மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (எ-10)

## முழுநிலாநாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை2

அகவொளி குடும்ப வளத்துணை நிலையத்தின் ஏற்பாட்டில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு மேற்படி நிலையத்தில் நடைபெறவுள்ள முழுநிலா நாள் கருத்தரங்கில் முழுநிலா நாள் 'சாந்த வழிமுறைகளினூடாக நெருக்கீடுகளும் தீர்வுகளும்' என்னும் தலைப்பில் யாழ். மருத்துவபீடத் தொழில்நுட்பவியலாளர் திருமதி சாவித்திரிதேவி இரவிச்சந்திரன் கருத்துரை வழங்கவுள்ளார. (-10-ரி)



**யாழ். நகரில் இயங்கிவரும் அன்னை நாகா பூட்சிற்றியில் இரண்டாயிரம் ரூபாவிற்கு மேல் பொருள்களைக் கொள்வனவு செய்த வாடிக்கையாளர்களுக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு நாகா பூட்சிற்றியில் இடம்பெற்றது.**

**இச்சீட்டிழுப்பின் போது யாழ். மாவட்ட முன்னாள் மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் அதிர்ஷ்டசாலியைத் தெரிவுசெய்வதையும் வெற்றி பெறுப வர்களுக்கு வழங்கப்படவுள்ள ரீ.வி.எஸ். மோட்டார் சைக்கிளையும் படத்தில் காணலாம்.**

## அன்னைநாகா "பூட்சிற்றி" சீட்டிழுப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை2

யாழ்.நகரில் இயங்கிவரும் அன்னை நாகா 'பூட்சிற்றி' யில் இரண்டாயிரம் ரூபாவிற்கு மேல் பொருள்களைக் கொள்வனவு செய்த வாடிக்கையாளர்களுக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு நாகா 'பூட்சிற்றி' யில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் முதல் பரிசாக ரீ.வி.எஸ் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டது. மேலும் 20 ஆறுதல் பரிசில்களுக்குரிய அதிர்ஷ்டசாலிகள் தெரிவுசெய்யப்பட்டனர். தெரிவுசெய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு.

முதல் பரிசான ரீ.வி.எஸ். மோட்டார் சைக்கிள் கொக்குவில் கிழக்கு, கொக்குவிலைச் சேர்ந்த கே.ஏ.சிறீகிருஷ்ணராஜுக்குக் கிடைத்தது.

இருபது ஆறுதல் பரிசுகளைப் பெறும் அதிர்ஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்பட்டோர் விவரம் வருமாறு:-

என்.எஸ்.சச்சிதானந்தன்(புதிய சந்தையடி, யாழ்ப்பாணம்), யுரசுலன் (பிறவுண் றோட்,யாழ்.), சி.ரான்ஸ்பிறின்டன் ( ஓடக்கரை வீதி, குருநகர்), சுதாகரன்(கனகரத்தினம் மகா வித்தியாலய வீதி,யாழ்.), கே.ஜெயராசன்(விளையாட்டு மைதான வீதி, கல்வியங்காடு)

திருமதி வாசுகி சேவியர் (அச்சுவேலி தெற்கு), அருளானந்தம் இராஜசேகரி(4ஆம் குறுக்குத்தெரு,யாழ்.), நா.பாலமுரளி(யாழ்.பல்கலைக்கழக மக்கள் வங்கி), ஏ.ஜெயக்குமார் (இருபாலை, கோப்பாய்), நாகநாதன் திருச்செல்வி(மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்)

சோதி (உசன், மிருசுவில்), சி.மோகன் ராஜ்(யாழ்.சத்திரச்சந்தி), இ.இந்திரகுமார்(ஜேர்மனி),எஸ். ஸ்ரீபராசக்தி(புத்தூர் மேற்கு, புத்தூர்), திருமதி ஜெய்சி நித்தியானந்தன் (நவாலி தெற்கு, மானிப்பாய்)

இ.சிவனேசன்(சுழிபுரம் மேற்கு), இராமதேவன் தமிழகி(கந்தரோடை, சுன்னாகம்), ஏ.சுமதி (வைத்தியசாலை வீதி), ஆர்.நிசாந்தன் (பிரதான வீதி, யாழ்), யூலியான்அபிஸ்ரன் (புறமோட்டஸ் என்ஜினியறிங், பருத்தித்துறை வீதி, நல்லூர்). (எ-ரி)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

T.V.S விக்ரர் G.L மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 57/30, ஸ்ரான்லி வீதி (இலங்கை வங்கி முன் ஒழுங்கை), யாழ்ப்பாணம். (33671)

யாழ்.சிவப்பிரகாசம் வீதியில் வேப்பமரம் ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: அ.பரமநாதன், 38, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (33660)

## வீடு விற்பனைக்கு

யாழ். பலாலி வீதியில் பரமேஸ் வராச் சந்திக்கு அருகில் 1½ பரப்புக் காணியில் அமைந்த சகல வசதிகளு டன் கூடிய மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: விளம்பர இல. 2312, மே/பா. உத யன், யாழ்ப்பாணம். (சி-35933)

## தவறிவிட்டது

மயிலணி, சுன்னாகத்தைச் சேர்ந்த பிரகாசம் ஜெயவதனன் என்பவரு டைய தேசிய அடையாள அட்டை (இல.740304089V), சாரதி அனுமதிப் பத்திரம் என்பன முகமாலைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் காரைநகருக் கும் இடையில் 30-06-2004 புதன் கிழமை தவறிவிட்டன. கண்டெடுத்த வர்கள் சுழிபுரம் வரதலக்சுமி வெதுப் பகத்தில் ஒப்படைத்துதவவும். சன் மானம் வழங்கப்படும். (33658)

கரந்தன், நீர்வேலியைச் சேர்ந்த இரத்தினம் பேரின்பராணி எபவரு டைய தேசிய அடையாள அட்டை (இல.535620105V), பரமலிங்கம் பேரின்பராணி என்பவரின் விசேட அடையாள அட்டை (இல. 090301317S) என்பன தவறிவிட்டன. கண்டெடுத்த வர்கள் இராசரத்தினம் பரமலிங்கம், கரந்தன், நீர்வேலி என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும்.
T.P.077 6258805. (33653)

## ஆரம்பவைபவம்

யாழ்.பல்கலைக்கழகத்தில் ஆங் கில ஆசிரியர்களுக்கான ஆங்கில டிப்ளோமா கற்கைக்குப் பதிவுசெய்த வர்களுக்கான ஆரம்பவைபவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்பல்கலைக்கழகத் தின் நூலகக் கேட்போர் கூடத்தில் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகன தாஸ் தலைமையில் நடைபெறும்.

## பிணைத்தொகை பறிமுதல்

வழக்கொன்றின் சந்தேக நபர் தலைமறைவாகியுள்ளதால் அவருக்கு வழங்கப்பட்ட பிணைத் தொகையா கிய 10 ஆயிரம் ரூபாவைப் பறிமுதல் செய்ய சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டது.

வழக்கொன்றின் சந்தேகநபரான சிவநாதன் சகிதரன் என்பவரை 10ஆயி ரம் ரூபா பெறுமதியான ஆட்பிணை யில் செல்ல நீதிமன்றம் முன்னர் அனுமதி வழங்கியிருந்தது.

பிணையில் சென்ற சந்தேக நபர் வழக்கு விசாரணைகளுக்கு வரத் தவறியதால் பகிரங்க பிடியாணை பிறப்பித்ததுடன் பிணைத் தொகையான 10 ஆயிரம் ரூபாவினைப் பறிமுதல் செய்யுமாறும் நீதிமன்றம் உத்தர விட்டது. (ஒ-117)

## கடை வாடகைக்கு உண்டு

பிள்ளையார் கடைக் கட்டடக் களஞ்சியத்தில் ஒரு கடை வாடகைக்கு உண்டு.
தொடர்பு:
பிள்ளையார் களஞ்சியம், மானிப்பாய்.
0212227543 (33648)(35)

---

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## PROFESSOR ALAGAIAH THURAIRAJAH MEMORIAL LECTURE

Date & Time: 03rd July 2004 at 09.00 a.m.
Venue: Kailasapathy Auditorium, University of Jaffna.
Delivered by: Professor Dayantha S.Wijesekera
Vice-Chancellor, University of Moratuwa.
DEC(Eng.); PhD(Edin.); DUniv(Ouuk.); D.Litt(Ousl)
Title: "ENGINEERING EDUCATION"
(The need to Engineer Education)

Those who are interested are Cordially invited

(சி-35923)(34-21-14-19) **Vice - Chancellor.**

---

## உடனடி வேலை வாய்ப்பு

01) தொலைபேசி இயக்குநர்.
02) விற்பனையாளர்.
*(மின்சாரப் பொருள்களில் அனுபவம் உள்ளவர்)*

05.07.2004 வரைக்கும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிக்கு முழு விவரங்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.

**New Tone Electrical,**
**No.: 442, 440, Hospital Rd, Jaffna.**

(சி-35946) (14-19-21) T.P.: 2222037

---

## வாழ்த்துகின்றோம்

செஞ்சொற்செல்வர் **திரு.ஆறு.திருமுருகன்** அவர்களின் அரும்பணிகளில் ஒன்றாக இன்று கோண்டாவில் கிராமத்தில் உதயமாகின்ற *"சிவபூமி"* சிறுவர் மனவிருத்திப் பாடசாலை வளர்ந்தோங்கி பல்லாண்டு காலம் அரும்பணியாற்றவேண்டும் என வாழ்த்து கின்றோம்.

**வாழ்வகக் குடும்பம்.**

வாழ்வகம் - விழிப்புலன் வலுவிழந்தோர் இல்லம், சுன்னாகம்.
(33680)(34-14-19)

---

## இரவு மேற்பார்வையாளர்கள்

பத்திரிகை நிறுவனத்தில் இரவில் இயங்கும் பிரிவுகளின் பணிகளை மேற்பார்வை செய்வதற்கும், ஒன்றிணைத்து விரைவுபடுத்துவதற்கும் முன் அனு பவமும கல்வித்தகுதியும் உடையோரிடமிருந்து விண் ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள், நிறைந்த உடல் ஆரோக் கியம் உள்ளவர்களாகவும், பணியாளர்களை நிர்வ கிக்கும் திறமை உள்ளவர்களாகவும் இருக்கவேண் டும்.

அச்சு இயந்திரங்கள் தொடர்பான ஓரளவு அறிவும் அனுபவமும் உள்ளவர்கள் விரும்பப்படுவர்.

யாழ். மாநகரசபைப்பகுதிக்குள் வசிப்பவர் களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

முழுமையான சுயவிவரங்களுடனும் உறவினர் அல்லாத இருவரிடம் இருந்து பெறப்பட்ட நற்சான் றிதழ்களுடனும் 07.07.2004 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். (சி-35899)

**உதயன் மனிதவள சேவை**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

---

## சிவபூமி பாடசாலை
### சிறுவர் மனவிருத்திப் பாடசாலை
## திறப்பு விழா அழைப்பு

காலம்: 02.07.2004 வெள்ளிக்கிழமை காலை 9.30மணிக்கு
இடம்: சிவபூமிப் பாடசாலை, அரசடிப் பிள்ளையார் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

**தலைமை**
'செஞ்சொற்செல்வர்' ஆறு. திருமுருகன் அவர்கள்
(தலைவர், சிவபூமி அறக்கட்டளை)

**பிரதம விருந்தினர்**
சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J.P. அவர்கள்
(தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

**கௌரவ விருந்தினர்**
திருமிகு ம.ஜெயசீலன் (லண்டன்)

**நிகழ்ச்சி நிரல்**

9.00மணி: பாடசாலையை திறந்து வைத்தல் (பிரதம விருந்தினர் அவர்கள்)
9.40மணி: பெயர்ப்பலகை திரைநீக்கம் (கௌரவ விருந்தினர் அவர்கள்)
09.50மணி: இறை வணக்கம்
10.00மணி: வரவேற்புரை திருமிகு ந.சதாசிவஜயர் (செயலாளர், சிவபூமி அறக்கட்டளை)
10.10மணி: தலைமையுரை
10.30மணி: ஆசியுரை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் (நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர்)
10.40மணி: பிரதமவிருந்தினர் உரை
10.50மணி: வாழ்த்துரை
12.00மணி: நிறைவுரை திரு.க.சிவாஜி (உப தலைவர், சிவபூமிஅறக்கட்டளை)

**வாழ்த்துரை**

பேராசிரியர் சு.மோகனதாஸ் (துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)
உயர்திரு.இ.த.விக்னராஜா (யாழ். மாவட்ட நீதிபதி)
உயர்திரு.சி.இளம்பரிதி (பொறுப்பாளர், யாழ். மாவட்ட அரசியல்துறை, தமிழீழ விடுதலைப் புலிகள்)
பேராசிரியர் அ.சண்முகதாஸ் (தலைவர், கல்வி மேம்பாட்டுப் பேரவை, யாழ். மாவட்டம்)
வைத்தியகலாநிதி கா.சிவபாலன் (பீடாதிபதி, மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்.)
பேராசிரியர் தயா சோமசுந்தரம் (தலைவர், உளமருத்துவத்துறை மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்)
கலாநிதி தி.கமலநாதன் (பீடாதிபதி, தேசிய கல்வியியற்கல்லூரி, யாழ்ப்பாணம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
சிவபூமி அறக்கட்டளை, கோண்டாவில்

ஆறு. திருமுருகன் தலைவர் | ந. சதாசிவஜயர் J.P. செயலாளர். | Dr.ச.குகதாசன் பொருளாளர்

(C/35953(40))

---

## இணைகின்றோம்

City & Guilds




உலகின் 102 நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்துடன் சிறந்த சான்றிதழ், வேலைவாய்ப்பு என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக தற்போது யாழ்நகரிலும் யாழ் தொழிநுட்பக் கல்வி நிறுவனத்தினூடாக

For Further details Please contact:
Principal, Jaffna Technical College. T.P:021-2225409/
Director, STP Computer World (Pvt,) Limited, Kantharmadam
T.P: 021-2222674

---

## திருமண அழைப்பு

சிவமயம்

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான தாரண வருடம் ஆனித்திங்கள் 19 ஆம் நாள் நாளை (03.07.2004) சனிக்கிழமை பகல் 10.31 மணி தொடக்கம்11.00 மணி வரையுள்ள பிரதமைத் திதியும் மகேந்திர யோகமும் சிங்க லக்கினமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்



எமது புத்திரன் திருநிறை செல்வன் **முல்லைச்செல்வன்** (கனடா)



எமது புத்திரி திருநிறை செல்வி **சற்குணதேவி** அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு ஸ்ரேசன் றோட், கோண்டாவில் மேற்கில் அமைந்து ள்ள காளி அம்மன் கோயிலில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப் பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் சுற்றம் சூழ வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

(இருவீட்டார் அழைப்பு) (33645)

---

## நன்றி நவிலல்



கடந்த 20-06-2004 அன்று அமரத்துவம் அடைந்த எங்கள் குடும்ப தீபம்

அமரர்
**கந்தையா றஞ்சித்**

அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு உடனடியாக வந்து உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர் களுக்கும், நேரிலே வருகை தந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், தொலைபேசி மூலம் இரங்கல் செய்தி வழங்கியவர்களுக்கும், துண்டுப் பிரசுரம் மூலமும், பத்திரிகை மூலமும் கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், யாழ்/புனித பத்திரிசியார் கல்லூரியில் அன்னாரின் பூதவுடலை வைத்து அஞ்சலி செலுத்திய அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், மாணவர்கள் ஆகியோருக்கும் யாழ்ப்பாண பிரதேச செயலக பிரதேசச் செயலர், உத்தியோகத்தர்கள், கோப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள், ஆசிரியர் களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

முகவரி:
59, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். **- குடும்பத்தினர்.**

(C/33630)(42-21-14-19)

# பெண்களுக்கு நடுத்தர வயது சாபமல்ல; வரமே!



பெண்களின் வாழ்வில் அதிக உற்சாகமும், மனத்துணிவும் தேவைப் படும் காலம் அவர்களது நடுத்தர வயதாகும். பயமற்ற இளமைப் பருவம் முடிந்து வாழ்வில் தனக்கென்று ஒரு தனி வாழ்வை - தன் பாதையில் தனியே காலடியை - உருவாக்கும். இந்தப் பருவம் பெண்கள் எழுச்சி கொள்ளவேண்டிய காலமாகும். ஆனால், துரதிஷ்டவசமாக எமது சமூகத்தில் இந்தப் பருவத்தில் கணவனதும், பிள்ளைகளதும், உறவினரதும் வாழ்க்கைக்காக தன்னைத் தானே வருத்தி மெழுகாய் உருகுவதே நடுத்தரவயதுப் பெண்களின் கடமையாய்க் கற்பிக்கப்பட்டுவிட்டது.

இன்றைய கால கட்டத்தில் பெண்கள், ஆண்களோடு பல இடங்களில் போட்டியிட வேண்டியவர்களாக உள்ளனர்.

இந்தப் போட்டி வாழ்க்கையில் ஏற்படும் தோல்விகள், வீழ்ச்சிகள் எல்லாவற்றிற்கும் முகம் கொடுத்து எதிர்நீச்சல் போடும் நடுத்தரவயதுப் பெண்கள், குடும்பத்தின் பொறுப்புக்களைச் சுமந்து பொருளாதாரப் பங்களிப்பு மீதும் முக்கிய பங்காற்றுகின்றனர்.

இயல்பாக எமது வாழ்க்கை முறையில் எத்தகைய சூழ்நிலையிலும் ஈடுகொடுத்து செயற்படக்கூடிய மனப்பக்குவம் பெண்களுக்கு ஏற்படுகிறது. இதனால் பெண்ணைச் சுற்றியுள்ளவர்கள் அவள் மீது தமது ஆதிக்கத்தை இலகுவாகச் செலுத்த முடியும் என எண்ணிவிடுகிறார்கள். இதனால் பெண்கள் தமது திறமைகளைத் தாமே மழுங்கடிக்கின்றவர்களாக மாறுகின்றார்கள்.

### தளர்வடையும் மனம்

40 வயதை அடையும்போது அநேகமான பெண்கள் தங்களை அறியாமலேயே மனதாலும், உடலாலும் தளர்வடைகின்றார்கள்.

உடல் தளர்வானது இயற்கையானது. ஆனால், மனம் தளர்வடைவது எமது உணர்வுகளைப் பொறுத்தே. இந்த வயதுப் பெண்களின் முதல் மனத்தளர்விற்குக் காரணம் தமக்கு வயதாகிவிட்டதாக அவர்கள் பிரமை கொள்வதே ஆகும்.

முதலில் இந்த மனப் பிரமையை பெண்கள் உதறித் தள்ளவேண்டும். இளம் வயதினருக்கு இல்லாத சமூக மதிப்பு நடுத்தர வயதினருக்கு உள்ளது. இந்த மதிப்பையும், மரியாதையையும் நடுத்தரவயதுப் பெண்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். இதன் மூலம் அவர்கள் உளச்சோர்வுகளுக்கு இடம்கொடுக்காது சமயோசித புத்தியுடன் நடந்து வாழ்வில் முன்னேற்றம் காணலாம்.

### வாட்டும் தனிமை

இந்த வயதில் உள்ள பெண்களில் சிலர்திருமணம் செய்யாதவர்களாகவும் திருமணமாகிக் குழந்தைப் பேறு இல்லாதவர்களாகவும் இருக்கக்கூடும். இத்தகையவர்கள் மனம்புழுங்கித் தனிமையில் வாடுவதை வாழ்க்கையாகப் பழக்கப்படுத்திக்கொள்வார்கள். இது நாளடைவில் சுயபச்சாதாபமாக மாறும். இது மிக அபாயமான நிலையாகும்.

துன்பமும், சோர்வும் பிரச்சினையைத் தீர்க்கப்போவதில்லை என்பதை இத்தகைய பெண்கள் உணரவேண்டும். இவர்கள் தம்மை துயரத்திலிருந்து மீட்டுக்கொள்ள மனதை நாட்டமுள்ள வழிகளில் செலுத்தலாம். இல்லாவிட்டால் சுய தொழில் பயிற்சிகளைப் பெற்று சுய தொழிலில் தம்மை ஈடுபடுத்துவதனூடாக இவர்கள் தம்மை மாற்றிக்கொள்ளலாம்.

வயதுபோகின்றது உடல் தளர்கின்றது என்ற கவலையே நடுத்தர வயதுப் பெண்களின் வாழ்க்கைப் பாதையில் நெளிந்து அச்சுறுத்தும் விஷப்பாம்பாகும். ஆண்டொன்று கடந்தால் வயதொன்று போகும். இதனை ஆண்டவனால் கூடத் தடுக்கமுடியாது. அது இயற்கையின் நியதி.

ஆகவே, ஆண்டுக்கணக்கை மறந்து வாழ்வோம். ஆனால், உடல்பொலிவுறுவது நம்கையில் தான் உள்ளது.

இன்றைய நவீன உலகில் அழகு சாதனப் பொருள்களால் வயதை மறைத்துவிடலாம் என்பது உண்மை தான். ஆனால், நடுத்தர வயதுப் பெண்கள் மனதை எப்போதும் உற்சாகமாக வைத்திருந்து போசாக்கான உணவுடன் சீரான உடற்பயிற்சிகளையும் மேற்கொள்வதே என்றும் பதினாறாக வாழ இலகுவான வழியாகும்.

### மன அழுத்தம்

நடுத்தர வயதுப் பெண்களே அதிகமான அழுத்தத்திற்கு உள்ளாகின்றனர் என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. குடும்பம், சமூகம் எனப் பல்வேறு வழிகளில் இவர்களுக்கு நெருக்கடிகள் ஏற்படுவதால் இவர்கள் மனப்பாதிப்பை அடைகின்றார்கள்.

பிள்ளைகளின் செயற்பாடுகள் இவர்களை சிலவேளைகளில் நிலை குலையச் செய்கின்றன. முன் வாலிபப் பருவத்திலுள்ள பிள்ளைகள் தங்கள் எண்ணம் போல் வாழ முற்படுவதால் இவர்கள் மனப்பாதிப்பை அடைகின்றார்கள்.

கணவனாலும் இவர்கள் மன அழுத்தத்திற்கு உள்ளாகின்றார்கள். மனைவி அமைவது மட்டுமல்ல, கணவன் அமைவதும் இறைவன் கொடுத்த வரமே. ஆகவே, வாழ்க்கைத்துணை சரியாக அமைந்துவிட்ட பெண்கள் அதிர்ஷ்டசாலிகள்தான். ஆனால், நினைப்பதெல்லாம் நிகழ்வதில்லையே.

மனதுக்கேற்ற மணாளன் அமையாத பெண்கள் மனதளவில் பாதிப்பை உணர்கின்றார்கள். நாளடைவில் பொருளாதார நெருக்கடியை மனைவி எதிர் நோக்கவும் நேரிடுகின்றது.

இந்நிலையில் அந்தப்பெண் அதிக மன அழுத்தத்துக்கு உள்ளாக நேரிடுகிறது.

இத்தகைய பெண்கள் நோய்களின் உறைவிடங்களாக மாறிவிடும் அபாயம் ஏற்படுகின்றது. பெரும்பாலும் இரத்த அழுத்த நோய், வயிற்றுப் புண், இதயநோய்கள் போன்றவை பீடிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் நடுத்தர வயதினரிடமே அதிகம் காணப்படுகின்றன.

எனவே, நடுத்தரவயதுப் பெண்கள் மனதுக்குப் பிடித்த இசை கேட்பது, தியானத்திலோ தமது மத வழிபாடுகளிலோ மனதை ஈடுபடுத்துவது போன்ற வழிகளால் மனதை அமைதிப்படுத்தலாம்.

**- தீபா -**

காலையிலும், மாலையிலும் குறைந்தது 10 நிமிடங்களாவது மனதை ஒருமுகப்படுத்தி தியானம் செய்வது நல்லது. மனம் துன்பமாக உணரும் சமயங்களில் அதிலேயே உழலாமல் மனதை அமைதிப்படுத்தக்கூடிய மென்மையான இசையுடைய பாடல்களைக் கேட்டல், வாசித்தல், சிறு குழந்தைகளுடன் பேசி மகிழ்தல் போன்றவற்றில் தம்மை ஈடுபடுத்துவதனூடாக சூழ்நிலையை மாற்றி அமைத்தால் சொர்க்கம் இவர்கள் காலடியில் வரும்.

ஆகவே, நடுத்தரவயதுப் பெண்கள் நாளை நமதே என வாழ்வில் உற்சாகம் பெறவேண்டும். பெண்கள் உயர குடும்பம் உயரும் குடும்பம் உயர சமூகம் உயரும், சமூகம் உயர நாடு உயரும், நாடு உயர்ந்திட மகிழ்விற்கு குறைவேது. ★




# காணவில்லை

கணவன்தான் புகார் செய்திருக்கிறான்
என்னைக் காணவில்லையென்று
பரப்பிக் கிடந்த வீட்டிற்குள்
அங்குமிங்கும் குழந்தைகள்
அம்மாவைத்தேடி

சமையலறைக்குள் புகுந்த மாமியார்
எச்சில் பாத்திரங்களோடிருந்த
என்னை எடுத்துப் போட்டாள் கூடத்திலே

பசிக்காக அழும் குழந்தைகள்
சோற்றுப்பானையை
உருட்டுகையில் கிடந்த என்னை
எடுத்துப் போட்டனர் வெளியே

எதையோ எடுக்க
சாமான்கள் அறைக்குச் சென்ற
கணவனின் கண்ணிலும்
தட்டுப்பட்டிருக்கின்றேன்
சிதறிக் கிடந்த தானியமாய்
தலையை நிமிர்த்திப் பார்த்த
மாமனாரின் கண்களில்
தென்பட்டேன் மூலையில்
ஒட்டிக் கிடந்த ஒட்டடையாய்

எல்லோரும் பரபரப்பாயினர்
முழுசுமாய் கண்டுபிடிக்க

அடுக்கி வைக்கப்பட்ட துணியில்
கூட்டிக் கழித்த குப்பையில்
தொங்கிக் கொண்டிருக்கும் ஈரத்துணியில்
விரித்துக் கிடந்த படுக்கையில்

கிடந்த என்னை
கூட்டிச் சேர்த்தார்கள் ஒன்றாக்கி
உயிர்த்தெழுந்தேன்
மறுபடியும்
அம்மா வீட்டிற்குப் போயிருந்த நான்
அடுப்பங்கரை இல்லத்தரசியாய்.

*நன்றி : மங்கையர் மலர்.*

# முதன்மைப் பெண்கள்

★ உலகின் முதல் பணக்காரப்பெண் - எலிசபெத் ராணி
★ முதல் 'சுப்பர்சொனிக்' பெண் விமானி - பார்பரா
★ சார்க் பெண்கள் சங்க விருது பெற்ற பெண் - திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம்
★ எவரெஸ்டில் வெற்றிக் கொடியை நாட்டிய பெண் - பச்சேந்திரி பால்
★ இயற்கைப் பொருள் வேதியல் ஆய்வு - அஸிமா சட்டர்ஜி
★ திசு வளர்ப்பு செய்த பெண் - அர்ச்சனா சர்மா
★ விண்வெளிப்பயணம் செய்த முதல் பெண் - வாலெண்டினா தெரஸ்கேவா
★ முதல் தலைமை சிறை அதிகாரி - திருமதி கிரன்பேடி
★ உலகின் முதல் பெண் பிரதமர் - சிறிமாவோ பண்டாரநாயக்கா
★ இலங்கையின் முதல் பெண் ஜனாதிபதி- சந்திரிகா குமாரதுங்க.

# சிந்திக்கச் சிலவரிகள்...

பெண்கள் இன்று பல்வேறு துறைகளில் முன்னேறிக்கொண்டிருக்கின்றனர். பெண் அறிவால் மட்டுமல்ல இதயத்தாலும் பலம்மிக்கவள், பெண் முயன்றால் முடியாதது எதுவுமே இல்லை. எத்தகைய தடைகளையும் மீறி சாதனைகளை உருவாக்கியே தீருவாள்.

இந்தச் சாதனைகள் பெருக வேண்டும், சகிப்புத் தன்மையும் பொறுமையும், பெண்ணுக்குப் பலம் சேர்க்க வேண்டும். அவையே விலங்குகளாக மாறி அவள் வாழ்வைத் துன்பத்துடன் பிணைத்துவிட அனுமதித்தல் ஆகாது.

பொறுமை, சகிப்புத்தன்மை இன்றி எதையும் எடுத்தேன் கவிழ்த்தேன் என முடித்தால், சாதனைக்கு பதில் வேதனைதான் மிஞ்சும், "அவசரக் காரருக்கு புத்தி மட்டு" பெண்கள் நிதானத்துடன் செயற்பட்டு வெற்றிகளைத் தொடும்போதுதான் சாதனைகள் பெருகும். **- தயா -**

# விழித்திரு பெண்ணே!

சீர்கெட்ட உலகமிது
பெண்ணே நீ
சிந்தித்து செயலாற்று
உன் வாழ்வில் மண்ணை
அள்ளி வீசுவதற்கு
சில பெண்கள்
வீரக்கொடியேந்தி நிற்கின்றனர்
எதற்கும்
அஞ்சா நெஞ்சம் கொண்ட
நீ
எதிர்நீச்சல் போட்டு அவர்களை வென்று வருவாயாக
பெண்மைக்கு பெண்மை தான் இரங்கும்
என்று இவ்வளவு காலமும்
நாம் பகற்கனவு கண்டு விட்டோம்
ஆனால்
பெண்கள் தாம் எம்மை பாழுங்கிணற்றில்
தள்ளுபவர்கள்
என்றும் விழித்திரு!

**- றூபா.**

# குழந்தையின் எதிர்காலம் அன்னையின் கையில்

எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே -

அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே -

இது திரைப்படப் பாடல் மட்டுமல்ல. வாழ்வின் அர்த்தம் செறிந்த பாடலுமாகும்.

குழந்தைகள் களி மண்ணைப் போன்றவர்கள். தாயின் அரவணைப்பே அவர்களின் மனதுக்கு வடிவம் கொடுத்து ஆளாக்குகின்றது.

இத்தகைய குழந்தைகளின் எதிர்காலம் தாயின் வழிநடத்தலிலேயே தங்கியுள்ளது. அதனால் வளரும் குழந்தைகளின் மேல் மிகவும் அவதானமாக அக்கறை செலுத்தவேண்டும்.

சில பெற்றோர்கள் குழந்தைகளின் மீது எதுவிதமான அக்கறையும் காட்டாதவர்களாக உள்ளனர். அவர்கள் தனது இன்பம், தனது நலன், தனது சுதந்திரம் என்ற பாணியில் வாழ்கின்றனர்.

இவ்வாறான பெற்றோரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு வாழும் குழந்தைகள் மன அழுத்தங்களிற்கு உட்பட்டவர்களாகவும் சுயமாகச் சிந்திக்க இயலாதவர்களாகவும் பயந்த மனோநிலையை உடையவர்களாகவும் மாறிவிடுகின்றனர்.



இவர்கள் பல சந்தர்ப்பங்களில் பெற்றோரின் கோபங்களைத் தீர்க்கும் மத்தளங்களாகக் கூட மாற்றப்பட்டு விடுகின்றனர். எந்த நேரத்தில் அடி விழுமோ என ஏங்கித் தவிப்பவர்களாகவே அவர்கள் காணப்படுகின்றனர். இவர்களின் இத்தகைய ஏக்கங்களினால் பாடங்களிலே கவனம் செலுத்த முடியாமலும் போய்விடுகின்றனர்.

உண்மையான அன்புக்காக ஏங்கும் ஜீவன்களாக ஆரம்பத்தில் காணப்படும் இவர்கள் காலஞ் செல்லச் செல்ல இதுதான் உலகம். இவ்வாறு தான் இருக்கும் என்ற மனோபாவத்தை உடையவர்களாக மாறி விடுகின்றனர்.

அத்தோடு, சுகாதாரம் என்றால் என்ன என்று அறியாத வகையிலும் அந்தக் குழந்தை வளர்கின்றது. அதன் எதிர்காலம் பற்றி எவ்வித சிந்தனையும் பெற்றோரிடம் இருக்காது. ஏதோ பிள்ளைகளைப் பெற்றுவிட்டோம். இறைவன் கொடுத்ததை வேண்டாம் என்றா சொல்லமுடியும், படைத்தவன் படி அளப்பான்தானே என்று கூறிக்கொள்வார்கள்.

**- கங்கா -**

இத்தகைய குழந்தைகளின் எதிர்காலம் ஒரு சிறிய வட்டத்தினுள்ளேயே முடிவடைந்துவிடப்போகின்றதே என்று எவருமே சிந்திப்பதில்லை.

இவ்வாறு வளர்க்கப்படும் குழந்தைகள்தான் எதிர்காலத்தில் சமூக விரோதிகளாக மாறிவிடுகின்றன.

எதிர்காலங்களிலே சமூகத்தைச் சீர்ப்படுத்தவேண்டிய குழந்தைகள் சீர்கெடுக்கும் குழந்தைகளாக வளர்க்கப்படுகின்றார்கள். எனவே, பெற்றோர்களே எதிர்கால சந்ததியினரை உருவாக்குவது உங்கள் கைகளிலேயே உள்ளது. ★

## விபத்தில் தம்பதி காயம்!

யாழ்ப்பாணம்,ஜூலை2

யாழ்ப்பாணம் வேம்படிச் சந்திக்கும் சப்பல் வீதிக்குமிடையில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - மினிவான் சம்பந்தப்பட்ட விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

நேற்றுக்காலை இடம்பெற்ற இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றவர்களான யாழ்ப்பாணம் மடத்தடியைச சேர்ந்த பேதுறுப்பிள்ளை ஞானசலன் (வயது 32), அவரது மனைவி ஜெயா மேரிகொன்சி (வயது 30) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

படுகாயமடைந்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிளும், வானும் பொலஸாரால் எடுத்துச்செல்லப்பட்டுள்ளன.

(ஒ-15)

## 'பிக்பொக்கற்' திருடர்கள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை2

குடாநாட்டில் 'பிக்பொக்கட்' திருடர்கள் அதிகரித்துள்ளனர். இது தொடர்பான முறைப்பாடுகளும் பொலீஸ் நிலையங்களில் குவிந்து வருகின்றன.

குடாநாட்டில், குறிப்பாக யாழ்.நகரப பகுதியில் இருந்து புறப்படும் பொதுப் போக்குவரத்து வாகனங்களிலேயே இவ்வாறான திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டுகின்றனர்.

சனநெரிசல்கள் அதிகமாக உள்ள பஸ்களில் ஏறுகின்ற திருடர்கள் அங்கு பயணம் செல்லும் சிலருடன் நண்பர்கள் போல உரையாடி விட்டு அவர்களிடமிருந்து பொருள் மற்றும் பணத்தை அபகரித்துக்கொண்டு தப்பி விடுகின்றனர். இது தொடர்பாக யாழ்.பஸ்களில் பயணஞ்செய்யும் பயணிகளை விழிப்புடனும் அவதானத்துடனும் செயற்படுமாறு யாழ். பொலீஸார் மக்களைக் கேட்டுள்ளனர்.

ஏ-9 பாதை திறந்த பின்னர் தென்னிலங்கையிலிருந்து அதிக எண்ணிக்கையில் பிக்பொக்கற் திருடர்கள் குடாநாட்டுக்குள் பிரவேசித்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

(ஒ-13)


### பதவி வெற்றிடம்

Dialog GSM இன் அதிகாரமளிக்கப்பட்ட முகவரான THE PHONE SHOP நிறுவனத்துக்கு காசாளர் பதவிக்கான ஆளணி வேண்டப்படுகின்றது.

வயதெல்லை 18 - 30

தகுதியுடைய ஆண், பெண் விண்ணப்பதாரிகள் நேரடியாக 05.07.2004 இற்கு முன்னதாக எமது நிறுவனத்துடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

THE PHONE SHOP
பஸ்நிலையம் முன்பாக,
பிரதான வீதி, நெல்லியடி.

(C/35957)(40-14-42)


### 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 23 – 03 – 1944

மறைவு: 28 – 06 – 1999



**செல்வி பரமேஸ்வரி செல்லத்துரை**

திதி: பூரணை 02-07-2004

அன்பின் திருவுருவாய் அணையா ஒளி விளக்காய்
பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்து
எம்மையும் வாழ வழிகாட்டி மறைந்த தெய்வமே!
ஆண்டுகள் ஐந்தானாலும் ஆறாது எம்துயர்.

"தாயகம்",
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

உங்கள் நினைவுடன்:
- குடும்பத்தினர்.

(33686)(42-14)

### HAPPY BIRTHDAY

### இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து

### 02.07.2004



சங்கானை நிற்சாமத்தைச் சேர்ந்த

திரு. திருமதி சிறிதரன் - சத்தியமதி தம்பதிகளின்

செல்வப் புதல்வி செல்வி

**சைதன்யா சிறிதரன்**

இன்று (2.07.2004) வெள்ளிக்கிழமை தனது 2 ஆவது பிறந்தநாளை தமது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பம்மா, லண்டன் மாமா சத்தியேந்திரா, அத்தை சுதா, சுவிஸ் பெரியம்மா சத்தியறஜனி, பெரியப்பா யுகதீசன், சித்தப்பாமார் கரன்,ஜெகன்,அத்தை தேவகி, மாமா முரளி கரன் ஆகியோர் சகல கலைகளும் கற்று,நல்வாழ்வு வாழ வாழ்த்துகின்றார்கள்.

வாழ்த்துவோர்.
லண்டன் மாமா
இ.சத்தியேந்திரா

நிற்சாமம்,
சங்கானை.

(33627)


HND HND
Delivered Locally.... Recognised Globally

Edexcel International, UK

BTEC HND
World Class Qualifications

HND Leads to BSc. (Hon.)

Delivered Locally....... Recognised Globally.

**New Batch Starts on 14.07.2004 at 10.00 a.m.**

**கணனித்துறையில் பட்டப்படிப்பு**

நீங்கள் ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தியடைந்தவரா? ஆம் எனில் இச்சந்தர்ப்பத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளுங்கள். Edexcel International நிறுவனத்தின் BTEC HND (Higher National Diploma) பயிற்சி நெறியில் இணைந்து கொண்டு சர்வதேச தரம் வாய்ந்த B.Sc (Hons) பட்டப்படிப்பினை தொடரமுடிம்..

**சர்வதேச சான்றிதழ்கள்**

BTEC HND (Higher National Diploma) என்பது கணனித் துறையில் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட உயர்தரப் பயிற்சிநெறியாகும். 18 மாதகாலப் பயிற்சியின் முடிவில் பிரிட்டனின் Edexcel இன் சர்வதேச டிப்ளோமா சான்றிதழ்களை நீங்கள் பெறுவீர்கள். Edexcel என்பது லண்டன் ஜீ.சீ.ஈ. சாதாரண மற்றும் உயர்தரப் பரீட்சைகளுக்கான உலகளாவிய ஆளுநர் சபையாகும்.

**வெளிநாட்டில் படிப்பைத் தொடரலாம்**

IIS நிறுவனத்தில் BTEC HND (Higher National Diploma) பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்தவர்கள் நேரடியாகவே பிரிட்டன், அவுஸ்திரேலியா, ஐக்கிய அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களின் B.Sc (Hons) இறுதியாண்டு மாணவராகச் சேர்ந்து பட்டப்படிப்பை மேற்கொள்ளலாம். இதன் மூலம் பொருளாதாரரீதியாக நன்மை அடையமுடியும்

**தேசிய மற்றும் சர்வ்தேச புலமைப்பரிசில்கள்**

IIS நிறுவனத்தில் திறமைமிக்க மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும். அதிவிசேட திறமை காண்பிக்கும் மாணவர்களுக்கு பிரிட்டனிலுள்ள பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கும் புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன**

IIS நிறுவனம் தற்போது மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது,

மேலதிக விபரங்களுக்கு 021 – 2222831 / 021 – 2226933 அல்லது இல.100, மணிக்கூட்டுக்கோபுர வீதி, அமைந்துள்ள எமது அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுங்கள்.

ஒரு பிரிவில் 20 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் உங்கள் பதிவுகளிற்கு முந்துங்கள்

**Institute of Informatics Studies ( IIS )**

" An Edexcel Approved Training Centre"

100, Clock Tower Road, Jaffna
Email: iis@sltnet.lk T.P No: 021 222 2831 / 021 2226933

# 31 ஆம் நாள் நீங்காத நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
28.09.1948

மறைவு
02.06.2004



## அமரர் தம்பிமுத்து கணேசன்

திதிவெண்பா

கண்ணும் மணியும் போல வாழ்ந்த எம் குலவிளக்கை
காலன் அழைத்து துயரத்தை தந்த நாள்
சதுர்த்தசி பௌர்ணமி வைகாசி இருபதினில்
இவ்வுலகைவிட்டு இறைவனடி சேர்ந்தனனே கணேசன்!

இன்று (02.07.2004) வெள்ளிக்கிழமை அன்னாரின் ஞாபகார்த்தமாக இடம்பெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும், நண்பகல் அவரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

*மல்வம்,*
*உடுவில்.* (33708)(37-16-13-36)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நாகரத்தினம் பொன்னுத்துரை

*(ஓய்வுபெற்ற ஆசிரியை)*

வேலணை கிழக்கு, மணியகாரர் வீட்டடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு - கொட்டாஞ்சேனையை தற்காலிக வசிப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற பண்டிதர் அம்பலவாணர் பொன்னுத்துரை அவர்களின் அன்புப் பாரியாருமான திருமதி நாகரத்தினம் பொன்னுத்துரை அவர்கள் (29.06.2004) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் அக்குறஸ்ஸ பிரபல வர்த்தகர் க.சி.சின்னத்தம்பி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற தங்கம்மா,ஓய்வு பெற்ற ஆசிரியை சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகேஸ்வரி, கலியாணசுந்தரம், கமலாதேவி, பாலசுந்தரம்பிள்ளை, விமலேந்திரன், பாலேந்திரன், விமலாதேவி, யோகேந்திரன், ரவீந்திரன், புவனேந்திரன், நிர்மலாதேவி, காலஞ்சென்ற வத்சலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் க.திருநாவுக்கரசு, பரமேஸ்வரி, செ.தர்மலிங்கம், இராசலட்சுமி, மங்கையர்க்கரசி, உமாகாந்தி, மு.விஜயகுமார், வனஜா, அனுஷியா, இரஞ்சினிதேவி, கா.லோகராஜ் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.07.2004 ஞாயிற்றுக்கிழமை 9.00 மணியளவில் ஜெயரட்ண மலர்ச்சாலையில் இடம்பெற்று, பூதவுடல் 10.30 மணியளவில் பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
பொ.கலியாணசுந்தரம்,
பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை,
(பிள்ளைகள்).

*74,Mayfield Rd.*
*Kotehena*
*0112 385224.* (33701)(37-16-13-36)



## நாகலிங்கம் முருகேசு

(பிரபல வர்த்தகர் - மூளாய)

மூளாய் கிழக்கு, சுழிபுரத்தைச் சேர்ந்த நாகலிங்கம் முருகேசு அவர்கள் கடந்த 29.06.2004 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் வைகுந்தவாசன் (லண்டன்), காலஞ்சென்ற செல்வராணி மற்றும் முகுந்தாதேவி, றங்காதேவி, ஸ்ரீவைகுண்டதேவி, கிருஷ்ணதேவி, ஜெயதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும் மனோரஞ்சிதமலர் (லண்டன்), செல்வரத்தினம் (மூளாய்), ஜெயசோதி (சவு.தி), கனகநாதன (கனடா), துரைராஜா (கிராம அலுவலர் - மூளாய்), ரகுநாதன் (ஹற்றன் நஷனல வங்கி - கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.07.2004) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மூளாய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"வைகுந்தபதி",*
*மூளாய் கிழக்கு,*
*சுழிபுரம்.* (33714)(37-13-16)

தகவல்:
மு.வைகுந்தவாசன்
(மகன்).


அறிவொளி NALLUR

A/L - 04 இரசாயன மீட்டல்
★ பிரபல இரசாயன ஆசான்
Sat., Sun. 11.15 a.m.(old)

A/L - 05 CHE. Mr.ஜெயந்தன் B.Sc.
PHYSICAL - Sat., Sun. 6 p.m.
C.maths: B.ரவீந்திரன் B.Sc.
Paper : mon. - 4 p.m. (33677)(36)

A/L - 06 Bio. Mr.ஜெயன் B.Sc.
Functioning plant
Sat., Sun.:3 p.m. , Start 03.07.04


# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசலட்சுமி கார்த்திகேசு

மட்டக்களப்பு, தாமரைக் கேணியைப் பிறப்பிடமாகவும் நல்லூரில் வசித்தவரும் தற்போது தெகிவளையில் வசித்தவருமான திருமதி இராசலட்சுமி கார்த்திகேசு நேற்று (01.07.2004) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் மட்டக்களப்பைச் சேர்ந்த காலஞ்சென்ற உதவி வைத்திய அதிகாரி திரு.திருமதி குழந்தைவேலு தம்பதிகளின் புத்திரியும் இளைப்பாறிய விமான நிலைய பயில் பாதுகாப்பு உத்தியோகத்தரும் சாயி பக்தருமான அருளம்பலம் கார்த்திகேசுவின மனைவியுமாவார்.

அன்னாரின் இறுதிககிரியைகள (03.07.2004) சனியன்று காலை தெகிவளை கல்கிசை மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
அ. கார்த்திகேசு (கணவர்).

*B2/1 GOVT FLATS*
*HOSPITAL ROAD,*
*DEHIWALA,*
*T.P.0115515572.*
(33741)(37-16-13-36)

## சுப்பர் செல்லத்துரை

(உடுப்பிட்டி அ.மி. கல்லூரி ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்)

துவாளி வீதி, உடுப்பிட்டியைச் சேர்ந்த சுப்பர் செல்லத்துரை நேற்று (01.07.2004) வியாழக்கிழமை நண்பகல 12.00 மணியளவில் கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பர் சின்னம்மாவின் மகனும் காலஞ்சென்ற செல்லையா பூமணியின் மருமகனும் திருமதி சற்குணதேவியின் அன்புக் கணவரும் சுதர்சன் (சுவிஸ்), கோபிநாத் (ஆஸ்திரேலியா), வசீகரன், இநதிரன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் தர்சினி (சுவிஸ்), நவீனா (ஆஸதிரேலியா), துசிதா ஆகியோரின் பிரியமான மாமனாரும் சமிலன், கிருசானி ஆகியோரின் பாசமிகு பேரனும் சின்னமணி, முத்தாச்சி, பொன்னம்மா, காலஞ்சென்ற அன்னம்மா , தங்கம்மா, ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற சதாசிவம், சேனாதிராசா (கொழும்பு), செல்வராசா, சற்குணராசா (சுவிஸ்), துரைராசா (கனடா), செல்வமணி (ஆஸதிரேலியா) கமலாதேவி (மல்லி - கொழும்பு), ரஞ்சிதமணி (லண்டன்) ஆகியோரின மைத்துனருமாவார்.

உடுப்பிட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் இறுதிக் கிரியைகள் பற்றியவிவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
செ.வசீகரன் (மகன்)
Van No - 58 - 9223
தொ.பே.இல. - 021 226 3362
0777 410734
(சி-35968)(37-16-13-36)

# மரண அறிவித்தல்கள்

## கலாநிதி ம.ஸ்கந்தராஜா M.Sc., Phd, (Alberta)

(சிரேஷ்ட விரிவுரையாளர் கணித புள்ளிவிவரவியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)



காலஞ்சென்ற மகாதேவா - கனகபூசணி தம்பதியின் அருமைப் புதல்வராகிய ஸ்கந்தராஜா (M.Sc, Phd (Alberta) சிரேஷ்ட விரிவுரையாளர் கணிதபுள்ளிவிவரவியல்துறை, யாழ் பல்கலைக்கழகம்) 30.06.2004 அன்று காலமானார்.

இவரது இறுதிக்கிரியைகள் நாளை (03.07.2004) சனிக கிழமை சுதுமலை வடக்கில் உள்ள அன்னாரது இல்லத்தில காலை 8.00 மணிக்கு நடைபெற்று, பின்னர் பூதவுடல் காலை 10.00 மணியளவில் யாழ்பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும். பின்னர் தாவடி இந்து மயானத்தில் இறுதிக கிரியைகள் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள், மாணவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

*கேணிக்கரை ஒழுங்கை,*
*சுதுமலை வடக்கு, மானிப்பாய.*
(33706)(13-16-36)

தகவல்:
திருமதி ந.கமலவதனி (சகோதரி).

## பர்னாந்து இமானுவேல் (ராசன்)



கரம்பன் மேற்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பர்னாந்து இமானுவேல் (ராசன்) அவர்கள் (30.06.2004) புதன்கிழமை காலமானார்.

இவர் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் சுரேஸ்குமார் (ஜேர்மன்), கலாநிதி (நோர்வே), பிறேம்குமார், சுதர்சினி, பாசினி, அனோஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும் பவளம், புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜேசுதாசன் (சவுதி), கிறிஸ்பி (நோர்வே), றதி (கரம்பன்), றதி (ஜேர்மன்) ஆகியோரின அன்பு மாமனாரும் நிக்ஷன், நிவேஷா (நோர்வே), மரியா (ஜேர்மன்), தர்ஷன், தர்ஷிஹா, வேணுஜா ஆகியோரின் அன்புப் பேரனும் சுகந்தன், செந்தூரன், சுகன்ஜா, சதீஸ்குமார் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.07.2004) சனிக்கிழமை காலை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பின்னர் கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு செபஸதியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கரம்பொன் மேற்கு,*
*ஊர்காவற்றுறை.* (33700)(37-13-16-36)

தகவல்:
மோகன் (மகன்).

## மனுவல்பிள்ளை சிறில்



குருநகரைச் சேர்ந்த மனுவலபிள்ளை சிறில் அவர்கள் நேற்று (01.07.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசமணி - சூசானா தம்பதிகளின அன்பு மகனும் இமெல்டாவின் அன்புக் கணவரும் ஜோதினி, றமேஷ் (உரிமையாளர் கிங்ஸ்ரன் எலக்ரோனிக்ஸ்), ஜெயந்தினி, சுரேஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் றேமன் ஜோசப், முத்தழகி, அன்ரன்யோஜ, காலஞ்சென்ற கிறிஸ்ரிஜேக்கப் ஆகியோரின் மாமனாரும் பெனி, ஜெனிபர், ஜெபர்சன், டிவன்சியாந், இவோனசர்மி, பிரியந்தி, நெசன், அற்றியா, றெபேக்கா, வில்லியம், கீர்த்தனா ஆகியோரின் பேரனும் அன்ரனிப்பிள்ளை, யோகம்மா, காலஞ்சென்ற மாட்டினஸ், யோசப்பினா ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.07.2004) சனிக்கிழமை நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*13/5, 5ஆம் குறுக்குத்தெரு,*
*குருநகர்.* (33705)(37-13-16-36)

தகவல்:
கிங்ஸ்சன் ரமேஷ்(மகன்).

## கந்தையா இராசநாயகம்



பன்னாலையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராசநாயகம் (01.07.2004) வியாழக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அருமைப் புதல்வரும் இராசேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (மலேசியா) மற்றும் சரஸ்வதிஅம்மா (கனடா), திருநாவுக்கரசு (முன்னாள் அதிபர்), சீவரத்தினம் (ஓய்வுபெற்ற கல்வித்திணைக்கள உதவிக் கணக்காளர்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சோதிவேம்படி லேன், மானிப்பாய் இல்லத்தில் இன்று (02.07.2004) வெள்ளிக்கிழமை பி.ப.3.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக கொள்ளவும்.

*சோதிவேம்படி லேன்,*
*மானிப்பாய்.* (33707)(37-13-16-36)

தகவல்:
திருநாவுக்கரசு (சகோதரர்).

## சண்முகராசா பஞ்சாட்சரம்



கோபால் லேன், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகராசா பஞ்சாடசரம் நேற்று (01.07.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகராசா - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் விமலாதேவியின் அன்புக கணவரும் கரிதாஸ், விஜயதாஸ், சதீஸ்வரன், சுகி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சசியின் பாசமிகு மாமனாரும் குணா, மோகன், பாஸ்கரன், சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2004) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 2.00 மணிக்கு தகனக் கிரியைக்காக உரும்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"ஆறுமுகதாஸ்"
திரு வீதி, உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய். (33699)(43-13-16-36)

தகவல்:
குடும்பத்தினர்.

## சச்சிதானந்தசிவம் ஞானசீலன்

(வணிகமாண' பட்டதாரி-2001)



853, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட சச்சிதானந்தசிவம் ஞானசீலன் 29.06.2004 அன்று இந்தியாவில் அகாலமரணமாகிவிட்டார்.

அன்னார் சச்சிதானந்தசிவம் - சிவகங்கை தம்பதிகளின் புதல்வனும் இராகுலன், ஞானரூபன், சிவாஜினி மற்றும் காலஞ்சென்ற சிவகுமார் ஆகியோரின் சகோதரனுமாவார்.

இவரது இறுதிக்கிரியைகள் இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

*நீராவியடி,*
*யாழ்ப்பாணம்.* (33718)(13-16-36)

தகவல்:
உறவினர்கள்.


இதோ வந்துவிட்டது...! TVS கொம்பனியின்
நவீன வடிவமைப்புக்கொண்ட
FIERO FX



யாழில் விற்பனையில்!
உங்கள் தெரிவு வர்ணத்திற்கு!
TVS லங்கா PVT LTD. இன்
அங்கீகாரம் பெற்ற விற்பனையாளரான
யசோ மோட்டோர்ஸ்
163, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 222 2544
(35961)(22)

## காலமானார்

[illegible]ாணம்,ஜூலை2

யாழ்.ப[illegible]கழக விஞ்ஞான



பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி மகாதேவா ஸ்கந்தராஜா நேற்று முன்தினம் காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது 50 ஆகும்.

விஞ்ஞானபீட புள்ளிவிவரவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரான இவர் விஞ்ஞானமாணி, விஞ்ஞான முதுமாணி ஆகிய பட்டங்களைப் பெற்றவர் தூயகணிதம் **(Pure Mathamatic)** துறையில் கலாநிதிப் பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

இவரது இறுதிக்கிரியைகள் நாளை சனிக்கிழமை காலை சுதுமலையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். நாளை முற்பகல் 10.00 மணியளவில் இவரது பூதவுடல் விஞ்ஞான பீடத்தில் அஞ்சலிக்காக வைக்கப் படவுள்ளது.

தாவடி இந்துமயானத்தில் தகனக் கிரியைகள் இடம் பெறும். இவரது மறைவையொட்டி யாழ்.பல்கலைக் கழக விஞ்ஞானப்பீடப் பகுதியில் தோரணம், வாழை என்பன கட்டப் பட்டிருப்பதுடன் கறுப்புக்கொடிகளும் பறக்கவிடப்பட்டுள்ளன. சோக கீதமும் இசைக்கப்படுகிறது. (ஐ-4)

# ஆள்களை வைத்து அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரியவந்துவிட்டது.

வெளியே யுத்தநிறுத்தம் நடைமுறையில் இருக்க, உள்ளே - மறைவில் - பிரகடனப்படுத்தப்படாத - இருண்ட யுத்தம் ஒன்றை, முகம் தெரியாத ஆள்களை வைத்து - கிழக்கில் அரசுப் படைகள் நடத்தி வருவது, புலிகளின் தலைமையை கடுஞ்சினத்துக்குள் ஆழ்த்தியிருக்கின்றது என்பதை புலிகளோடு தொடர்புடைய வட்டாரங்கள் உறுதிப்படுத்தின.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் 1.8 வாசகம்-

*"தமிழ்த்துணை இராணுவக் குழுக்களை யுத்த நிறுத்தம் நடைமுறைக்கு வரும் தினத்திலிருந்து முப்பது நாள்களுக்குள் ஸ்ரீலங்கா அரசு ஆயுதமற்றவர்களாக்கும். இந்த அணிகளில் ஏற்கனவே உள்ள ஆள்களுக்கு ஸ்ரீலங்கா அரசு தனது ஆயுதப்படைகளின் கட்டுப்பாட்டிற்குள்ளும், ஒழுங்கமைப்பிற்குள்ளும் இணையும் வாய்ப்பை அளித்து, வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு அப்பால் பணிபுரிய வகைசெய்யும்"* - என்று தெரிவிக்கின்றது.

இதன்பிரகாரம் ஒப்பந்தம் செய்யப்பட்ட தினமான 2002 பெப்ரவரி 23ஆம் திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் - அதாவது 2002 மார்ச் 23ஆம் திகதிக்குப் பின்னர் - வடக்கு, கிழக்கில் அரசபடைகளோடு சேர்ந்து எந்தத் தமிழ்க்குழுவும் இயங்கக்கூடாது. ஆயுதங்களை அவை தரித்திருத்தலாகாது.

ஆனால், இவற்றையெல்லாம் மீறி கிழக்கில் அரசபடைகளின் உளவுப்பிரிவு, பெரும் வலையமைப்பு ஒன்றையே விரித்து, புலிகளுக்கு எதிராக இருண்ட யுத்தம் ஒன்றை நடத்தி வருகின்றது. இந்த யுத்தத்தின் விளைவுகளை இதுவரை எதிர்கொண்டு வந்த புலிகளின் தலைமைக்கு இப்போது அந்த யுத்தவலைப் பின்னல் பற்றிய முழு விவரங்களும் கிடைத்திருப்பதாகத் தெரிகின்றது.

இலங்கை அரசுப்படைகள் ஆக்கிரமித்திருக்கும் ஈழத்தமிழர்களின் வீடு, வாசல்கள், கிராமங்கள் போன்றவை புரிந்துணர்வு ஒப்பந்தப்படி அந்த மக்கள் மீளக்குடியமர வசதியாக அவர்களிடம் மீளக் கையளிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், ஒப்பந்த வாசகங்கள் இது விடயத்தில் நிறைவேற்றப்படவேயில்லை.

அதுபோலவே, வடக்கு - கிழக்கில் துணை இராணுவ அணிகளை - ஆயுதம் தாங்கிய தமிழ்க்குழுக்களை - பயன்படுத்தக்கூடாது என்ற ஒப்பந்த வாசகங்களை அரசுப்படைகள் நிறைவேற்றாமல் மீறி வருகின்றன என்று புலிகள் கூறுகின்றனர்.

ஒப்பந்த ஆரம்பகாலத்தில் சிறிய அளவில் இருந்த செயற்பாடு பின்னர் மெல்ல மெல்ல விஸ்தரிக்கப்பட்டது.

முகம்வெளிப்படுத்தப்படாத ஆள்களை வைத்து அரசுப்படைகளும், அவற்றின் புலனாய்வுப்பிரிவும் மேற்கொள்ளும் 'இருண்ட யுத்தத்தின்' பெறுபேறே கிழக்கில் சூத்திரதாரிகள் தெரியாத பல கொலைகளுக்கு வழி செய்தது என்றும் புலிகளின் தரப்பில் கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது.

கிழக்கில் புலிகளின் தலைமைக்கு எதிராக கருணா என்ற தனி மனித பிறழ்வு ஏற்பட்டபோது அதைப்பயன்படுத்தி அரசுப்படைகள் புலிகளுக்கு எதிரான தமது இருண்ட யுத்தத்தை விரிவுபடுத்தியிருக்கின்றார்கள். அது பற்றிய முழுவிவரமும் இப்போது புலிகளிடம் அம்பலமாகிவிட்டது.

கருணாவுடன் கடைசி நேரம் வரை இயங்கிய அவரது சகாக்கள் பலர் புலிகளிடம் திரும்பி வந்து சேர்ந்தமை, அரசப்படைகளின் இந்த இருண்ட யுத்தத்தில் கையாள்களாக - பதிலாள்களாக - செயற்பட்ட பல துணைப் படைக் குழுக்களின் ஆள்கள் புலிகளிடம் வசமாக சிக்கியமை போன்றவை முழு உள்ளீட்டு விடயங்களையும் அம்பலப்படுத்தி விட்டன என்றும் கூறப்படுகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின கட்டுப்பாட்டில் பாதுகாப்பு அமைச்சு இருந்தவரை திரைமறைவில் மேலோட்டமாக முன்னெடுக்கப்பட்ட இந்த இருண்ட யுத்தம் ஜனாதிபதி சந்திரிகா பாதுகாப்பு அமைச்சையும் அரசையும பொறுப்பேற்ற பின்னர் முழுவீச்சாக முன்னெடுக்கப்படுகின்றது எனப் புலிகளின் தலைமை உணருகின்றது.

இந்த 'இருண்ட யுத்தம்' முடிவுக்கு வந்து, யுத்தநிறுத்தமும், அது தொடர்பான ஒப்பந்தமும் முழு அளவில் நடைமுறைப்படுத்தப்படாத வரையில் அமைதி முயற்சிகளுக்கு - சமாதானப் பேச்சுக்களுக்கு - இடமேயில்லை என்ற முடிவில் புலிகளின் தலைமை உறுதியாக இருப்பதாகவும் தெரிகின்றது. (ஐ-க)

## 8 முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சாளரும், ஊடகத்துறை அமைச்சருமான மங்கள சமரவீர கூறினார். நேற்றுக்காலை அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்தச் செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் ரவிகருணாநாயக்க தொடர்பாகச் சட்ட நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. இவரது மோசடிகளில் இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டிருப்பது ஒரு சிறு துரும்பு மட்டுமே! மேலும் பல மோசடிகள் இப்பொழுது தெரிய வந்துள்ளன. சட்டத்தின் பிடியில் இருந்து அவர் தப்பமுடியாது.

முன்னைய அரசுக்குள் இடம்பெற்றுள்ள ஊழல், மோசடிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கவும், அவர்களை சட்டத்தின்முன் நிறுத்தவும் மக்கள் ஆணை வழங்கியுள்ளனர்.

இதன் அடிப்படையிலேயே முன்னாள் அமைச்சர்கள் தொடர்பாக விவரங்கள் திரட்டப்படுகின்றன. முன்பு அமைச்சரவையில் அங்கம் வகித்த ஓர் அமைச்சரையாவது ஊழல் மோசடிகளில் ஈடுபடவில்லை என்று ஒதுக்க முடியவில்லை. பாடசாலை அனுமதி முதல் காணிக்கொள்வனவு, வாகன மோசடி உட்படப் பல்வேறு விடயங்கள் வரை அவர்கள் மோசடிகளில் ஈடுபட்டிருந்தனர் என்பதற்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இவை குறித்து நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டன. (ஐ-8-9)

# இளையோர் விளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழ விளையாட்டுத்துறையின் ஏற்பாட்டில் இளையோர் தேசியத் தடகள விளையாட்டு விழா நாளையும் நாளை மறுதினமும் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

வடக்கு-கிழக்கிலுள்ள 8 மாவட்டங்களிலிருந்தும் மூவினங்களையும் சேர்ந்த ஆயிரத்து 500 வீர வீராங்கனைகள் இந்த விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்கின்றனர்.

வடக்கு-கிழக்கில் விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதை நோக்காகக்கொண்டு இளைஞர், யுவதிகளுக்கான இப்போட்டி நடத்தப்படுகின்றது. இப்போட்டியின் மூலம் தெரிவாகும் வீர வீராங்கனைகளுக்கு தேசிய மற்றும் சர்வதேச தரங்களுக்கான சிறப்பான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

யாழ் அரச அதிபர் செ.பத்மநாதன பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக வடக்கு-கிழக்கு மாகாண கல்வி, கலாசார விளையாட்டுத்துறைச்செயலர் எஸ். தியாகலிங்கம், உதவிப் பணிப்பாளர் டபிள்யூ.கே.விமல்ராஜன் ஆகியோர் கலந்துகொள்வர்.

அத்துடன் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பிரமுகர்கள் , கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரும் பங்கேற்கின்றனர்.

நாளை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்த விளையாட்டுப் போட்டியின் ஆரம்ப நிகழ்வில் யாழ் மத்திய கல்லூரி, ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆகியவற்றின் இசைக்குழுவினரின் அணிவகுப்பு இடம்பெறவுள்ளது.

நாளையும் நாளை மறுதினமும் விளையாட்டுப்போட்டியை காணவரும பொது மக்களுக்குத் தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளன என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ஒ)


**முக்கிய அறிவித்தல்**

A/L 2005 பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குரிய

**இரசாயனவியல் கருத்தரங்கு**

By: அன்பழகன் B.Sc.
இவ்வாரம் ஆரம்பம்.

**NEW SCIENCE CENTRE**
யாழ்நகர். (C35943)(40)



இன்று மாலை ஆரம்பமாகின்றது!

**திருமறைக் கலாமன்றம்**
நடத்தும்

**இசைநாடக விழா**

02, 03, 04 ஜூலை 2004

*கருத்தரங்குகள்*

காலம்: ஜூலை 03, 04 - 2004 (சனி, ஞாயிறு)
இடம்: மறைக்கல்வி நடுநிலைய மண்டபம்
நேரம்: மு.ப.9.30 - 1.00 மணி, பி.ப 2.30 - 5.00

இசை நாடகம் தொடர்பாக பல்வேறு தலைப்புகளில் கருத்துரைகள் துறைசார் புலமையாளர்களால் வழங்கப்படும்.

*இசை நாடக அளிக்கைகள்*

காலம்: ஜூலை 02, 03, 04 - 2004 (வெள்ளி, சனி, ஞாயிறு)
இடம்: திருமறைக் கலாமன்ற அரங்கு
நேரம்: மாலை 7.00 மணி

யாழ்.குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களிலுமுள்ள சிறந்த இசை நாடகங்கள் அந்தந்தப் பிரதேசக் கலைஞர்களால் மேடையேற்றப்படும்.

02.07.2004 வெள்ளி
★ ஸ்ரீ வள்ளி ★ சத்தியவான் சாவித்திரி

03.07.2004 சனி
★ பக்தநந்தனார் ★ பூதத்தம்பி

04.07.2004 ஞாயிறு
அரிச்சந்திரா - அயோத்தியாகாண்டம், காசி காண்டம், மயானகாண்டம்

கலை ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021-222 2393
திருமறைக் கலாமன்றம். (C-35939)(40)


## கருணாவோடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிரந்தரத் தீர்வை எட்டுவதிலும், யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதிலும் அரசுக்கு உள்ள பற்றுறுதியை ஜனாதிபதி மீள உறுதிப்படுத்தினார்.

ஜூன் 12ஆம் திகதி தாம் அறிவித்த சமாதானக் கூட்டமைப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக விளக்கமளித்த ஜனாதிபதி, அதன் மூலம் அதிக உள்ளடங்கலான - வெளிப்படையான - சமாதான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படலாம் என்றும் குறிப்பிட்டார்.

இருதரப்பினரதும் பரஸ்பர விருப்புக்கு அமைய சமாதானப் பேச்சுக்கள் தாமதமின்றி ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

இரு தரப்பையும் நேரடிப்பேச்சுக்கும் கொண்டுவரும் முயற்சியாக தீர்க்கப்படாமல் இருக்கும் விடயங்கள் தொடர்பாக இரு தரப்புடனும் தொடர்ந்து கலந்துரையாடும் நடவடிக்கைக்கான பொறுப்பை நோர்வே பிரதிநிதிகள் ஏற்றுக்கொண்டனர்.

வடக்கு-கிழக்கின் மனிதாபிமான அபிவிருத்தித் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் தற்போதைய அபிவிருத்தித் திட்டங்களைத் தொடரவும், புதிய திட்டங்களை ஆரம்பிக்கவும் அரசு ஆவலாக இருப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

சொல்ஹெய்முடன் இந்தச் சந்திப்பில் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும், பிரதிநிதிகள் குழுவின் உதவியாளராக சொல்பிரட்லின் அம்மையாரும் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதியோடு கலந்துரையாடலில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், சமாதானச் செயலகச செயலாளர் நாயகம் ஜயந்த தனபால, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் எச்.எம்.ஜி.எஸ்.பலிககார ஆகியோர் கலந்துகொண்டனர்.

- இவ்வாறு ஜனாதிபதி செயலக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-க)


**கணக்கீடு**

A/L 2005 பிரிவு I
**கம்பனி** ஆரம்பம் சனி 5.00 p.m.
A/L 2005 பிரிவு I
**ஒற்றைப்பதிவு**
ஆரம்பம் சனி 6.30 a.m.
A/L 2005 பிரிவு II
**சொத்துவிற்பனை**
ஆரம்பம் திங்கள 4.30 p.m.

**ஆசிரியர் S.தவா**
B.Com (Hons) (Acc.Spl.)
**NEW SCIENCE COLLEGE JAFFNA** (33606)(40)


# மரண அறிவித்தல்கள்

## ஐயாக்குட்டி சபாரத்தினம் (ஆச்சாரியார்)

இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாக்குட்டி சபாரத்தினம் அவர்கள் (01-07-2004) அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாக்குட்டி - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் பூபதியம்மாவின் அன்புச் சகோதரரும் அமரர் பொன்னுச்சாமி, அமரர் அப்பாத்துரை, அமரர் செல்வரத்தினம், அமரர் நேசம்மா, அமரர் நாகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் நவரத்தினராசா, பத்மாவதி, சிறிஸ்கந்தராசா, நிர்மலாவதி, சற்குணராசா, இரத்தினராசா, அனுசியாவதி ஆகியோரின் அன்புத் தந்தையும் கணேசபிள்ளை, மங்களேஸ்வரி, ரகுராதா, தர்மராசா, பத்மாவதி, ராஜேஸ்வரி, மேகலாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02-07-2004) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியை வல்லை இந்து மயானத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*செல்வம் மில் வீதி,*
*உடுப்பிட்டி.* (சி-35970)(32-13-16)

தகவல்:
இரத்தினராசா(மகன்)
0212263568

## சோமலிங்கம் கணேசலிங்கம்

(பிரதம லிகிதர், கட்டடத் திணைக்களம்)

குப்பிளான் வடக்கைச் சேர்ந்த சோமலிங்கம் கணேசலிங்கம் அவர்கள் நேற்று (01-07-2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குப்பிளான் வடக்கு,*
*ஏழாலை.* (33716)(32-13-16)

தகவல்:
சோ.பரமநாதன் (சகோதரன்)
கிராம அலுவலர் J/210)

## திருமதி இராசமணி விசாகலட்சுமி



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இராசமணி விசாகலட்சுமி அவர்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பத்திரிகாசிரியர் கந்தையா - சின்னம்மா தம்பதியினரின் அருமை மகளும காலஞ்சென்ற இராமு இராசமணியின் அன்பான துணைவியும் காலஞ்சென்ற நாகராசா, தியாகராசா, ஆகியோரின் அன்பான சகோதரியும் விஜயகுமாரி (விஜயன் ரெக்ஸ் உரிமையாளர்), விஜயகுணபாலசிங்கம் (பஷன் சில்க் உரிமையாளர்), ரவீந்திரகுமார், முரளீதரன், திருமதி ஐஸ்வரியா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நாகேஸ்வரன், சத்தியவரதன் (பிரான்ஸ்), இரஞ்சன் ஆகியோரின் அன்பான மாமியாரும் காலஞ்சென்றவர்களான நாகேந்திரம், நல்லையா மற்றும் கண்மணி ஆகியோரின் பிரியமான மைத்துனியும் நாகரத்தினேஸ்வரி (பிரதேச செயலகம் உடுவில்) தங்கரத்தினேஸ்வரி (பிரதேசசபை சுன்னாகம்) செல்வரத்தினேஸ்வரி, புனிதரத்தினேஸ்வரி (பிரதேச செயலகம் கிளிநொச்சி), ஞானரத்தினேஸ்வரி, காலஞ்சென்ற அன்னரத்தினேஸ்வரி, நந்தினி, காலஞ்சென்ற குமுதினி, யோகரத்தினேஸ்வரி, பஞ்சரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்பான சிறியதாயாரும் சிவபாதம் (வித்தியா ரெக்ஸ்), அருளானந்தம் (சுவிஸ்), வரதராஜா, தர்மகுலசிங்கம் (முருகன் ரெக்ஸ்), ரூபவரன் (பிரதேச செயலகம் சாவகச்சேரி) ஆகியோரின் அன்பான மாமியாரும் ஐங்கரன் (கொழும்பு), செந்தூரன் (கொழும்பு), துவாரகன், பார்த்தீபன், மேனகா, சலூசியா, கோபி, யசோ, ஜீவா ஆகியோரின் இனிய பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03-07-2004) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*பஸ்நிலையம் அருகில்,*
*டாக்டர் சுப்பிரமணியம் வீதி,*
*சுன்னாகம்.* (33713)(32-13-16)

தகவல்:
பிள்ளைகளும்
மருமக்களும்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.07.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.